இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 144 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 18 – புதன்கிழமை 03 ஜனவரி 2024 – சென்னை 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 144 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 18 - Wednesday 03 January 2024 - Chennai 12+8 Pages ₹ 5.00

## மாநில உரிமைகளை நிலைநாட்ட முயற்சிப்பது

# அரசியல் முழக்கம் அல்ல!

## திருச்சியில் பிரதமர் மோடி முன்னிலையில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!

**திருச்சி, ஜன. 3 -**

**“மாநிலத்திற்காக கோரிக்கை வைப்பதும் மாநில உரிமைகளை நிலைநாட்டுவதும் அங்கு வாழும் மக்களின் கோரிக்கைகள் தானே தவிர, அவை ‘அரசியல் முழக்கங்கள்’ அல்ல” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் பிரதமர் மோடி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற பன்னாட்டு விமான நிலையத்தின் புதிய முனையக் கட்டடத் திறப்பு விழாவில் உரையாற்றும் போது விளக்கமாகக் கூறினார்.**



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (2.1.2024) திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் நடைபெற்ற அரசு விழாவில், திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த முனையம் உள்ளிட்ட பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, புதிய இரயில் திட்டங்களை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, ஒன்றிய சிவில் விமானத்துறை மற்றும் எஃகுத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, ஒன்றிய மீன்வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் வளத்துறை, தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் எல். முருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சு. திருநாவுக்கரசர் உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.1.2024) திருச்சிராப்பள்ளி சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்ற புதிய ஒருங்கிணைந்த முனைய கட்டட திறப்பு விழா உள்ளிட்ட பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா மற்றும் புதிய திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு :-

தொட்ட துறை அனைத்திலும் சிகரத்தைத் தொட்ட மாநிலமான தமிழ்நாடு இந்தியத் திருநாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது.

அப்படிப்பட்ட நம்முடைய தமிழ்நாட்டின் இதயப்பகுதியாக இருக்கும் திருச்சிராப்பள்ளியின் “பன்னாட்டு விமான நிலையத்தில், ஆயிரத்து 112 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய முனையத்தை” பிரதமர் அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்திருக்கிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் என்கிற வகையில், தமிழ்நாட்டு மக்கள் சார்பாக அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்தத் துறையின் அமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தமிழ்நாட்டின் 2வது பெரிய பன்னாட்டு விமான நிலையம்!

திருச்சிராப்பள்ளி பன்னாட்டு விமான நிலையம் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய பன்னாட்டு விமான நிலையம். இதை மேலும் தமிழ்நாடு அரசு 318 கோடியே 85 லட்சம் ரூபாய் செலவில், 294.57 ஏக்கர் நில எடுப்பு செய்து இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும், திருச்சி உட்பட சென்னை, கோயம்புத்தூர், மதுரை, வேலூர், தூத்துக்குடி விமான நிலையங்களை விரிவாக்கம் மற்றும் நவீனமயப்படுத்த 3 ஆயிரத்து 118 கோடி ரூபாய் செலவில், 2,302.44 ஏக்கர் அரசு மற்றும் பட்டா நிலங்களை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த விரிவாக்கப் பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும்.

தென் தமிழ்நாட்டில் இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்கு இந்தியாவின் பல்வேறு பகுதியிலிருந்தும் மக்கள் ஆன்மீகப் பயணமாக வருகிறார்கள். பல நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்கிறார்கள். அவர்கள் எளிதாக வந்து செல்வதற்கு ஏதுவாக, மதுரை விமான நிலையத்தை பன்னாட்டு விமான நிலையமாக அறிவிக்க வேண்டும் என்று நாங்கள் ஏற்கனவே வைத்த கோரிக்கையை பிரதமர் அவர்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டுகிறேன்.

### முன்னுரிமை அடிப்படையில் நேரடி விமான சேவை!

மலேசியா மற்றும் ஜப்பான் நாடுகளோடு தமிழ்நாடு பண்பாட்டு மற்றும் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு, சென்னை பினாங்கு, சென்னை டோக்கியோ இடையே நேரடி விமான சேவையை முன்னுரிமை அடிப்படையில் தொடங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்டப் பணிகளுக்குப் ‘பங்குப் பகிர்வு மாதிரி‘ அடிப்படையில் ஒன்றிய அரசின் பங்களிப்பை விரைந்து வழங்க பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரை,

❖ தமிழ்நாட்டில் இப்போது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளை விரைவுபடுத்த வேண்டும்.

❖ சமீப காலமாக, இருவழிச் சாலையாக மேம்படுத்தப்படுகிற நெடுஞ்சாலைகளுக்கும் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும்.

அடுத்து, திருச்சி மாவட்டத்தின் MSME நிறுவனங்கள்தான் ‘பெல்‘ பொதுத்துறை நிறுவனத்துக்குத் தேவையான உதிரி பாகங்களை வழங்கிக் கொண்டு வந்தார்கள்.

தற்போது பெல் நிறுவனத்திடம் இருந்து இவர்களுக்கு கேட்பாணை (Procurement Order) மிகவும் குறைந்துவிட்டது. இதனால் இந்தப் பகுதியில் செயல்பட்டு வரும் MSME நிறுவனங்கள் மிகவும் பாதிப்படைந்து இருக்கிறார்கள். எனவே, பெல் (BHEL) நிறுவனம் மீண்டும் அதிகப்படியான கேட்பாணைகளை இவர்களுக்கு வழங்க ஆவன செய்யப்பட இந்திய பிரதமர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

### “கடுமையான இயற்கைப் பேரிடர்” என அறிவிப்பீர்!

பிரதமர் அவர்கள் அறிந்த ஒன்றுதான்! கடந்த மாதம் சென்னை மற்றும் தென் மாவட்டங்களில், கடுமையான மழைப்பொழிவைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, அந்த மாவட்டங்களில் பொது உட்கட்டமைப்புகள் பெருத்த சேதமடைந்திருக்கிறது. மக்களின் வாழ்வாதாரமும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவற்றை “கடுமையான இயற்கைப் பேரிடர்கள்” என்று அறிவித்து, தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழ்நாட்டுக்கு உரிய நிவாரண நிதியை வழங்க தமிழ்நாட்டு மக்கள் சார்பாக நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து கோரிக்கையாக வைக்கிறோமே என்று எண்ண வேண்டாம்! பரந்து விரிந்த இந்தியப் பெருநாட்டில் கோடிக்கணக்கான மக்களுக்கு நெருக்கமாக இருந்து, கல்வி, மருத்துவம் அவசியத் தேவைகள், உதவிகள் ஆகியவற்றைச் செய்து தர வேண்டிய முக்கியக் கடமை மாநில அரசுகளுக்குத்தான் இருக்கிறது. மாநிலத்திற்காக கோரிக்கை வைப்பதும் மாநில உரிமைகளை நிலைநாட்டுவதும் அங்கு வாழும் மக்களின் கோரிக்கைகள்தானே தவிர, அவை, ‘அரசியல் முழக்கங்கள்‘ அல்ல.

அந்த வகையில், தமிழ்நாடு அரசின் கோரிக்கைகளை பிரதமர் அவர்கள் நிச்சயமாக நிறைவேற்றித் தருவார் என நான் நம்புகிறேன். I conclude my speech by thanking our Hon’ble Prime Minister, for gracing this occasion and inaugurating various schemes for Tamil Nadu and laying foundation for new schemes.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### தொடர்ந்து கோரிக்கை வைக்கிறோம் என்று எண்ண வேண்டாம்!

**தொடர்ந்து கோரிக்கையாக வைக்கிறோமே என்று எண்ண வேண்டாம்! பரந்து விரிந்த இந்தியப் பெருநாட்டில் கோடிக்கணக்கான மக்களுக்கு நெருக்கமாக இருந்து, கல்வி மருத்துவம் அவசியத் தேவைகள் உதவிகள் ஆகியவற்றை செய்து தர வேண்டிய முக்கியக் கடமை மாநில அரசுகளுக்குத்தான் இருக்கிறது. மாநிலத்திற்காக கோரிக்கை வைப்பதும் மாநில உரிமைகளை நிலைநாட்டுவதும் அங்கு வாழும் மக்களின் கோரிகைகள்தானே தவிர, அவை, ‘அரசியல் முழக்கங்கள்‘ அல்ல.**

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 03-01-2024

# தேர்தல் ஆணையம் நியாயமாகச் செயல்படுமா?

தன்னிச்சையாக இயங்க வேண்டிய அனைத்து அமைப்பு களையும் தன்வசப்படுத்தும் வகையில் சட்டம் கொண்டு வருவதுதான் பா.ஜ.க.வின் பாணியாகும். அதுதான் தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டத்திலும் நடந்திருக்கிறது.

**சுதந்திரமாக செயல்படவேண்டிய தேர்தல் ஆணையம் பற்றி உச்சநீதி மன்றத் தீர்ப்பையும் மீறி, தன் வசதிக்கேற்ப சட்ட திருத்தம் கொண்டு வந்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தேர்தல் ஆணையம் என்பது ஜனநாயகத்தின் முகமாக இருக்க வேண்டியது ஆகும். அந்த தேர்தல் ஆணையத்தை தனது வசதிக்கு ஏற்ப வளைத்து விட்டது பா.ஜ.க. அரசு.**

“பிரதமர் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவரால் தேர்தல் ஆணையக் குழு உறுப்பினர்களை நியமிக்கும் தற்போதைய அமைப்பு மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை” என்று 2012 ஆம் ஆண்டு ஜூன் 2 ஆம் தேதி அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதியவர் அப்போதைய பா.ஜ.க. தலைவர் அத்வானி. அதைத் தான் இன்று சட்டமாகவே செய்து விட்டது பா.ஜ.க.

பஞ்சாப் மாநில அதிகாரியான அருண் கோயல் என்பவர் 2022 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் நாள் திடீரென பதவி விலகினார். மறுநாளே இவர் தேர்தல் ஆணை யராக நியமிக்கப்பட்டார். அதாவது தேர்தல் ஆணைய ராக இவரை நியமிப்பதற்காகவே பதவி விலக வைத்துள்ளார்கள். அருண் கோயல் நியமனத்துக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் பல்வேறு தரப்பினரும் வழக்கு தாக்கல் செய்தார்கள். இது போன்ற முக்கியமான பணியிடத்துக்கான தேர்வை ‘கொலிஜியம்’ போன்ற அமைப்பு தான் நடத்த வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். தலைமைத் தேர்தல் ஆணையர், பிற தேர்தல் ஆணையர்களின் நியமனமானது சுதந்திரமாக நடைபெற வேண்டும் என்பதே உச்சநீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கின் கோரிக்கை ஆகும். இந்த வழக்கில் அரசியல் சாசன அமர்வு தனது வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியது.

இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர், மற்றும் தேர்தல் ஆணையர்களை எப்படித் தேர்வு செய்ய வேண்டும் என்பதை கடந்த மார்ச் மாதம் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. நீதியரசர் கே.எம்.ஜோசப் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு இத்தீர்ப்பை அளித்தது.

*** பிரதமர்**

*** மக்களவை எதிர்க்கட்சித் தலைவர்**

*** உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகிய மூவர் அடங்கிய குழு தான் தலைமைத் தேர்தல் ஆணையரையும், தேர்தல் ஆணையர்களையும் தேர்வு செய்ய வேண்டும் என்று தீர்ப்பு அளித்தது.**

“பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழுவின் அறிவுறுத்தலின்படி, தேர்தல் ஆணையர்கள், தலைமைத் தேர்தல் ஆணையர் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்ய வேண்டும். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் இல்லை என்றால், தனிப் பெரும்பான்மையுள்ள எதிர்க்கட்சியின் தலைவர், இந்த குழுவில் இடம்பெற வேண்டும். தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பாக நாடாளு மன்றத்தில் சட்டம் இயற்றும் வரை இந்த நடைமுறை தொடரும்.

ஜனநாயகத்தில் தேர்தல் எந்தவித சந்தேகமும் இன்றி நியாயமாக நடைபெற வேண்டும். புனிதத்தன்மை காக்கப்படுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும். இல்லையென்றால் மோசமான விளைவுகள் ஏற்படும்.

அரசியல் சாசன அமைப்புக்கு உட்பட்டு தேர்தல் ஆணையம் சட்டப்படி செயல்பட வேண்டும். நியாயமற்ற முறையில் செயல்பட முடியாது. நியாயமான தேர்தலை தேர்தல் ஆணையத்தால் உறுதி செய்ய முடியவில்லை என்றால், ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்கும் சட்ட விதிகளின் கீழ் அளிக்கப்பட்ட உத்தரவாதங்கள் சிதைந்து போகும். அரசியல் சாசனத்தின் 324வது பிரிவில், தேர்தல் ஆணைய உறுப்பினர்கள் நியமனத்துக்கு சட்டம் இயற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எந்தச் சட்டத்தையும் நாடாளு மன்றம் நிறைவேற்ற வில்லை” என்று அரசியல் சாசன அமர்வு கூறியது.

உச்சநீதிமன்றத்தின் மீது மரியாதை இல்லாத பா.ஜ.க. அரசு என்ன செய்தது என்றால், கடந்த 21 ஆம் தேதி அன்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி விட்டார்கள். அதன்படி உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி என்பதற்குப் பதிலாக ஒன்றிய அமைச்சர் ஒருவர் என்று மாற்றி விட்டார்கள். இதன் படி பார்த்தால் தேர்தல் ஆணையரைத் தேர்வு செய்யும் மூவர் குழுவில் இருவர், ஆளும்கட்சியைச் சேர்ந்தவராக இருக்குமாறு பார்த்துக் கொண்டார்கள். அதாவது தங்கள் வசதிக்கு ஏற்ப சட்டத்தை வளைத்துக் கொண்டார்கள்.

தேர்தல் ஆணையர்கள் நியமன மசோதா 2023 என்பது மக்களவையில் கடந்த ஆகஸ்ட் மாதம் தாக்கல் செய்யப் பட்டது. டிசம்பர் 12 அன்று மாநிலங்களவையில் நிறை வேறியது. மக்களவையில் கடந்த 21 ஆம் தேதி வைக்கப்பட்டது. மக்களவை உறுப்பினர்களில் 100க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களை இடை நீக்கம் செய்து விட்டதால் அது பா.ஜ.க.வுக்கு வசதியாகப் போய்விட்டது. எந்த விவாதமும் நடத்தப்பட வில்லை. சட்ட அமைச்சர் அர்ஜுன் மேவால் பேசினார். மசோதா நிறை வேறிவிட்டது.

**உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு அமைச்சரை நியமிப்பதன் மூலமாக தேர்தல் ஆணையத்தை தனது கைப்பாவையாக ஆக்க முயற்சித்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி.**

இது ஜனநாயகத்துக்கு ஆபத்தான முடிவு என்பதை உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ரோஹிண்டன் பாலி நாரிமன் சொல்லி இருக்கிறார். **“இந்த முறையில்தான் தேர்தல் ஆணையர்களை நியமிக்கப் போகிறார்கள் என்றால், அந்தத் திருத்தச் சட்டத்தால் தேர்தல் ஆணையத்தின் சுதந்திரம் கடுமையாகப் பாதிக்கப்படும். அதை நீக்கவில்லை என்றால் அது ஜனநாயகத்துக்கு மிகப்பெரிய ஆபத்தாக மாறும். எனவே உச்சநீதிமன்றம் இந்தச் சட்டத்திருத்தத்தை தன்னிச்சையானது என்று அறிவித்து ரத்து செய்யவேண்டும்,”** என்று மும்பையில் நடைபெற்ற ஒரு விழாவில் பேசி இருக்கிறார். இதனை உச்சநீதிமன்றம் செய்ய வேண்டும்.

●●





கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (02–01–2024), ஆழ்வார்பேட்டையில் உள்ள தனது இல்லத்தில், முத்தமிழறிஞர் பதிப்பகத்தைத் தொடங்கி வைத்து, முரசொலி பாசறைப் பக்கத்தில் கட்டுரைகளாக வெளியாகி, பதிப்பகத்தின் சார்பில் தொகுக்கப்பட்டு உருவான 9 நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் கழக இளைஞரணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், புத்தக ஆசிரியர்கள், பதிப்பக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## செஞ்சியில்

# அ.தி.மு.க. - பா.ம.க. கட்சிகளில் இருந்து விலகி கழகத்தில் இணைந்தனர்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில்!

*செஞ்சி, ஜன. 3 -* விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் மாநில பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை ஏற்பாட்டில் தாதாபுரம் பா.ம.க. நிர்வாகி பாலாஜி தலைமையில் அதிமுக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகி கோவிந்தராஜ், பா.ம.க. நிர்வாகிகள் நித்திஷ், பிரகாஷ், கார்த்திக், திருநாவுக்கரசு, மோகன், புஷ்பராஜ், சீனிவாசன் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்டோரும், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஏற்பாட்டில் செஞ்சி பேரூராட்சி சக்கராபுரம் 13வது வார்டு அ.தி.மு.க. பொருளாளர் வேல்முருகன்ஆகியோர் அக்கட்சியிலிருந்து விலகி செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்துத் தெரிவித்தார்.இந்நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், மாநில பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை, ஒலக்கூர், மேற்கு ஒன்றிய பொருளாளர் திருஞான சம்பந்தம், கிளைச் செயலாளர் சிவப்பிரகாசம் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டின் போது பொறுப்பிலிருந்த மாவட்ட ஆட்சியர் உள்ளிட்டோர் மீது துறை ரீதியான நடவடிக்கை!

# நீதிபதி அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையத்தின் அறிக்கை!

## அரசு சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் – தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜன. 3 -

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு தொடர்பாக நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையிலான விசாரணை ஆணையம் அளித்த அறிக்கையின்மீது, தமிழ்நாடு அரசு சார்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விபரத்தினை அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பான செய்தி வெளியீடு வருமாறு :-

தூத்துக்குடியில் கடந்த ஆட்சிக் காலத்தில், 22-5-2018 அன்று ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை நிரந்தரமாக மூடக்கோரி நடைபெற்ற போராட்டத்தின் போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஏற்பட்ட உயிரிழப்புகள், காயங்கள் குறித்தும், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் விசாரிப்பதற்காக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்களின் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டு, அந்த ஆணையம் 18-5-2022 அன்று அளித்த அறிக்கையின்மீது, அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், நீதியரசர் அருணா ஜெகதீசன் தலைமையிலான விசாரணை ஆணையம் அளித்த அறிக்கையின்மீது, தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தவறான தகவல்களை சில ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசால் நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் ஆணையம் அளித்த அறிக்கையின்மீது, பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

**•தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் உயிரிழந்த 13 நபர்களின் குடும்பத்தினர்களுக்கு ஏற்கெனவே வழங்கிய நிதியோடு, கூடுதலாக, தலா ரூபாய் 5 இலட்சம் வீதம், 65 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது.**

**• காவல் துறையினரால் போராட்டத்தில் ஈடுபட்டு, கைது செய்யப்பட்ட 93 நபர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் நிவாரணத் தொகையாக ரூபாய் 93 இலட்சம் வழங்கப்பட்டது. மேற்காணும் நிகழ்வு தொடர்பாக போராட்டக்காரர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் மத்திய புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்ட வழக்குகளைத் தவிர 38 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.**

**• இப்போராட்டத்தில் கலந்து கொண்ட பரத்ராஜ் என்பவர் பாளையங்கோட்டை மத்திய சிறையில் இறந்ததால், அவரின் தாயாருக்கு நிவாரணத் தொகையாக ரூபாய் 5 இலட்சம் வழங்கப்பட்டது.**

**• போராட்டத்தில் ஈடுபட்டு, கைது செய்யப்பட்டு, அவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, பின்னர் திரும்பப்பெறப்பட்ட 38 வழக்குகளில், சம்பந்தப்பட்ட நபர்களின் உயர்கல்விக்காகவும், வேலைவாய்ப்பிற்காகவும் "தடையில்லாச் சான்றிதழ்" வழங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.**

**• ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் 17 காவல் துறை அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சைலேஷ் குமார் யாதவ், கபில்குமார், சி.சரத்கர், ஆகிய இந்திய காவல் பணி அலுவலர்கள், மகேந்திரன், லிங்கத்திருமாறன் ஆகிய காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் இரண்டு ஆய்வாளர்கள் மீது துறைரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

**• இதுதவிர, ஒரு காவல்துறை ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் தலைமைக் காவலர் ஒருவர் மீது குற்ற வழக்கு பதிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பெருந்தண்டனை குற்றப்பிரிவின் கீழ், ஒரு உதவி ஆய்வாளர், இரு இரண்டாம் நிலைக் காவலர், ஒரு முதல் நிலைக் காவலர் மற்றும் ஒரு காவலர் ஆகியோர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூன்று முதல் நிலைக் காவலர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.**

**• நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையத்தின் இறுதி அறிக்கையின் பரிந்துரையின் அடிப்படையில், அப்போதைய தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் 3 வருவாய்த் துறை அலுவலர்கள் மீதும் துறைரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

இவ்வாறு அரசின் செய்தி வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

NDA (என்.டி.ஏ.) என்றால்

# 'NATIONAL DISASTROUS ALLIANCE' - 'தேசிய பேரிடர் கூட்டணி'

## சன் செய்திகள் 'கேள்விக் களம்' விவாத நிகழ்ச்சியில் மார்க்சிஸ்ட் கம்யூ. மூத்த தலைவர் கே.கனகராஜ் விளக்கம்!



'சன் செய்திகள்' தொலைக்காட்சியில், நேற்று (2.1.2024) இரவு நடைபெற்ற 'கேள்விக் களம்' விவாத நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயற்குழு உறுப்பினர் கே.கனகராஜ் பேசுகையில், 'NDA' குறித்து அளித்த விளக்கம் வருமாறு:-

பொதுவாக ஒரு பெயரை உச்சரிப்பதில் பிரச்சினை இருந்தால், அந்தப் பெயருக்குரியவர், என்னிடம், "இந்தப் பெயரை எப்படி உச்சரிப்பது?" என்று கேட்பார்கள்.

தங்களை 'இந்தியா கூட்டணி' என்று அழைக்க வேண்டும் என்று அந்தக் கூட்டணி யில் உள்ள அனைத்துக் கட்சிகளும் முடிவு செய்தன. இந்தியா முழுவதும் உள்ள ஊடகங்களும் அப்படித்தான் பயன்படுத்துகிறார்கள். ஆனால், பா.ஜ.க.வும், சங் பரிவார் அமைப்புகளும் 'இந்தியா' என்று சொன்னால், அது ஏதோ தங்களுக்கு ஒவ்வாத வார்த்தை போல, அந்த வார்த்தையை உச்சரித்தாலே நாக்கு சுட்டுவிடும் என்பதுபோல, அதை 'இண்டி கூட்டணி' என்று சொல்வதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.




இப்படி வேறொரு பெயரைச் சொல்லி அழைப்பது என்று ஆரம்பித்தால், தங்கள் கூட்டணிக்கு பா.ஜ.க., 'என்.டி.ஏ.' என்று வைத்திருக்கிறது. அவர்களாவது - பா..ஜ.க. அணியினராவது கிண்டலுக்காக 'இண்டி கூட்டணி' என்று சொல்கிறார்கள்.

**ஆனால், நாம் சொல்வது என்று ஆரம்பித்தால், அதனுடைய காரணப் பெயராக, ' 'NATIONAL DISASTROUS ALLIANCE' என்று சொல்ல முடியும்.**

### 'தேசிய பேரிடர் கூட்டணி'

இந்தியாவுக்கே அவர்கள் வந்த பிறகு அவர்களாலும் பேரிடர்கள் வந்திருக்கிறது. அவர்களே ஒரு 'பேரிடராகவும்' இருக்கிறார்கள்.

அவர்கள் பதவியில் இருந்த காலத்தில் தான் 'கொரோனா' பேரிடர் வந்தது. அதேபோல இன்னொரு பக்கம் பார்த்தீர்களென்றால், இன்றைக்கு இந்த நிமிடம் வரை இந்தியாவில் உள்ள மக்களை ஒற்றுமை இல்லாமல் ஒடுக்குவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, அந்தக் கட்சியைப் பொறுத்த அளவில் அதனுடைய தலைவர்களைப் பொறுத்த அளவில் – மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பது, அதேபோல சிறுபான்மையினரை ஒடுக்குவது, நாடாளுமன்றத்தை முடக்குவது என்று அடிப்படையான விழுமியங்கள் அனைத்துக்குமான பேரிடராக மாறியிருக்கிறார்கள்.

**எனவே, காரணப் பெயர் ஒன்று வைக்க வேண்டுமென்றால், 'NDA' (என்.டி.ஏ.) என்பதற்கு ' NATIONAL DISASTROUS ALLIANCE' 'தேசிய பேரிடர் கூட்டணி' என்று தான் அதற்குப் பெயர் வைக்க வேண்டும்.**

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

சேலத்தில் விவசாயிகளின் நிலம் – நடிகை கௌதமியின் சொத்துக்கள் அபகரிப்பு!

# தமிழ்நாடு முழுவதும் பா.ஜ.க.வினர் அராஜகம் தொடர்கிறது!

## ஒன்றிய அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அட்டகாசம்! மார்க்சிஸ்ட் செயலாளர் பாலகிருஷ்ணன் கண்டனம்!

சென்னை, ஜன. 3 -

பட்டியல் வகுப்பைச் சேர்ந்த ஏழை விவசாயிகளின் நிலத்தை மோசடி செய்து அபகரித்த பா.ஜ.க. சேலம் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் குணசேகரனை கைது செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், குணசேகரனின் மோசடிக்குத் துணை போகும் வகையில், அதிகார துஷ்பிரயோகம் செய்து விவசாயிகளை மிரட்டியும், சாதியைக் குறிப்பிட்டும் சம்மன் அனுப்பிய அமலாக்கத் துறை அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:-

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, ராமநாயக்கன் பாளையம் கிராமம், தேவேந்திர குல வேளாளர் சமூகத்தைச் சார்ந்த முதியவர்கள் மற்றும் ஏழை விவசாயிகள் கிருஷ்ணன், கண்ணையன் ஆகியோர் ஆவர். இவர்களின் 6.50 ஏக்கர் நிலத்தை, பா.ஜ.க.வின் சேலம் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் குணசேகரன், தனது பெயருக்கு போலியாக பத்திரப் பதிவு செய்து கொண்டுள்ளார்.

**பாதிக்கப்பட்ட பட்டியலின விவசாயிகள்!**

கிருஷ்ணன், கண்ணையன் ஆகியோரின் நிலத்தை, குணசேகரன் அடி மாட்டு விலைக்கு வாங்க முற்பட்ட போது அவர்கள் விற்பதற்கு முன்வராததால் காவல்துறை, வருவாய்த் துறை, அமலாக்கத்துறை அதிகாரிகளின் துணையோடு பல்வேறு



முறைகேடுகளில் ஈடுபட்டு தனது பெயருக்குபோலிப் பத்திரம் பதிவு செய்துள்ளார்.

விவசாயிகளையும் தங்களின் சொந்த நிலத்தில் விவசாயம் செய்ய முடியாத வகையில் அடியாட்களை வைத்து கொலைமிரட்டல் விடுத்து அச்சுறுத்தியும் உள்ளார். இதுகுறித்து காவல் துறையில் புகார் செய்யப்பட்டும், தன் மீது நடவடிக்கை எடுக்காத வகையில், தனது பா.ஜ.க. அரசியல் பின்னணி மற்றும் கிரிமினல் குற்றப் பின்னணியை சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

கிருஷ்ணன், கண்ணையன் ஆகியோரின் நிலத்தை அபகரித்தது போல் இப்பகுதியில் ஏராளமான விவசாயிகளின் நிலங்களையும் அபகரித்துள்ளது சம்பந்தமாக பல்வேறு வழக்குகள் இவர் மீது நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

குற்றப் பின்னணி கொண்ட பா.ஜ.க. நிர்வாகிகள் தமிழகத்தில் கொலை, கொள்ளை, வழிப்பறி, போதைப் பொருட்கள் கடத்தல், நில அபகரிப்பு என பல்வேறு குற்றப் பின்னணிகளை கொண்டவர்கள் பா.ஜ.க. நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

சமீபத்தில் கூட தனது சொந்தக் கட்சிக்காரரான நடிகை கௌதமியின் 25 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்தை பா.ஜ.க.வினரே அபகரித்தது நாடறியும்.

இதுபோன்று தமிழகம் முழுவதும் ஒன்றிய ஆட்சியதிகாரத்தை பயன் படுத்தி பா.ஜ.க.வினர் சட்டத்திற்கு புறம்பான வேலைகளில் ஈடுபட்டு வருவது கடும் கண்டனத்திற்குரியது.

எனவே, ஏழை விவசாயிகளின் நிலங்களை அபகரித்துள்ள சேலம் பா.ஜ.க. மாவட்ட பொறுப்பாளர் குணசேகரனை நில அபகரிப்புச் சட்டம், வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்டு கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவுசெய்து உடன் கைது செய்திடவும், இவருக்கு உடந்தையாக இருக்கும் காவல்துறை, வருவாய்த் துறை, அமலாக்கத்துறை அதிகாரிகளை கைது செய்து உரிய முறையில் விசாரணை மேற்கொண்டு இவரால் அபகரிக்கப்பட்ட நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு திரும்ப வழங்கிடவும், கொலை மிரட்டலுக்கு ஆளாகியுள்ள விவசாயிகளுக்கு உரிய போலீஸ் பாதுகாப்பு வழங்கிட வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழக அரசையும், சேலம் மாவட்ட நிர்வாகத்தையும் வலியுறுத்துகிறது.

சாதியைக் குறிப்பிட்டு நோட்டீஸ் அனுப்பிய அமலாக்கத்துறை

பா.ஜ.க.வால் அமலாக்கத் துறை எப்படி தவறாக பயன்படுத்தப் படுகிறது என்பதற்கு இந்தச் சம்பவம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அதிலும் சாதியை குறிப்பிட்டு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியிருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

எனவே, பட்டியல் சாதியை சார்ந்த விவசாயிகளின் நிலத்தை திட்டமிட்டு அபகரிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டுள்ள குணசேகரனுக்கு ஆதரவாக செயல்பட்டு, அதிகார துஷ்பிர யோகத்தில் ஈடுபட்டுள்ள அமலாக்கத் துறை அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. இவ்வாறு கே. பாலகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (8)

## இன்று (ஜனவரி 3) வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, 2023 ஜூன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று "முரசொலி சிறப்பிதழ்" வெளிவரும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, இன்று (ஜனவரி 3 - புதன்கிழமை) முரசொலி சிறப்பிதழ், "கல்வியாளர்கள் பார்வையில் கலைஞர்" என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

தூத்துக்குடியில் பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள்

# வீடுகள் - மீன்பிடி படகுகள் சேதமடைந்தோர் நிவாரணத்திற்கான விண்ணப்பங்கள் !

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை

தூத்துக்குடி, ஜன.3-

பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகள், மீன்பிடி படகுகள், கால்நடைகளுக்கு நிவாரணம் மற்றும் சிறு வணிகங்கள், குறு சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடனுதவி, பழுதடைந்த வாகனங்களுக்கு காப்பீடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி பாதிக்கப்பட்டவர்கள் உரிய நிவாரணம் பெற விண்ணப்பிக்குமாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

டிசம்பர் - 17 மற்றும் 18 தேதிகளில் பெய்த கன மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தூத்துக்குடி மாவட்டத்தில் பெரும்பான்மையான பகுதிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.12.2023 அன்று வெள்ளம் பாதித்த பகுதிகளை நேரில் பார்வையிட்டதோடு மட்டுமல்லாது நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் செய்திட உத்தரவிட்டார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரண உதவிகள் வழங்கிடும் வித்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு முக்கியமான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள்.

அதன்படி தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளத்தால் முழுவதுமாக சேதமடைந்த வீடுகளை புதிதாக கட்டுவதற்கு ரூ.4 லட்சமும், பகுதி சேதமடைந்த வீடுகளை சீரமைத்திட ரூ.2 லட்சம் வரையிலும் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

பெருமழை மற்றும் வெள்ளத்தால் இறந்த கால்நடைகளான பசு மற்றும் எருமைக்கும் ரூ.37,500/ ம், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு ஒன்றிற்கு ரூ.4,000/ ம், கோழி ஒன்றிற்கு ரூ.100/ம் வழங்கப்படும். மேலும் புதிய கால்நடைகளை வாங்கிட தலா ரூ.1.50 லட்சம் புதிய கடன் வழங்கப்படும். இதற்கு சம்பந்தபட்ட தாலூரகா அலுவலகத்தை அனுகி பாதிப்படைந்தவர்கள் உரிய நிவாரணத்திற்கு மனு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அதுபோல பெருமழை, வெள்ளத்தால் மானாவாரி மற்றும் நஞ்செய் நிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கும் இழப்பீட்டு நிவாரணம் வழங்கப்படும். பாதிக்கப்பட்ட விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் அந்தந்த பகுதி கிராம நிர்வாக அலுவலகத்தை அனுகிட கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மழை, வெள்ளத்தின் காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான இயந்திரங்களும் மீன்பிடி படகுகளும், சேதமடைந்துள்ளன. சேதமடைந்த படகுகளின் உரிமையாளர்கள் தகுந்த ஆவணங்களுடன் மீன்பிடித்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உரிய நிவாரணத் தொகை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க வும்.

பெருமழை, வெள்ளத்தால் தூத்துக்குடி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட உப்பளத் தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை ரூ.3000/ம் அறிவிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்த உப்பளத் தொழிலாளர்கள் வாரியத்தை அனுகி நிவாரணத்தொகை பெற்றுக் கொள்ளலாம்.

அதுபோல வெள்ளத்தின் காரணமாக பல்வேறு மாணவ - மாணவியரின் பள்ளி மற்றும் கல்லூரி சான்றிதழ்கள், பாடபுத்தகங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு இருக்கலாம். சான்றிதழ்களை இழ்நத மாணவர்கள் அவர்கள் படித்த பள்ளியில் விண்ணப்பம் எழுதிக் கொடுத்தால் மாற்று சான்றிதழ் வழங்கப்படும். பாடபுத்தகங்களை இழந்த, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பதிய பாடபுத்தகங்கள் அவர்கள் பயிலும் பள்ளியில் வழங்கப்படும்.

வருவாய்த்துறை மற்றும் இதர அரசு துறையால் வழங்கப்படும் சான்றிதழ்கள் / ஆவணங்கள் / குடும்பஅட்டை / வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை போன்ற அரசு ஆவணங்களை இழந்தவர்கள் தங்கள் பகுதிக்கு உட்பட்ட தாலுகா அலுவலகங்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் கலந்து பயன்பெறவும்.

மேலும் வெள்ளத்தால் பாதிப்படைந்த சிறு, குறு மற்றும் நடுத்தர உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில் நிறுவனங்கள், தங்கள் வணிகத்தை மீண்டும் புதுப்பித்துத் தேவையான மூலதனச் செலவு மற்றும் நடைமுறை மூலதனம் போன்ற அத்தியாவசிய செலவுகளுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில் "வெள்ள நிவாரண கடனுதவி திட்டம்" எனும் சிறப்பு திட்டத்தின் மூலம் பாதிப்படைந்த தொழில் நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக ரூ.3.00 லட்சம் வரை ஆண்டுக்கு 6% சிறப்பு சலுகை வட்டி விகித்தில் கடனுதவி வழங்கிடவும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

மொத்தத்தில் வெள்ளத்தால் பாதிக்கபட்ட மாவட்டங்களில் உள்ள பொது மக்கள் எந்த நிலையிலும் பாதிக்கப்பட கூடாது என்ற ஒரே நோக்கத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.1000/ கோடி அளவிற்கு திட்டங்களை அறிவித்துள்ளார். பாதிப்படைந்த பொதுமக்கள் அனைவரும் உரிய நிவாரணம் கிடைத்திட சம்பந்தப்பட்ட துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (02.01.2024) சென்னை கீழ்ப்பாக்கம், ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, சென்னையில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்பட்ட இலக்கிய மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற 109 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன். கூடுதல் ஆணையர் அ.சங்கர், திருமதி சி.ஹரிப்ரியா. ஏகாம்பரநாதர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் எம்.வி.எம்.வேல்மோகன், இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி ஜ.முல்லை, திருமதி கோ.விஜயா, திருமதி க.வெ.கவெனிதா, துணை ஆணையர் ஆர்.ஹரிஹரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, பல்லாவரம் கண்டோன்மெண்டில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 1500 குடும்பங்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நிவாரண பொருட்களை வழங்கினார். அருகில் நகரச் செயலாளர் டி.பாபு, வட்டச் செயலாளர் என்.வி. விஜய் சங்கர் ஆகியோர் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு

# மக்கள் வறுமையிலிருந்து மீள பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன.3-

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மக்கள் வறுமையிலிருந்து மீள பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது என "தினகரன்" நாளேடு தனது தலையங்கத்தில் "மக்களுக்கான அரசு" என தலைப்பிட்டு பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

2023ஆம் ஆண்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, கலைஞர் மகளிர் உரிமை தொகை, அவள் திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி, புதுமை பெண் திட்டம் விரிவாக்கம், மழை, வெள்ளம் நிவாரணம் என மக்களுக்கான அரசாக செயல்பட்டது. இது பெண்கள், விவசாயிகள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் சேது சமுத்திர திட்டத்தை ஒன்றிய அரசு உடனடியாக நிறைவேற்ற தீர்மானம் நிறைவேற்றியது. தமிழ்நாடு அரசு பணிகளில் சேர தமிழில் தேர்ச்சி கட்டாயம். பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டம் தொடங்கப்பட்டது. 17 ஆண்டுகளுக்கு பிறகு பழநி மலை கோயில் குடமுழுக்கு, அரசு விரைவு பேருந்துகளின் இருப்பிடத்தை அறிய சென்னை பஸ் செயலி அறிமுகமானது. மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித் தொகை வழங்கும் புதுமை பெண் திட்டம் விரிவாக்கமானது. தமிழ்நாடு ரியல் எஸ்டேட் தொலை நோக்கு திட்டம், 433 அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது.

மின் வாகன கொள்கையை அறிவித்து ரூ.50,000 கோடி முதலீட்டை ஈர்த்து 1.5 லட்சம் வேலை வாய்ப்பை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் அமலானது. மகளிர் காவல் துறை சார்பில் 'அவள்' திட்டம் தொடங்கப்பட்டு பெண் காவலர்களுக்கு விடுப்பு வழங்குவது உள்ளிட்ட 9 திட்டங்களை அறிவித்தார்.

சென்னை அடுத்த ஒரகடத்தில் நிறுவியுள்ள 4.0 தொழில்நுட்ப மையங்கள், 1,000 படுக்கைகளுடன் உலகத்தரத்தில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை, கடலூர் பண்ருட்டியில் முந்திரி பதப்படுத்தும் குறுந்தொழில் குழுமம் தொடங்கப்பட்டது.

மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு ரூ.70,000 கடனுதவி திட்டம்,500 நகர்ப்புற சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் திறக்கப்பட்டது. மதுரையில் பிரமாண்டமான கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பும், முதியோர் உதவித் தொகை ரூ.1,200 உயர்த்தியும் வழங்கப்படுகிறது.



தினகரன்

மக்களுக்கான அரசு

2023

சென்னையில் ரூ.4,276 கோடியில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அடிக்கல், தமிழ்நாடு முழுவதும் 31,000 அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டமும், பிரபல பின்னணி பாடகர் மறைந்த டி.எம்.சௌந்தரராஜனுக்கு மதுரையில் சிலை திறப்பும் வரவேற்பை பெற்றது. நடப்பாண்டில் 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் அமலானது.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் ‘கலைஞர் மகளிர் உரிமை தொகை’ திட்டத்தின் கீழ் ஒரு கோடியே 15 லட்சம் பேருக்கு மேல் பயன்பெறுகிறார்கள். உடல் உறுப்பு தானம் செய்வோரின் இறுதி சடங்குகள் அரசு மரியாதை உத்தரவு பாராட்டை பெற்றது. சென்னையில் ஏ.பி.ஜெ.அப்துல் கலாமின் திருவுருவச்சிலை, சாலைகள் குறித்து புகார் சொல்ல 'நம்ம சாலை' என்ற புதிய செயலி, உங்கள் ஊரில்' திட்டம் அமலானது. ஓ.எம்.ஆர். சாலையில் 'U' வடிவ மேம்பாலம், முன்னாள் பிரதமர் வி.பி. சிங் சிலையும் திறக்கப்பட்டது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், நெல்லை, தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு ரூ.6 ஆயிரம் நிவாரண நிதியும், தென்காசி, கன்னியாகுமரிக்கு ரூ.1,000 நிவாரணம் வழங்கப்பட்டது. கிளாம்பாக்கத்தில் இந்தியாவிலேயே மிகப்பெரிய 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்' திறக்கப்பட்டது.

இதுபோன்ற மக்களுக்கான திட்டங்கள் மூலம் மக்களை வறுமையில் இருந்து மீளவும், பெண்களுக்கான பொருளாதாரத்தை உயர்த்தவும் அமைந்தது என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2024 - நாடாளுமன்றத் தேர்தலில்

# பா.ஜனதா அரசை மக்கள் நிச்சயம் தூக்கி எறிவார்கள்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நம்பிக்கை

சென்னை,ஜன.3-

வரும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜனதா அரசை மக்கள் நிச்சயம் தூக்கி எறிவார்கள் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஆங்கில புத்தாண்டை யொட்டி நேற்று முன்தினம் (1.1.2024) பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பா.ஜ.க., திட்டத்தின்படி நாட்டின் பா.ஜனதா அரசு 2014 ஆட்சிக்கு வந்தது முதல் ஜனநாயகத்துக்கு விரோதமாக செயல்பட்டு வருகிறது. ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கலாசாரம் என்கிறது அரசமைப்பு சட்டத்தின் விழுமியங்களை சிதைத்து வரும் பா.ஜனதா அரசு ஒட்டு மொத்த அதிகாரத்தையும் டில்லியில் குவித்து சர்வாதிகார ஆட்சி நடத்தி வருகிறது.

காஷ்மீரில் 370ஆவது பிரிவை அடியோடு அகற்றி நம்பிக்கை மோசடியை செய்துள்ளது. ஒவ்வொரு தேசிய இனங்களின் தனித் தனி இன, மொழி, பண்பாட்டு அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. மாநிலங்களின் எதிர் காலத்தில் ஜனநாயகத்தை காக்க முடியுமா? மதச்சார்பற்ற தன்மையை பாதுகாக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கையோடு இந்தியா கூட் டணி உருவாகி உள்ளது. இந்த கூட்டணி சுமுகமாக செயல்பட்டு வருகிறது.

**மக்கள் தூக்கி எறிவார்கள்!**

2024 நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜனதா அரசை நிச்சயம் மக்கள் தூக்கி எறிவார்கள் - இந்தியா கூட் டணி அரசு நாடு முழுவதும் மக்கள் சக்தியை திரட்டி பா.ஜனதாவை வீழ்த்தும் என்ற நம்பிக்கை உள்ளது.



மு.க.ஸ்டாலின் வெள்ள நிவாரண பணிகளுக்காக ரூ.21.ஆயிரத்து 600 கோடி தேவை என்று தெரிவித்தார். ஆனால், ஒன்றிய அரசு ரூ.450 கோடியை ஒதுக்கி உள்ளது. இது போதுமானது அல்ல. மாநில அரசு கேட்டுள்ள நிதியை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

டில்லியில் பிரதமரை சந்தித்த முதலமைச்சர் உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களுக்கு வரிப் பகிர்வு நிதியை அள்ளி வழங்கி உள்ள ஒன்றிய அரசு தமிழ் நாட்டுக்கு கிள்ளித் தருகிறது.

பா.ஜனதா ஆளும் உத்தரப்பிர தேசத்துக்கு ரூ.13 அயிரம் கோடியை வழங்கி உள்ள ஒன்றிய அரசு, தமிழ் நாட்டிற்கு வெறும் 2 ஆயிரத்து 900 கோடி ரூபாயை வழங்கி உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது துணை பொதுச்செயலாளர் மல்லை சத்தியா. பொருளாளர் செந்தில திபன் உடன் இருந்தனர்.

### கலாநிதி வீராசாமி எம்.பி. ஏற்பாட்டில் – இன்று

# வட சென்னை தொகுதியில் 30 ஆயிரம் பேருக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொடி அசைத்து துவக்கி வைக்கிறார்!

சென்னை, ஜன.3

மிக்ஜாம் புயலில் பாதிக்கப்பட்ட வடசென்னை நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட ராயபுரம், ஆர்.கே.நகர், பெரம்பூர், திரு.வி.க.நகர், கொளத்தூர், திருவெற்றியூர் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த 30 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி ஏற்பாட்டில் இன்று (3.1.2024 - புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் சென்னை - கிரீன்வேஸ் சாலையில் உள்ள, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ‘குறிஞ்சி’ இல்லத்தில் நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நிவாரணப் பொருட்கள் கொண்ட வாகனங்களையும் நிகழ்வையும் கொடி அசைத்து துவக்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சென்னை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தா.இளைய அருணா, சென்னை வடகிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. பிரியா ராஜன்,

சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா. மூர்த்தி, ஜே.ஜே. எபினேசர், ஆர். டி.சேகர், கே.பி.சங்கர், தாயகம் கவி, பகுதி செயலாளர்கள் வ.பெ. சுரேஷ், செந்தில்குமார், ஐ.சி.எப். முரளிதரன், ஏ.நாகராஜ், க.முருகன், ஜெயராமன், இரா. லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், தி.மு. தனியரசு, வை.மா. அருள்தாஸ், ஏ.வி. ஆறுமுகம், செ. தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, மண்டல குழு தலைவர்கள் நேதாஜி கணேசன், திருமதி. சரிதா மகேஷ் குமார், 51வது வட்டக் கழகச் செயலாளர் பி. கண்ணன் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

### சென்னை - துறைமுகம் தொகுதி - கல்யாணபுரம் திட்டப் பகுதியில் புதிய

# அடுக்குமாடி குடியிருப்புகள் விரைவில் திறப்பு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜன.3-

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய கல்யாணபுரம் திட்டப்பகுதியில் புதியதாக கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளை விரைவில் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்படும் என ஆய்வு செய்த இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (2.1.2024) கல்யாணபுரம் திட்டப்பகுதியில் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் புதிய அடுக்குமாடி குடியிருப்பின் கட்டுமான பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசுகையில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கல்யாணபுரம் திட்டப்பகுதியில் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் ரூ. 44.91 கோடி மதிப்பீட்டில் 288 புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது. ஏற்கனவே இங்கு வசித்த 254 குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்து மீதமுள்ள குடியிருப்புகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பயனாளிகளை தேர்ந்தெடுத்து ஒதுக்கீடு செய்யப்படும்.

இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றும் 412 ச.அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது.

இதில் காற்றோட்ட வசதியுடன் கூடிய வசிப்பறை, சமையலறை, குளியலறை கழிவறை மின்தூக்கி மற்றும் மின் ஆக்கி ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. மேலும் பூங்கா மற்றும் உடற்பயிற்சி கூடம் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளது எனவும் விரைவில் பயனாளிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். சு.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, வாரிய மேற்பார்வை பொறியாளர் (பொ) இளம்பரிதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. மூத்த முன்னோடி

# இரா.நாகரத்தினம் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, ஜன.3-

சேலம் மத்திய மாவட்ட, தி.மு.க. முன்னோடி இரா. நாகரத்தினம் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

சேலம் மத்திய மாவட்டம் காடையாம்பட்டி தி.மு.க

மூத்த முன்னோடி, முன்னாள் ஓமலூர் வட்ட தி.மு.க. செயலாளர், மொழிப்போர்த் தியாகியும். பூசாரிப் பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் காடையாம்பட்டி ஒன்றிய தி. மு. க. பொறுப்பாளராகவும் இருந்த ‘வட்டம்’ என்று அழைக்கப்படும் இரா. நாகரத்தினம் (வயது 89) இயற்கை எய்தினார் என்பதை அறிந்து துயரம் அடைந்தேன். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும். கழக தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### பெருங்குடி - குப்பை கொட்டும் வளாகத்தில் சுற்றுச்சூழல் பூங்கா!

# பொதுமக்கள் பங்களிப்புக் கூட்டம்!

## மேயர் பிரியா - ஆணையர் முன்னிலையில் நடைபெறுகிறது!

சென்னை,ஜன.03-

பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் சுற்றுச்சூழல் பூங்கா (Eco Park) அமைப்பது தொடர்பான பொதுமக்கள் பங்களிப்புக் கூட்டம் 08.01.2024 (திங்கட்கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சமுதாய நலக் கூடம், ஐ.ஐ.டி. காலனி, பள்ளிக்கரணை, சென்னை600 100 என்ற இடத்தில் மேயர், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் இந்த நல் வாய்ப்பினைப் பயன்படுத்தி கொண்டு 08.01.2024 (திங்கட்கிழமை) அன்று நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.





திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆவடி கோவில்பாதகை ட்ரினிட்டி அவென்யுவில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று மாநகர பேருந்து நிறுத்தம் வசதியை முன்னாள் அமைச்சர் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ ஏற்படுத்தி கொடுத்து கொடி அசைத்து துவக்கி வைத்தார். உடன் ஆவடி மாநகர மேயர் ஜி.உதயகுமார், போக்குவரத்து இணை மேலாண் ஆணையர் குணசேகரன், பொது மேலாளர்கள் சுந்தரபாண்டியன், சுப்பிரமணி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு ஆவடி மாநகர செயலாளர் சண் பிரகாஷ், போக்குவரத்து மேலாளர் கோபால், பகுதி செயலாளர் பொன் விஜயன், நாராயண பிரசாத் மாமன்ற உறுப்பினர் செண்பகவள்ளி ரவிச்சந்திரன், வட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி உள்ளனர்.



திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38–வது பட்டமளிப்பு விழாவில், நேற்று (2.1.2024) முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கினார். இவ்விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ம. செல்வம், பதிவாளர் முனைவர் லெ.கணேசன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சிராப்பள்ளியில், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38வது பட்டமளிப்பு விழாவில், நேற்று (2.1.2024) பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி ஆகியோருடன் பட்டம் பெற்ற மாணவ, மாணவியர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ம. செல்வம் ஆகியோர் உள்ளனர்.

### திராவிட மாடல் அரசு உயர்கல்விக்கான அனைத்து உட்கட்டமைப்புகளையும் உருவாக்கியதின் விளைவாக

# தமிழ்நாடு உயர்கல்வியின் பூங்கா!

## திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**திருச்சி, ஜன. 3-**

**“திராவிட மாடல் அரசு உயர்கல்விக்கான அனைத்து உட்கட்டமைப்புகளையும் உருவாக்கியதின் விளைவாக தமிழ்நாடு உயர்கல்வியின் பூங்காவாகத் திகழ்கிறது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38-வது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும்போது பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38வது பட்டமளிப்பு விழாவில், நேற்று (2.1.2024) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ம. செல்வம், பதிவாளர் முனைவர் லெ.கணேசன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (02.01.2024) திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38 வது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

Before I start my speech, let me first extend my New Year wishes to our Honourable Prime Minister and welcome him on behalf of the people of Tamil Nadu.

பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிக்கு முதன்மை விருந்தினராக வருகை தந்து சிறப்பித்திருக்கக்கூடிய பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களே,

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களே, அமைச்சர் பெருமக்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளே, மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே, பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் செல்வம் அவர்களே, பேராசிரியர் பெருமக்களே, என் அன்பிற்கினிய மாணவக் கண்மணிகளே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே, அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்.

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு” என்று திராவிடக் கொள்கையை தமிழ் நிலத்தில் முழங்கிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பெயரால் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியப் பிரதமர் அவர்கள் இந்த பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட விதை!**

இந்தியாவிலேயே உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலம், தமிழ்நாடு! ‘கல்வியில் சிறந்த’ என்ற எந்தப் பட்டியல் எடுத்தாலும், அதில் தமிழ்நாட்டு கல்வி நிறுவனங்கள்தான் அதிகமாக இடம் பெற்றிருக்கும். 100 ஆண்டுகளுக்கு முன்பு நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் கல்விக்காகப் போடப்பட்ட விதைதான், இன்றைக்கு வளர்ந்து, கல்வியில் சிறந்த மாநிலமாக, நாம் உயர்ந்து நிற்கிறோம்.

நமது திராவிட மாடல் அரசு, அனைவருக்கும் கல்வி அனைவருக்கும் கல்லூரிக் கல்வி அனைவருக்கும் ஆராய்ச்சிக் கல்வி என்ற இலக்கோடுதான் சமூக நீதிப் புரட்சியை கல்வித் துறையில் நடத்தி வருகிறது.

“இன்னார்தான் படிக்க வேண்டும்” என்று இருந்த நிலையை மாற்றி, அனைவருக்கும் அனைத்துவிதமான வாய்ப்புகளையும் உருவாக்கித் தருகிறோம்.

❖ தமிழ்நாட்டு மாணவர்களை படிப்பிலும், வாழ்க்கையிலும் வெற்றியாளராக்குவதற்கு “நான் முதல்வன்” திட்டம் உருவாக்கப்பட்டு உள்ளது.

❖ உயர்கல்வி மாணவர்களின் சிந்தனைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், “CM Research Grant Scheme”,

❖ உயர்கல்வி மாணவர்களின் சிந்தனைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், “CM Fellowship Program” ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

❖ பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு “மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்” எனும் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளியில் படித்து, கல்லூரிக்குள் நுழையும் 3 லட்சத்து 45 ஆயிரத்து 362 மாணவியருக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப் படுகிறது.

❖ தமிழ்நாடு மாணவர்கள் போட்டித் தேர்வுகள், ஆட்சிப் பணித் தேர்வுகள், திறன்சார்ந்த தேர்வுகளுக்கு தயார் செய்யும்பொருட்டு மதுரையில் “கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம்” அமைக்கப்பட்டிருக்கிறது.

> **இன்றைக்கு பாரதிதாசன் பல்கலைக்கழகம், உலகப் பல்கலைக்கழகங்கள் தரவரிசைப் பட்டியலிலும், தேசிய தரவரிசைப் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளது. அப்படிப்பட்ட சிறப்புமிக்க இந்தப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் சிலை, பொறியியல் மற்றும் தொழில்நுட்ப துறைகள், தமிழ் மையம் ஆகிய அனைத்தையும் தொடங்கியது நம்முடைய திராவிட மாடல் அரசுதான் என்பதை பெருமையோடு குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.**

❖ எனது கனவுத் திட்டமான, ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் இரண்டு ஆண்டுகளில் 29 லட்சம் மாணவர்களுக்கும், 32 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப் பட்டுள்ளது.

**ஒரு வருடத்தில் 1.40 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு!**

ஒரு வருடத்தில், ஒரு லட்சத்து 40 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளது. அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி, அனைத்து தரப்பு மாணவர்களும் தொழிற்கல்வி கற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2021-22, 2022-23, 2023-24 ஆகிய மூன்று கல்வி ஆண்டுகளில் இந்த இட ஒதுக்கீட்டின் மூலம் 28 ஆயிரத்து 749 மாணவர்கள் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம், மீன்வளம் மற்றும் கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளில் சேர்ந்துள்ளார்கள். இவர்களின் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், பேருந்துக் கட்டணம் அனைத்தையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொண்டு 482 கோடி ரூபாய் செலவிடுகிறது.

இது எல்லாமே தமிழ்நாட்டின் மாணவர் சக்தியை அடுத்தகட்டத்துக்கு வளர்த்தெடுக்கும் முயற்சிகள்! இன்றைக்கு பாரதிதாசன் பல்கலைக்கழகம், உலகப் பல்கலைக்கழகங்கள் தரவரிசைப் பட்டியலிலும், தேசிய தரவரிசைப் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளது. அப்படிப்பட்ட சிறப்புமிக்க இந்தப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் சிலை, பொறியியல் மற்றும் தொழில்நுட்ப துறைகள், தமிழ் மையம் ஆகிய அனைத்தையும் தொடங்கியது நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசுதான் என்பதை பெருமையோடு குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி உயர்கல்விக்கான அனைத்து உட்கட்டமைப்புகளையும் உருவாக்கிய தன் விளைவாகத்தான்,

**தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு முதலிடம்!**

❖ பாலிடெக்னிக் மாணவர் சேர்க்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்.

❖ பி.எச்.டி மாணவர் சேர்க்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்.

❖ இந்தியாவின் தலைசிறந்த 100 கலை அறிவியல் கல்லூரிகளாக தேசிய தர வரிசையில் உள்ள 35 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

❖ இந்தியாவின் தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களில் 22 பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

❖ இந்தியாவின் தலைசிறந்த 100 பொறியியல் கல்லூரிகளில் 15 பொறியியல் கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

இவ்வாறு பல்வேறு பிரிவுகளில் 146 கல்வி நிறுவனங்கள் அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

❖ 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு தேசிய தரவரிசைப் பட்டியலில் முதல் இடம் பெற்றுள்ளது.

❖ 2023 ஆகஸ்ட் நிலவரப்படி, தேசிய தரமதிப்பீட்டு கவுன்சிலின் தர வரிசை பட்டியலில் தமிழ்நாட்டில் இருந்து 398 கல்லூரிகளும், 38 பல்கலைக் கழகங்களும் இடம் பெற்றுள்ளன.

❖ தமிழ்நாட்டில் மொத்தம் 1,623 கலை அறிவியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் 242 மகளிர் கல்லூரிகள்.

**உயர்கல்வி பூங்காவாக தமிழ்நாட்டு பல்கலைக் கழகங்கள்!**

இப்படி “உயர்கல்வியின் பூங்காவாக” தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களும் தமிழ்நாடும் திகழ்கிறது.

கல்வியில் சமூகநீதியையும் புதுமைகளையும் புகுத்துவதே பல்கலைக் கழகங்களின் நோக்கமாக இருக்க வேண்டும். அத்தகைய பல்கலைக்கழகங்களுக்கே சிறப்பான எதிர்காலம் உண்டு.

இன்று பட்டம் பெறும் மாணவ கண்மணிகளே! நீங்கள்தான் நாட்டின் எதிர்காலம்! சிறந்த அதிகாரிகளாக தொழில் முனைவோர்களாக நீங்கள் தேர்ந்த துறையில் சிறந்து விளங்குங்கள்!

சமுதாயமும், பெற்றோரும், உங்களுக்கு தந்த கல்வியை பயன்படுத்தி உங்கள் பெற்றோருக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் உங்கள் சேவையை திரும்ப வழங்கிடுங்கள்! முக்கியமாக, சிறந்த மனிதர்களாக விளங்குங்கள்! உங்கள் வெற்றிக்கு உறுதுணையாகும் பட்டங்களை வழங்கிய பல்கலைக் கழகத்துக்கும், நீங்கள் பட்டம் பெற காரணமான ஆசிரியர்களுக்கும் பெருமை தேடி தாருங்கள்!

இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் புகழ் சேருங்கள்! இதுதான் உங்கள் முதலமைச்சராகவும், தந்தையின் உணர்வோடும் நான் வைக்கும் வேண்டுகோள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.


டாக்டர்.கலாநிதி வீராசாமி
வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
மாநில அயலக அணி தலைவர்
அவர்களின் ஏற்பாட்டில்
மிக்ஜாம் புயலால்
பாதிக்கப்பட்ட 30,000
பொதுமக்களுக்கு
மாபெரும் நிவாரண
பொருட்கள்
வழங்கும் நிகழ்ச்சி
நாள் : 03.01.2024 புதன்கிழமை
நேரம் : காலை 9.00 மணியளவில்
இடம் : குறிஞ்சி இல்லம், ஆர்.எ.புரம்
கிரீன் வேஸ் சாலை, சென்னை – 28
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின் அவர்களே
வருக...வருக...
மாண்புமிகு. பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
(ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தலைவர்
மாண்புமிகு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி M.C.A., MLA
பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் – திருச்சி தெற்கு மாவட்ட செயலாளர்
தா.இளைய அருணா B.E., MC
சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர்
மாதவரம் எஸ்.சுதர்சனம்
சென்னை வடக்கு கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
ஆர்.டி.சேகர்
பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர்
ஜே.ஜே.எபிநேசர்
ஆர்.கே.நகர். சட்டமன்ற உறுப்பினர்
தாயகம் கவி
திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர்
K.P.சங்கர்
திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர்
அன்னை விளம்பர பிரிண்டிங்
பிராட்வே - 98411 86198
அன்புடன் : ஐட்ரீம் இரா.மூர்த்தி M.L.A
தலைமை செயற்குழு உறுப்பினர்
செனட் உறுப்பினர் – சென்னை பல்கலைகழகம்


உடன்பிறப்புகள் கொண்டாடும்
கலைஞர்
நூற்றாண்டு விழா
கலைஞர் 100 – 77
முத்தமிழ் அறிஞர்!
நாவன்மை நாயகர்!!
நாள் : 03.01.2024 புதன்கிழமை மாலை 6.00 மணி
இடம் : மலையாளி கிளப், கிளப்ரோடு, சேத்துப்பட்டு
தலைமை V.சுதாகர்
பகுதி கழக செயலாளர்
முன்னிலை
திரு. பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு அமைச்சர் – இந்து சமய அறநிலையத்துறை
(ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்
திரு. தயாநிதிமாறன் எம்.பி
கழக உயர்நிலை செயல்த்திட்டகுழு உறுப்பினர்
சொ.வேலு எம்.சி கோ.ஏகப்பன் கூ.பீ.ஜெயின் எம்.சி
கே.எஸ்.எம்.நாதன் ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி
அ.நிர்மலாதேவி பரிதிஇளம்சுருதி எம்.சி
புகழுரைப்போர்
மேனாள்.நீதியரசர் கே.சந்துரு
திருமதி உ.வாசுகி
திரு.கம்பம் செல்வேந்திரன்
திரு.ஓ.ஏ.நாகலிங்கம்
மேயர் பிரியாராஜன் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ
நன்றியுரை
எல்.சுந்தர்ராஜன் எம்.சி 108 அ வட்ட செயலாளர்
அன்புடன் எழும்பூர் தெற்கு பகுதி
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க
Star Signs
044 - 43 55 48 47


நாள்: 03.01.2024
காலை 9.00 மணி
இடம்: குறிஞ்சி இல்லம்
கிரீன்வேஸ் ரோடு
வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
கழக அயலக அணிதலைவர்
Dr. கலாநிதிவீராசாமி MP அவர்கள் ஏற்பாட்டில்
30,000 பேருக்கு மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டபொதுமக்களுக்கு
மாபெரும் நிவாரணப் பொருட்கள் வழங்க வருகைதரும்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
மாண்புமிகு பி.கே.சேகர்பாபு அவர்களையும்
இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர்
மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களையும்
பள்ளி கல்வித் துறை அமைச்சர்
வருக! வருக! என வரவேற்கும்
தா.இளைய அருணா B.E.,
செயலாளர்-சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க
மாநகராட்சி நகரமைப்புக்குழு தலைவர்,
சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க




மாண்புமிகு தமிழ்நாடு

# முதலமைச்சர்

அவர்களின் ஆணைக்கிணங்க

## செஞ்சி பேருந்து நிலையம்
## திறப்பு விழா

திறந்து வைப்பவர் :

மாண்புமிகு **கே.என்.நேரு** அவர்கள்

நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
முதன்மைச் செயலாளர்

முன்னிலை :

மாண்புமிகு **செஞ்சி K.S.மஸ்தான்** அவர்கள்

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்

அவர்களை வருக ! வருக !! என அன்புடன் வரவேற்கிறோம்.

**R.விஜயகுமார்** B.A.,B.L.,
செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்
செஞ்சி ஒன்றிய செயலாளர் (கி) , தலைமை செயற்குழு உறுப்பினர்

**L.P.நெடுஞ்செழியன்** B.A.,B.L.,
மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் (கி)
தலைமை செயற்குழு உறுப்பினர்

**KSM.மொக்தியார்-அலி** B.Tech IT.LLB.,
தலைவர் – செஞ்சி பேரூராட்சி

**M.விஜயராகவன்**
செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர்

**B.K.பச்சையப்பன்** B.Sc.,
செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர்
ஒன்றிய கவுன்சிலர்

**M.P.நாராயணமூர்த்தி** MBA.,
மேல்மலையனூர் மத்திய ஒன்றிய செயலாளர்

**சாந்திசுப்பிரமணியன்**
மேல்மலையனூர் மேற்கு ஒன்றிய செயலாளர்
மாவட்ட கவுன்சிலர்

**M.கார்த்திக்**
செஞ்சி பேரூர் செயலாளர்.

**A.சம்பத்**
அனந்தபுரம் பேரூர் செயலாளர்

**கண்மணி நெடுஞ்செழியன்**
மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர்

**V.முருகன்**
அனந்தபுரம் பேரூராட்சி தலைவர்

**அரங்க.ஏழுமலை**
மாவட்ட கவுன்சிலர்

**அகல்யா பார்த்திபன்**
மாவட்ட கவுன்சிலர்

**செல்வி ராமசரவணன்**
மாவட்ட கவுன்சிலர்

**V.ஜெயபாலன்**
செஞ்சி ஒன்றிய துணை பெருந்தலைவர்

**விஜயலட்சுமி முருகன்**
மேல்மலையனூர் ஒன்றிய துணை பெருந்தலைவர்

**D.A.மணிவண்ணன்** B.A.,B.L.,
தலைமை பொதுக்குழு உறுப்பினர்

**P.செல்வராஜ்** M.Com.,
தலைமை பொதுக்குழு உறுப்பினர்

**இராஜலட்சுமி செயல்மணி**
செஞ்சி பேரூராட்சி துணை தலைவர்

**அமுதா கல்யாணகுமார்**
அனந்தபுரம் பேரூராட்சி துணை தலைவர்

இங்ஙனம் : **செஞ்சி சட்டமன்ற தொகுதி தி.மு.க**
**விழுப்புரம் வடக்கு மாவட்டம்.**

JN ADS 9790242624 digital printing-Gingee



பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் 38–வது பட்டமளிப்பு விழா மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடைபெறும் அரசு விழா ஆகியவற்றில் கலந்து கொள்ள வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேற்று (2.1.2024) திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொன்னாடை அணிவித்து, வரவேற்றார். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, அமைச்சர் பெருமக்கள் உடனிருந்தனர்.



பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38–வது பட்டமளிப்பு விழா மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடைபெறும் அரசு விழா ஆகிய வற்றில் கலந்து கொள்ள வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேற்று (2.1.2024) திருச்சிராப் பள்ளி விமான நிலையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொன்னாடை அணிவித்து, “வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்” ஆங்கில பதிப்பு புத்தகம் வழங்கி வரவேற்றார். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, அமைச்சர் பெருமக்கள் உடனிருந்தனர்.

## 47வது சென்னைப் புத்தகக் காட்சி

## “கலைஞர் கருவூலம்”

### விற்பனைக் கூடத்தில்

## தலைமைக் கழக வெளியீடுகள்

**47வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2024 ஜனவரி 3 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.**

**புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 378ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்குச் சொந்தமான 16 ஏக்கர் இடத்தையும் ஒருங்கிணைத்து

# கோயம்பேடு பேருந்து நிலையத்தை மேம்படுத்த மிகப் பெரிய திட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஜன. 3 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அற நிலை யத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு நேற்று (02.01.2024) சென்னை கீழ்ப்பாக்கம், ஏகாம் பரநாதர் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் முத்தமி ழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, சென்னை யில் உள்ள இந்து சமய அறநி லையத்துறை திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்படும் சென்னை, கொளத்தூர், கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல் லூரி, கீழ்ப்பாக்கம், ஏகாம்பரநா தர் மெட்ரிக்குலேசன் மேல்நி லைப்பள்ளி மற்றும் சூளைமேடு, அஞ்சுகம் துவக் கப் பள்ளி ஆகிய பள்ளிகளின் மாணவர்களுக்கான இலக்கிய மற்றும் விளை யாட்டுப் போட்டி களில் வெற்றிபெற்ற 109 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ் களை வழங்கினார்.

இந்நிகழ்வில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர் களிடம் தெரிவித்ததாவது:-

மக்கள் மனதில் நீக்கமற நிறைந்து வாழ்ந்து கொண்டி ருக்கின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற் றாண்டு விழாவை முன்னிட்டு தமிழக அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் நூற் றாண்டு விழாவை கொண்டாடி வருகின்றோம். அந்த வகை யில் முதலமைச்சர் அவர்க ளின் வழிகாட்டுதலின்படி, சென்னையிலுள்ள திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்படும் ஏகாம் பரநாதர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, சூளை, அஞ்சுகம் தொடக்கப்பள்ளி மற்றும் கொளத்தூர், கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல் லூரி மாணவர்களுக்கிடையே பேச்சு, கட்டுரை, ஓவியப் போட் டிகளும் கவியரங்கமும், விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவ, 109 மாணவ, மாண வியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**அறம் சார்ந்த பணிகள்**

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு திருக்கோ யில்கள் சார்பில் நடத்தப்படும் பள்ளிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட ரூ.37.13 கோடி மதிப்பீட்டில் 92 பணிகளும், கல்லூரிகளுக்கு ரூ.41.53 கோடி மதிப்பீட்டில் 34 பணிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இதில் 28 பணிகள் முடிவுற்றுள்ளன. இந்து சமய அறநிலையத்துறை அறம் சார்ந்த இதுபோன்ற பணிகளில் முழுமையாக ஈடு பட்டு, ஒருபுறம் கல்விக்கு முக்கி யத்துவம் தந்தும், மறுபுறம் அன்னதானத்திற்கு முக்கியத்துவம் தந்தும் செய லாற்றி வருகிறது. திருக்கோயில்களில் செயல்ப டுத்தப்படும் அன்னதானத்தின் மூலம் ஒரு நாளைக்கு 92 ஆயி ரம் பக்தர்கள் உணவருந்துகின் றனர். இதற்காக ஆண்டொன் றுக்கு ரூ.100 கோடி செலவிடப்படுகிறது. பிரசாதம் மற்றும் அன்னதானத்தில் தரத் தினை உறுதிப்படுத்தி 523 திருக்கோயில்களுக்கு ஒன்றிய அரசின் தரச்சான்றினைப் பெற்று தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனை யத்தில் மாற்றுத்திறனாளி களுக்காக 5 மின்கல ஊர்திகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாநகர போக்குவரத் துக் கழகத்தின் 60 பேருந்துகள் ஒரே நேரத்தில் நிற்பதற்குண்டான வசதியும், அதனருகில் 2 மின்தூக்கிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நேற் றைய தினம் புத்தாண்டு விடு முறை முடிந்து பயணிகள் சென்னை திரும்புவதால் இரவு முதல் காலை வரை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலர் அவர்கள் கிளாம்பாக்கம் பேருந்து நிலை யத்திலேயே இருந்து பயணிக ளுக்கான வசதிகளை செய்து தந்துள்ளார். நேற்றைய தினம் மட்டும் சுமார் 10ஆயி ரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை பயன்படுத்தி யுள்ளனர். மாற்றுத் திறனாளிகளுக்கு கூடுதல் வசதி கள் செய்திடவும், அவர்களுக்கு உதவிட தனியாக பணியாளர் களை நியமித்திடவும் முடிவெ டுத்து செயல்படுத்தி வருகின் றோம்.

இன்றைய சூழ்நிலைக் கேற்ப சென்னையில் பெருகி வரும் போக்குவரத்து நெரிச லுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங் களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் எடுத்து வரு கிறது. கோயம்பேடு பேருந்து நிலையத்தை பொறுத்த அள வில் 30 சதவீத பேருந்துகள் அதாவது பெங்களூர் போன்ற வெளிமாநிலங்களுக்குச் செல் லுகின்ற பேருந்துகள் இன்னும் ஓராண்டு காலம் இயங்குகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதன் பின் முதலமைச்சர் அவர்க ளின் வழிகாட்டுதலோடு கோயம்பேடு பேருந்து நிலை யம், அதனையொட்டி உள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்குச் சொந்தமான சுமார் 16 ஏக்கர் இடத்தினையும் ஒருங்கிணைத்து மக்களின் பயன்பாட்டிற்கு உதவுகின்ற வகையில் ஒரு மிகப்பெரிய ஒரு திட்டத்தைக் கொண்டுவரத் திட் டமிட்டு இருக்கின்றோம். அதற் குண்டான கருத்துருக்கள் பெறப்பட்டு அடிப்படைப் பணிக ளைத் தொடங்க இருக்கின் றோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இவ்விழாவில் துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர், திருமதி சி.ஹரிப்ரியா, ஏகாம்ப ரநாதர் திருக்கோயில் அறங்கா வலர் குழுத் தலைவர் எம். வி.எம்.வேல்மோகன், இணை ஆணையர்கள் திருமதி கி. ரேணுகாதேவி, திருமதி ஜ.முல்லை, திருமதி கோ. விஜயா, திருமதி க.வெ.கவெ னிதா, துணை ஆணையர் திரு.ஆர்.ஹரிஹரன், கல்லூரி முதல்வர் முனைவர் சி.லலிதா, பள்ளி தலைமை ஆசிரியை திருமதி ஜெயந்தி வரதராஜன், துறை அலுவலர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் புயல் - பெருமழை வெள்ள பாதிப்பை - ஒன்றிய அரசு

# கடும் பேரிடராக அறிவித்து கணிசமான நிதி ஒதுக்க வேண்டும்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஜன. 3 -

தமிழ்நாட்டில் புயல் - மழை வெள்ளப் பாதிப்பு களை, ஒன்றிய அரசு கடும் பேரிடராக அறிவித்து கணிச மான நிதி ஒதுக்க வேண்டும் என்று ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத் தப்பட்டுள்ளது.

இது குறித்து 2.1.2024 தேதியில் ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறப் பட்டுள்ளதாவது:




கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத பெருமழை, தமிழ் நாட்டில் தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய தென் மாவட்டங்களில் கடந்த மாதம் 17, 18ந்தேதிகளில் பெய்திருக்கிறது. இந்த மழை வெள்ளத்தில் சிக்கி, ஏறத்தாழ 57 பேர் உயிரிழந்துள்ளனர். கால்நடை இழப்பு கணக்கில் அடங்காதது. வீடுகள், குடி சைகள், கடைகள், வணிக நிறுவனங்கள் பெரும் பாதிப் புக்கு உள்ளாகின. ஏற்க னவே, கடந்த மாதம் 4ந்தேதி ‘மிக்ஜம்’ புயல் வெள்ளத்தி னால் சென்னை, காஞ்சிபு ரம், செங்கல்பட்டு, திருவள் ளூர் ஆகிய வட மாவட்டங் கள் பலத்த சேதம் அடைந் தன. இரு இடங்களில் நடந்த மழை வெள்ள பாதிப்புகளை யும் மத்தியக் குழு பார்வை யிட்டு சென்றிருக்கிறது.

சென்னை உள்பட 4 மாவட்ட பாதிப்புகளுக்கு, தற் காலிக நிவாரணத் தொகை யாக ரூ.7,033 கோடியும், நிரந்தர நிவாரணத் தொகை யாக ரூ.12,659 கோடியும் வேண்டும் என்று முதல்அ மைச்சர் மு.க.ஸ்டாலின் ஒன் றிய அரசாங்கத்தை கோரி யுள்ளார். தூத்துக்குடி உள்ளிட்ட தென்மாவட்டங்க ளில், முதற்கட்ட சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள அவசர நிவாரண நிதியாக ரூ.2 ஆயிரம் கோடி வழங்க வற்புறுத்தியுள்ளார். ஆக, இப்போதைக்கு மொத்தம் ரூ.21,692 கோடி நிதி கோரப் பட்டுள்ளது. இதுமட்டுமல்லா மல், தமிழ் நாட்டில் மழை வெள்ள பாதிப்புகளை கடும் பேரிடராக அறிவிக்க வேண் டும் என்பதும் தமிழ்நாடு அர சின் கோரிக்கை.

ஒன்றிய அரசாங்கத்தின் சார்பில் தமிழ்நாடு அரசுக்கு ரூ.900 கோடி கொடுத்திருப்ப தாக கூறப்படுகிறது. இது ஆண்டுதோறும் அனைத்து மாநிலங்களுக்கும் மாநில பேரிடர் நிவாரண நிதியாக மழை, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பேரிடர் காலங்களில் பயன்படுத்த ஒன்றிய அரசாங்கம் வழங்கி வருகிறது. இதற்காக ஒரு தொகையை நிர்ணயித்து, 75 சதவீதத்தை ஒன்றிய அர சாங்கம் வழங்கும். மீதி 25 சதவீதத்தை மாநில அரசு ஏற் றுக்கொள்ள வேண்டும். அந்த வகையில், தமிழ்நாட் டுக்கு மாநில பேரிடர் நிதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை ரூ.1,200 கோடி. அதில் 75 சதவீதமான ரூ.900 கோடியைத்தான் ஒன்றிய அரசாங்கம் தந்திருக் கிறது.

இப்போதைய கடும் மழை வெள்ள பாதிப்பை ஒன்றிய அரசாங்கம் கடும் பேரிடராக அறிவித்து, தேசிய பேரிடர் நிதியில் இருந்து கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டும். ஏற்கனவே, 2015ம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தின் போது, தமிழ்நாடு அரசு சார் பில் ரூ.25,912 கோடியே 45 லட்சம் நிதி கோரப்பட்ட நிலை யில், ஒன்றிய அரசாங்கம் ஒதுக்கியது ரூ.1,737 கோடியே 65 லட்சம்தான். அதுபோன்று இப்போதும் குறைவான தொகையே ஒதுக்கப்பட்டால், அதை வைத்து ஒன்றுமே செய்யமு டியாது. எனவே, இந்த பேர ழிவை கடும் பேரிடராக அறிவித்து, கணிசமான தொகையை ஒன்றிய அர சாங்கம் ஒதுக்க வேண்டும் என்பதுதான் தமிழக மக்க ளின், தமிழ்நாடு அரசின் கோரிக்கையாக இருக்கிறது.

இந்தநிலையில், கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை பிரதமர் நரேந்திரமோடி, முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு டெலிபோன் செய்து, வரலாறு காணாத பெருவெள்ளம் குறித்து கேட்ட றிந்தார். அப்போது, முதல்அ மைச்சர் அவரிடம், விளக்க மாக கூறி ஒன்றிய அர சாங்கம் உடனடியாக நிதியுதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதற்கு பதில் அளித்த பிரதமர் நரேந்திரமோடி, இந்த இரட்டை பேரிடரில் இருந்து தமிழ்நாடு மீண்டெழ ஒன் றிய அரசாங்கம் உதவும் என்று உறுதியளித்தார். எனவே, கடந்த காலங்கள் போல் அல்லாமல், இந்த முறை ஒன்றிய அரசாங்கம் தாராளமாக நிதியுதவி அளிக் கும் என்ற எதிர்பார்ப்பு இருக் கிறது.

இவ்வாறு அத்தலையங் கத்தில் கூறப்பட்டுள்ளது.

திருச்சி சிவா எம்.பி. – அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைக்கின்றனர்!

# மேற்கு மண்டல வழக்கறிஞர் அணி பாசறைக் கூட்டம்!

## சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

வழக்கறிஞர் நிர்வாகிகள் பாசறைக் கூட்டக் குறித்து கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. விடுத்த அறிவிப்பு வருமாறு:

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மேற்கு மண்டல வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பயிற்சி பாசறை கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (07.01.2024) காலை 10.00 மணியளவில் தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெறுகிறது.

கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., நிதியமைச்சர் தங்கம் தென்னரசு மேற்கூறிய பயிற்சி பாசறை கூட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்ற இருக்கின்றார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக சட்டத்துறை மாநில நிர்வாகிகளும் கீழ்க்காணும் மாவட்டங்களுக்குட்பட்ட கழக வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும்.

**பங்கேற்க வேண்டிய கழக மாவட்டங்கள்:**

திருப்பூர் வடக்கு – திருப்பூர் தெற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு – கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு – தர்மபுரி மேற்கு, சேலம் கிழக்கு – சேலம் மேற்கு – சேலம் மத்திய, கோவை வடக்கு – கோவை தெற்கு – கோவை மாநகர், நாமக்கல் கிழக்கு – நாமக்கல் மேற்கு, விழுப்புரம் வடக்கு – விழுப்புரம் தெற்கு, ஈரோடு வடக்கு – ஈரோடு தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு – கள்ளக்குறிச்சி தெற்கு, நீலகிரி.

குறிப்பு : மேற்கூறிய பயிற்சி பாசறை கூட்டத்தில் வழக்கறிஞரணி நிர்வாகிகள் பங்கேற்பதை மாவட்ட அமைப்பாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**என்.ஆர். இளங்கோ எம்.பி.**
செயலாளர் – கழக சட்டத்துறை



இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (2.1.2024) துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கல்யாணபுரம் திட்டப்பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் புதியதாக கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதிமாறன், வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். சு.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, உட்பட பலர் உள்ளனர்.

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி அவைத்தலைவர்

# என்.சுப்பையா தாயார் மு.சிட்டாள் மறைவு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - கழகத்தினர் அஞ்சலி செலுத்துகின்றனர்!

*சென்னை, ஜன.3*



*சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி அவைத் தலைவர் அசோக்நகர் என். சுப்பையா தாயாரும், எஸ். பாரதிராஜா பாட்டியுமான மு.சிட்டாள் நேற்று இரவு மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*அன்னாரின் உடலுக்கு இன்று அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் மற்றும் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்து கிறார்கள்.*

*அன்னாரின் உடல் சிவகங்கை மாவட்டம் தெற்கு இளையான்குடியில் உள்ள இடுகாட்டில் இன்று பகல் நல்லடக்கம் செய்யப்படு கிறது என சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு துணைச் செயலாளர் எஸ்.கே.நசீர் தெரிவித்துள்ளார்.*

அமைச்சர் கே.என்.நேரு – கனிமொழி கருணாநிதி எம்.பி. துவக்கி வைக்கிறார்கள்!

# திருச்சி மண்டல வழக்கறிஞர் அணி பாசறைக் கூட்டம்!

## சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

வழக்கறிஞர் நிர்வாகிகள் பாசறைக் கூட்டக் குறித்து கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. விடுத்த அறிவிப்பு வருமாறு:

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க டெல்டா மண்டலம் மற்றும் புதுச்சேரி காரைக்கால் மாநில வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பயிற்சி பாசறை கூட்டம் வரும் சனிக்கிழமை (06.01.2024) மாலை 04.30 மணியளவில் தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெறுகிறது.

அமைச்சர், கழக முதன்மை செயலாளர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோர் பயிற்சி பாசறை கூட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்ற இருக்கின்றார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக சட்டத்துறை மாநில நிர்வாகிகளும் கீழ்க்காணும் மாவட்டங்களுக்குட்பட்ட கழக வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும்.

**பங்கேற்க வேண்டிய கழக மாவட்டங்கள்:**

திருச்சி வடக்கு – திருச்சி தெற்கு – திருச்சி மத்திய, கரூர் – அரியலூர் –பெரம்பலூர், தஞ்சை வடக்கு – தஞ்சை மத்திய – தஞ்சை தெற்கு, நாகை – திருவாரூர்– மயிலாடுதுறை, கடலூர் கிழக்கு – கடலூர் மேற்கு மாவட்டங்கள், திருவண்ணாமலை வடக்கு – திருவண்ணாமலை தெற்கு, வேலூர் – திருப்பத்தூர் – இராணிப்பேட்டை, புதுச்சேரி காரைக்கால் மாநிலங்கள்.

குறிப்பு : மேற்கூறிய பயிற்சி பாசறை கூட்டத்தில் வழக்கறிஞரணி நிர்வாகிகள் பங்கேற்பதை மாவட்ட அமைப்பாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**என்.ஆர். இளங்கோ எம்.பி.**
செயலாளர் – கழக சட்டத்துறை

## பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில்

# 1400 மாணவர்கள் தங்கும் வசதியுடன் தொடங்கி வைக்கப்பட்ட 2 விடுதிக் கட்டிடங்கள்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேற்று (02.01.2024) சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு பல்மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.25.31 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு பல் மருத்துவமனை, உணவு அருந்தும் இடம், கலையரங்கம். மாணவர்கள் பொது அறை, சலவையகம், பாதுகாவலர் அறை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆகிய வசதிகள் தொடங்கி வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, தமிழ்நாடு அரசு பல்மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பிரேம்குமார், துணை முதல்வர் மரு.சபரிகிரிநாதன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.

சென்னை, ஜன.3-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்துசமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (02.01.2024) சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு பல்மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.25.31 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு பல் மருத்துவமனை, உணவு அருந்தும் இடம், கலையரங்கம், மாணவர்கள் பொது அறை, சலவையகம், பாதுகாவலர் அறை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆகிய வசதிகள் தொடங்கி வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

**பல் மருத்துவக்கல்லூரி**

தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மிகவும் பழமையான மருத்துவக் கட்டமைப்புகளில் ஒன்றாகும். 1953 ஆம் ஆண்டு 71 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 100 இளங்கலை பல் மருத்துவ இடங்கள் (BDS) 40 முதுநிலை பல் மருத்துவ இடங்களுடன் (MDS) மிகவும் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிறது. பல் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில், தினந்தோறும் 1000க்கும் மேற்பட்டவர்கள் பயன்பெற்றுக் கொண்டிருக்கின்றனர். தென் கிழக்கு ஆசியாவிலேயே அதிகம் மக்களுக்கு பல் தொடர்பான சிகிச்சை அளிப்பதில் முதலிடத்தில் இந்த அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை திகழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த மருத்துவமனையின் கட்டமைப்புகள் மேம்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன்படி, இன்று ரூ.25.31 இலட்சம் செலவில், சிறப்பு பல் மருத்துவமனை பிரிவு, மாணவர்கள் மற்றும் நோயாளிகள் உணவு அருந்தும் கூடம், எல்.இ.டி திரையுடன் கூடிய கலையரங்கம், மாணவர்கள் படிப்பதற்கும் இளைப்பாறுவதற்கும் ஏதுவாக ஒரு பொது அறை, புதிய சலவையகம், பாதுகாவலர் அறை, சுத்திகரிக்க ப்பட்ட குடிநீர் அமைப்பு ஆகிய வசதிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசிடம் புதிய அரசு பல் மருத்துவக் கல்லூரி தமிழ்நாட்டில் அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை வைத்து 14.11.2023 அன்று புதுக்கோட்டையில் 2வது அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது. புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி, சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் கீழ் ஒரு பல் மருத்துவக் கல்லூரி என்று மொத்தம் 3 பல் மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளது. இதன் மூலம் ஏழை எளிய மக்கள் மிகவும் பயனடைந்து வருகின்றனர்.

**மருத்துவ மாணவர்களுக்கான விடுதி வசதி:**

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப, பல் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு புதிய தங்கும் விடுதி கட்ட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்பட்டு, ரூ.64.90 கோடி மதிப்பீட்டில், 620 மாணவர்கள் தங்கும் வகையில் விடுதி கட்டிடம் கட்டும் பணி இந்த மாத இறுதியில் தொடங்கி வைக்கப்படவுள்ளது. மேலும், ரூ.135 கோடி மதிப்பீட்டில், இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் 750 முதுநிலை மருத்துவ மாணவர்கள் தங்கும் வகையில் விடுதி கட்டிடம், இந்த பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப்படவுள்ளது. ஆக மொத்தம் ரூ.200 கோடி செலவில், 1400 மாணவர்கள் தங்கும் வசதியுடன் இரண்டு விடுதி கட்டிடம் இந்த மாத இறுதியில் முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கி வைக்கப்படவுள்ளது. இந்த விடுதி கட்டும் பணி தொடங்கப்பட்ட பின்னர் 18 மாதங்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

**பணி நியமனம்**

2242 கிராம சுகாதார செவிலியர்கள் மருத்துவ பணியாளர்கள் தேர்வு வாரியம் (Medical Recruitment Board (MRB) மூலம் தேர்வு செய்யப்பட உள்ளனர். 1021 மருத்துவர்கள் தேர்வு செய்வதில், நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த 30க்கும் மேற்பட்ட வழக்குகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, தற்போது கொரோனா மதிப்பெண் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது, 20.01.2024 க்கு முன்னர் இந்த பணி முடிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களின் மூலம் பணி ஆணைகள் வழங்கப்படும். 983 மருந்தாளுனர்கள் தேர்வு செய்வதில் இருந்த 2 வழக்குகள் முடிக்கப்ப ட்டுள்ளது. விரைவில் இவர்கள் பணி நியமனம் செய்யப்படவுள்ளனர். மேலும் 1200 க்கும் மேற்பட்ட சுகாதார ஆய்வாளர்கள் தேர்வு செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, தமிழ்நாடு அரசு பல்மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. பிரேம்குமார், துணை முதல்வர் மரு.சபரிகிரிநாதன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி உட்பட்ட பூண்டி ஒன்றியம் தோமூர் ஊராட்சியில் உடல் நலம் பாதிக்கப்பட்டு திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளுக்கான பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிப்பட்டிருக்கும் நோயாளிகளை திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் விஜி.ராஜேந்திரன் நலம் விசாரித்து ஆறுதல் கூறி நிவாரண உதவி வழங்கினார். உடன் மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, ஒன்றிய கழக செயலாளர் கூளூர் ராஜேந்திரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.மோதிலால், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சரஸ்வதி சந்திரசேகரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.எஸ்.நேதாஜி, மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் வி.எஸ்.சதீஷ், ஒன்றிய துணைச் செயலாளர் தங்கானூர் ஆனந்த், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் தோமூர் கௌதம் உள்பட பலர் உள்ளனர்.

## கலை - பண்பாட்டுத் துறை வழங்கும்

# சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, ஜன. 3 -

கலை பண்பாட்டுத் துறை வழங்கும் “சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா” ஆலோசனைக் கூட்டம் நேற்று (2.1.2024 ) நடைபெற்றது.

நிதிநிலை அறிக்கையின் போது, சென்னையில் அனைத்து தரப்பு மக்களின் மகத்தான வரவேற்பினைப் பெற்ற சென்னை சங்கமம் கலை விழா, மேலும் எட்டு முக்கிய நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பு 2023- 2024 ஆம் நிதியாண்டில் வெளி யிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து சென்னையோடு சேர்த்து, காஞ்சிபுரம், வேலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் சங்கமம் நம்ம ஊரு திருவிழாவினை நடத்திட ரூ.9.90 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டது.

அரசாணையின் அடிப்படையில் முதற்கட்டமாக சென்னையில், ‘சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா’ என்ற பிரமாண்ட கலைவிழாவை 13.01.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கிறார். அதனைத் தொடர்ந்து 14.01.2024 முதல் 17.01.2024 வரை சென்னையின் 18 இடங்களில் கலை விழாக்கள் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் ஒருங்கிணைப்பு துறைகளுடன் ஆலோசனைக் கூட்டம் நேற்று 2.1.2024 சென்னை தலைமைச் செயலகத்தில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், சுற்றுலாத்துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் காகர்லா உஷா, கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் சே.ரா.காந்தி, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர காவல் துறை, போக்கு வரத்து காவல்துறை, தீயணைப்புத் துறை, சுற்றுலாத்துறை, செய்தி மக்கள் தொடர்புத் துறை, போக்குவரத்துத் துறை, தமிழ்நாடு கேபிள் டிவி கார்பரேஷன், தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகம், மின் சாரத்துறை, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் போன்ற 16 அரசு துறைகளின் உயர் அலுவலர்கள் கலந்து கலந்து கொண்டனர்.

18 இடங்களில் நடைபெற இருக்கும் சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் 1500க்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலந்து கொள்கிறார்கள். இவ்விழாவினை சிறப்பான வகையில் செயல்படுத்திடதேவையான ஒத்துழைப்பினை அனைத்து துறைகளும் வழங்கிட வேண்டும் என வும், ஒவ்வொரு துறைக்கும் வரையறை செய்யப்பட்ட பணிகளை பணிகளை குறித்த காலத்தில் செய்து முடிக்க வேண்டும் எனவும் அமைச்சர் அறிவுறுத்தினார். சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா தொடர்பான அனைத்து பணிகளையும் சரியான முறையில் திட்டமிட்டு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

பெருநகர சென்னை வாழ் பொதுமக்கள் தமிழ்நாட்டின் பாரம்பரியத்தையும், பண்பாட்டினையும் வெளியிடப்படுத்தும் நமது நாட்டுப்புறக் கலை வடிவங்களை கண்டு களிக்க ஏதுவாகவும், நாட்டுப்புறக் கலைஞர்கள் பயன்பெறும் பொருட்டும் இவ்விழா சென்னையில் 13.01.2024 முதல் 17.01.2024 வரை நடத்தப்படவுள்ளது என அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்.

## தூத்துக்குடி மாவட்டத்தில்

# திருவைகுண்டத்தில் மழை வெள்ளம் பாதித்த பகுதிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆய்வு !

தூத்துக்குடி, ஜன. 3 -

திருவைகுண்டம் அருகே உள்ள பொன்னங்குறிச்சி மழை வெள்ள பாதிப்புகளை வீடு வீடாக சென்று அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆய்வு செய்தார்.

தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் தாலுகாவிற்கு உட்பட்ட ஆதிச்சநல்லூர், புதுக்குடி, தெற்கு தோழப்பண் பண்ணை, பொன்னங்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் மழை வெள்ள பாதிப்புகள் குறித்து சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது பொன்னங்குறிச்சி தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட உடைப்புகள் சரி செய்யப்படாத நிலையில் இருந்ததை சுட்டிக்காட்டி நீர்வளத் துறையினரிடம் சரிசெய்ய வேண்டும் என உத்தரவிட்டார். இந்நிலையில், பொன்னங்குறிச்சிக்கு மீண்டும் வந்த அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட உடைப்புகள் சரி செய்யும் பணிகளை பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, வெள்ளத்தால் இடிந்த வீடுகளை நேரில் பார்வை யிட்டுவீடு வீடாகச் சென்று மக்களின் குறைகளை கேட்டறிந்தார். ஆதரவற்ற முதியோர்களுக்கு அவர் நிவாரண உதவிகளை வழங்கினார். அப்போது பொது மக்கள், வீடுகள் மட் டுமல்லாமல் ஆடு, மாடுகள் இழப்பு உள்பட பல்வேறு பாதிப்புகள் குறித்தும் தெரிவித்தனர். உடனடியாக முதல்வர் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

முதல்வர் ஆயிரம் கோடி ரூபாய்க்கு புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். இதனால் பொதுமக்கள் அவரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

ஆய்வுப் பணிகள் குறித்து அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் கூறுகையில், தமிழக முதல்வரின் உத்தரவின்படி திருவைகுண்டம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள், சாலைகள் மற்றும் பாலங்களை பார்வையிட்டு வருகிறோம். வீடுகள் பாதிக்கப்பட்டு இருப்பதையும் ஆய்வு செய்து வருகிறோம். மழை வெள்ள நிவாரண தொகையாக ரூ.6000 வழங்கப்பட்டு வருவதையும் நேரில் பார்வையிட்டு வருகிறோம். தமிழக முதல்வரின் பல்வேறு நடவ டிக்கைகளால் தற்போது இயல்பு நிலை திரும்பி வருகிறது என்றார்.

### ஆர்.எஸ்.பாரதி – ஆ.ராசா எம்.பி. துவக்கி வைக்கிறார்கள்!

# தென் மண்டல வழக்கறிஞர் அணி பாசறைக் கூட்டம்!

## சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

வழக்கறிஞர் நிர்வாகிகள் பாசறைக் கூட்டம் குறித்து கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. விடுத்த அறிவிப்பு வருமாறு:

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தென் மண்டல வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பயிற்சி பாசறை கூட்டம் சனிக்கிழமை (06.01.2024) காலை 10.00 மணியளவில் தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெறுகிறது.

கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களும், துணை பொது செயலாளர் ஆ.ராசா எம்.பி. அவர்களும் மேற்கூறிய பயிற்சி பாசறை கூட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்ற இருக்கின்றார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக சட்டத்துறை மாநில நிர்வாகிகளும் கீழ்க்காணும் மாவட்டங்களுக்குட்பட்ட கழக வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும்.

**பங்கேற்க வேண்டிய கழக மாவட்டங்கள்:**

இராமநாதபுரம் - சிவகங்கை, திண்டுக்கல் கிழக்கு - திண்டுக்கல் மேற்கு, தேனி வடக்கு - தேனி தெற்கு, மதுரை மாநகர் - மதுரை வடக்கு - மதுரை தெற்கு, விருதுநகர் வடக்கு - விருதுநகர் தெற்கு, திருநெல்வேலி கிழக்கு - திருநெல்வேலி மத்திய, தூத்துக்குடி வடக்கு - தூத்துக்குடி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு - கன்னியாகுமரி மேற்கு, தென்காசி வடக்கு - தென்காசி தெற்கு,

குறிப்பு : மேற்கூறிய பயிற்சி பாசறை கூட்டத்தில் வழக்கறிஞரணி நிர்வாகிகள் பங்கேற்பதை மாவட்ட அமைப்பாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**என்.ஆர். இளங்கோ எம்.பி.**
செயலாளர் - கழக சட்டத்துறை



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதியில் மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் 102 மற்றும் 102 (அ) வட்டங்களில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் ஏற்பாட்டில் 5000 குடும்பங்களுக்கு வழங்கினார். உடன் அண்ணாநகர் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 102 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராணி ரவிச்சந்திரன், 102 வது வட்டக் கழகச் செயலாளர் பி.சந்திரசேகர், 102 (அ) வட்டக் கழகச் செயலாளர் எம்.ஜி.ரவிக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## காடையாம்பட்டி கழக முன்னோடி

# மொழிப்போர்த் தியாகி இரா.நாகரத்தினம் மறைவு!

## இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அஞ்சலி!



சேலம், ஜன. 3 -

சேலம் மத்திய மாவட்டம் காடையாம்பட்டி தி.மு.க.முத்த முன்னோ டியும். மொழிப்போர் தியாகியும் கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்த வருமான இரா.நாகரத்தினம். வயது 89. இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் மாவட்டக் கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மற்றும் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள். அனைத்துக் கட்சி பிரமுகர்கள் அன்னாரின் உடலுக்கு மாலை அணி வித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ம.த. மல்லையன்

**சனவரி 3 (2014)**



தந்தை பெரியார்,
பேரறிஞர் அண்ணா,
தலைவர் கலைஞர் ஆகியோர்
வழிநின்று கம்பம் பகுதியில் கழகம்
வளர்த்தவர்.

க.புதுப்பட்டி பேரூராட்சி மன்றத்
தலைவராக தொடர்ந்து பதினைந்து
ஆண்டுகளாகப் பொறுப்பு வகித்து,
அறிஞர் அண்ணா முதல்வராக
இருந்த சமயத்தில் அப்பகுதியில் அரசு
உயர்நிலைப் பள்ளியும் – தலைவர்
கலைஞர் முதல்வராக இருந்த போது
எண்ணற்ற நலத்திட்டங்களையும்
கொண்டு வந்து அப்பகுதி மக்களிடம்
கழகத்திற்கு நற்பெயரைப்
பெற்றுத் தந்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம்,
விலைவாசி உயர்வு எதிர்ப்பு
போராட்டம் மற்றும் கழகம் நடத்திய
அனைத்துப் போராட்டங்களிலும்
பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



CHENNAI BOOK FAIR

47 ஆவது

# சென்னை புத்தகக் காட்சி 2024

## தொடக்க விழா



**03.01.2024 புதன்கிழமை மாலை 4.30 மணி • YMCA உடற் கல்வியியல் கல்லூரி, நந்தனம், சென்னை**

தொடக்க நாள் நிகழ்வுகள் : 3.1.2024 : புதன்கிழமை – மாலை 4.30 மணி

வரவேற்புரை: திரு. **சேது சொக்கலிங்கம்** தலைவர், பபாசி, கவிதா பப்ளிகேஷன்

புத்தகக் காட்சியைத் தொடக்கி வைத்து முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி பொற்கிழி விருதுகள் 2024 மற்றும் பபாசி விருதுகளை வழங்கி விழாப் பேருரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்

சிறப்புரை: பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்

மாண்புமிகு **அன்பில் மகேஸ் பொய்யாமொழி** அவர்கள்

நன்றியுரை: திரு. **எஸ்.கே. முருகன்** செயலாளர், பபாசி, நாதம் கீதம் புக்ஸ்

முத்தமிழறிஞர் **கலைஞர் மு.கருணாநிதி** பொற்கிழி விருது 2024 பெறுவோர்

| உரைநடை | கவிதை | நாவல் | சிறுகதை | நாடகம் | மொழிபெயர்ப்பு |
|---|---|---|---|---|---|
| பேரா. **ஆ.சிவசுப்பிரமணியன்** | **உமா மகேஸ்வரி** | **தமிழ்மகன்** | **அழகிய பெரியவன்** | **வேலு.சரவணன்** | **மயிலை பாலு** |

BAPASI **பபாசி விருது பெறுவோர்**

| | | | |
|---|---|---|---|
| சிறந்த பதிப்பாளருக்கான பதிப்பகச் செம்மல் க.கணபதி விருது திரு. **அனுஷ்** அவர்கள் எதிர் வெளியீடு | பபாசி வழங்கும் சிறந்த நூலகருக்கான விருது திரு. **ஆசைத்தம்பி.M** அவர்கள், திருவாரூர் | சிறந்த புத்தக விற்பனையாளருக்கான பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன் விருது **கிரி டிரேடிங் கம்பெனி** | சிறந்த குழந்தை எழுத்தாளருக்கான குழந்தைக் கவிஞர் அழ வள்ளியப்பா விருது எழுத்தாளர் **C.S.தேவநாதன்** அவர்கள் |
| சிறந்த தமிழறிஞருக்கான பாரி செல்லப்பனார் விருது திரு. **குழ.கதிரேசன்** அவர்கள் | சிறந்த பெண் எழுத்தாளருக்கான முதல் பெண் பதிப்பாளர் அம்சவேணி பெரியண்ணன் விருது எழுத்தாளர் **இன்பா அலோசியஸ்** அவர்கள் | சிறந்த சிறுவர் அறிவியல் நூலுக்கான நெல்லை சு.முத்து விருது எழுத்தாளர் **மு.வேலையன்** அவர்கள் | சிறந்த தன்னம்பிக்கை நூலுக்கான சிந்தனைக் கவிஞர் கவிதாசன் விருது எழுத்தாளர் **கமலநாதன்** அவர்கள் |

முத்தமிழ்க் கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் கவிதை இலக்கிய விருது திரு. **இலக்கியா நடராஜன்** அவர்கள், சிவகங்கை

**The Booksellers' & Publishers' Association of South India**

**தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம்**

BAPASI

No. 8, 2nd Floor, Sun Plaza, G.N. Chetty Road, Chennai- 600 006. Tel : 2815 5238

# திராவிடப் போராளிகள்

**49** வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## அரணாகத் திகழ்ந்த நூர்ஜகான் பேகம்



ஓவியம் : ரவி பேலட்

எப்போதும் சிரித்த முகம், யாருக்கும் அஞ்சாமல் தன் கருத்தை உரத்துச் சொல்லும் நேர்மை, தனது இயக்கமும் தலைவரும் இரு கண்களாகக் கருதும் கொள்கைப் பற்று, என்றும் மாறாத எளிமை இவற்றை ஓர் ஓவியமாக வரைந்தால், நூர்ஜகான் பேகம் எனும் உருவமாக வரும்.

திராவிட இயக்கக் கொள்கைகளைப் பெற்றோர் மூலமும், நூல்களில் படித்தும் அறிந்துகொண்டவர்கள் உண்டு. ஆனால், நூர்ஜகான் பேகமோ, கலைஞர் அவர்களின் 'மந்திரிகுமாரி', 'பராசக்தி' வசனங்களைக் கேட்டு ஈர்க்கப்பட்டவர்..

1957ஆம் ஆண்டு, கலைஞர் அவர்கள் முதன்முதலாக குளித்தலை சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராகப் போட்டியிட்டார். நூர்ஜகான் பேகத்தின் குடும்பம் அப்போது குளித்தலையில் இருந்தது அந்தச் செய்தியைக் கேட்டவுடன், மகிழ்ச்சிப் பொங்க கலைஞர் பேசும் பிரச்சாரக் கூட்டங்களைத் தேடித்தேடிப்போய் நின்று விடுவார். அந்த இளம் உள்ளத்தில் பதிந்துவிட்ட அரசியல் கருத்துகள், அவரைத் தீவிர தி.மு.க. பெண்ணாக்கிவிட்டது.

### அரவக்குறிச்சி தந்த அரசியல் பெண்

நூர்ஜகான் பேகம் 1946 ஆம் ஆண்டு கரூரில் பிறந்தார். தந்தை பெயர் ஷேக் இப்ராஹிம், தாயார் ரோஷன் பீவி. பழமை நிறைந்த இசுலாமியக் குடும்பம். அவர் தந்தை இருமுறை ஹஜ் பயணம் சென்று வந்தவர். அதனால் 'ஹாஜியார்' என்று அழைக்கப்பட்டார். அவர்களின் சொந்த ஊர், கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி.

பள்ளிப்படிப்பை முடித்தவுடன், நூர்ஜகான் பேகத்திற்கு, திருமணம் நடந்தது. அவர் கணவர் பெயர் அப்துல் வஹாப். இரண்டு ஆண் குழந்தைகள், இரண்டு பெண் குழந்தைகள், என நான்கு குழந்தைகளின் தாயாகக் குடும்பப் பொறுப்பைச் சுமந்த போதும், அரசியல் ஈடுபாடும், அதிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது கொண்ட பிடிப்பும் மாறவே இல்லை.

நூர்ஜகான் பேகத்தின் கணவருக்கோ அரசியல் கூட்டங்களுக்கு அவர் செல்வது பிடிக்கவில்லை. பெரும்பாலான பெண்கள் பொதுவாழ்க்கையில் தொடர முடியாமல், நின்றுவிடும் தடைக்கல்லாக உருவாகும் குடும்பச்சிக்கல், நூர்ஜகான் பேகத்துக்கும் ஏற்பட்டது.

1972 ஆம் ஆண்டில், தி.மு.க.வின் உறுப்பினர் ஆனார் நூர்ஜகான். கூட்டத்துக்குப் போய்விட்டு வந்தால், கணவருடன் சண்டை வரும். அந்நிலையில், 1973 ஆம் ஆண்டு திண்டுக்கல் பாராளுமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் வந்தது.

அந்தச் சூழலில், திரை போட்ட ரிக்ஷாவின் உள்ளே அமர்ந்து கொண்டு, தெருத்தெருவாகச் சென்று, ஒலிபெருக்கி மூலம் தி.மு.க வேட்பாளர் பொன்.முத்துராமலிங்கம் அவர்களுக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்தார் நூர்ஜகான் பேகம். பிரச்சாரம் முடிந்து, வீட்டிற்கு வந்தால் அடி உதை. அத்தனையும் தாங்கிக்கொண்டு தன் முடிவில், மாறாமல் நின்ற நூர்ஜகான் பேகத்தின் கொள்கை உறுதி, அவர் கணவர் உட்படக் குடும்பத்தையே தி.மு.க.வின் பக்கம் திருப்பியது.

தன் தலைவர் கலைஞர் ஒரு போராட்டத்தை அறிவித்துவிட்டால், அந்தப் போராட்டம் வெற்றி பெற கடுமையாக உழைப்பதோடு தானும் அந்தப் போராட்டத்தில் பங்கேற்று கைதாவார் நூர்ஜகான் பேகம்.

### நீதிக்காக எட்டு நாள் நடை

எம்.ஜி.ஆர் ஆட்சியில் திருச்செந்தூர் கோயிலில் நடந்த பெருந்திருட்டு ஒன்றும், அதைத் தொடர்ந்து அறநிலையத்துறை அதிகாரி ஒருவரின் மரணமும் நாட்டையே உலுக்கின.

அதற்காக கலைஞர் அவர்கள் நீதிகேட்டு நடத்திய நெடிய பயணம், இந்தியா முழுவதும் பேசப்பட்டது. எட்டு நாட்கள் தொடர்ந்த அந்த நடைப்பயணத்தில், எட்டு நாட்களும் உடன் நடந்தவர்களில் நூர்ஜகான் பேகமும் ஒருவர்.

### கல்லடி கண்ட தலைவி

தமிழ்நாடு முழுக்க அவர் பேசாத ஊரே இல்லை. பல இடங்களுக்கு மாட்டு வண்டியில் கூடப் பயணம் செய்து கூட்டத்துக்குச் சென்றார். பல ஊர்களில் அவரது பேச்சின் வீரியம் எதிரிகளை அச்சம் கொள்ளச் செய்தது. அதன் விளைவு, அவர் மீது விழுந்த கல்லடிகள்.

எம்.ஜி.ஆர். ஆட்சியின் எரிசாராய ஊழலை மறைக்க, அவரே நியமித்த நீதிபதி கைலாசம் கமிஷனை எதிர்த்த போராட்டத்தில் நூர்ஜகான் பேகமும் கைதானார். சிறை சென்றோர் ஜாமீனில் வரக்கூடாது என்று கலைஞர் அவர்கள் கூறியதை ஏற்று, ஒரு மாதகாலம் சிறையில் இருந்தார்.

பேராசிரியர் உள்ளிட்ட தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் பத்து பேரின் சட்டமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்ட போது அந்த ஜனநாயகப் படுகொலையைக் கண்டித்தும், கலைஞர் அவர்களை விடுதலை செய்யக் கோரியும் திண்டுக்கல்லில் நூர்ஜகான் பேகம் தலைமையேற்றுக் கடையடைப்புப் போராட்டத்தை நடத்தினார்.

நூர்ஜகான் பேகம் அம்மையாரின் உழைப்பின் பலனாக அவரது அரசியல் பொறுப்புகளும் படிநிலைகளும் உயர்ந்தன. ஒன்றியக் கிளைக் கழகச் செயலாளர், திண்டுக்கல் நகர மகளிர் அணி அமைப்பாளர், ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், மாநில மகளிர் அணித் துணைச் செயலாளர், பின் மகளிர் அணித் தலைவர் எனப் பொறுப்புகளிலும் உயர்ந்தார்.

தி.மு.க மகளிர் அணித் தலைவராக இருந்த அலமேலு அப்பாதுரை அவர்களிடம் பயிற்சிபெற்று, அம்மையார் சற்குண பாண்டியன், சட்டமன்ற உறுப்பினராக இருந்த நெடுநாள் செயல்வீரர் சங்கரி நாராயணன், கலைத்துறையோடு கழகப்பணி ஆற்றி வரும் விஜயா தாயன்பன் என ஒரு பேரணியாகச் செயல்படும் மகளிர் அணியை உருவாக்கியவர்களில் நூர்ஜகான் பேகமும் ஒருவர்.

### அடையாளம் துறக்காத கொள்கைக்காரர்

2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14, 15 தேதிகளில் கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற மாநில மகளிர் அணி மாநாட்டில் நிறைவு உரையாற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், "...என்னுடைய மகள் கனிமொழி ஆனாலும், என்னுடைய பேத்தி கயல்விழி ஆனாலும், இவர்களெல்லாம் நூர்ஜகான் பேகம் போன்ற உள்ளத்தைப் பெற வேண்டும் "என்று குறிப்பிட்டார்.

2013 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் தேதி, 'முரசொலி' ஏட்டின் முதல் பக்கத்தில், வெளியான கலைஞர் கடிதத்தில் ஜூன் 1, 2 தேதிகளில் நடைபெற்ற தனது பிறந்தநாள் விழா நிகழ்வுகளைப் பற்றி எழுதியிருந்தார்.

அதில், "நூர்ஜகான் பேகம் இன்றைக்கு மகளிர் அணியின் தலைவராக இருந்தபோதிலும், அந்தக் காலம் தொட்டு நான் புகைவண்டியில் மதுரைக்குச் செல்கிறேன் என்றால், திண்டுக்கல் புகைவண்டி நிலையத்தில் 20 மகளிரோடு கூடி நின்றுகொண்டு 'கலைஞர் வாழ்க' என்ற குரலை அந்தப் புகைவண்டி நிலையம் முழுதும் கேட்கக்கூடிய வகையில் எதிரொலிக்கும் என் பாசக்கார தங்கை" என்று குறிப்பிட்டிருந்தார்.

நூர்ஜகான் அம்மையார் தனது இஸ்லாமிய அடையாளமாக சேலை தலைப்பால் முக்காடு போட்டுக்கொள்வதை ஒருபோதும் மாற்றிக்கொள்ளவில்லை. அவரது அரசியல் செயல்பாடுகளுக்கு, மதவாதிகளிடமிருந்து எதிர்ப்பு வந்த போதும், அவரது மத அடையாளத்துக்கு இயக்கத்தினர் சிலரிடமிருந்து எதிர்ப்பு வந்த போதும், "நீ உனது அடையாளத்தை யாருக்காகவும் மாற்றிக்கொள்ளாதே. நமது இயக்கம் உனக்குத் துணையாக இருக்கும்" என்று தலைவர் கலைஞர் கூறிய நம்பிக்கைச் சொற்களே, நூர்ஜகான் பேகம் அம்மையாருக்குப் பெரும் ஊக்க சக்தியாக இருந்தன.

அம்மையார் அவர்களுக்கு 1990 ஆம் ஆண்டு 'கலைஞர் விருது' வழங்கப்பட்டது.

தன் தலைவர் மீது மாறாத நம்பிக்கையும் பற்றும் கொண்டிருந்த நூர்ஜகான் அம்மையார் தலைவர் கலைஞர் அவர்கள் மறைந்த போது நிலைகுலைந்து போனார். அதன்பின் எழுபது நாட்களே வாழ்ந்தார். 24.10.2018 அன்று நூர்ஜகான் பேகம் காலமானார்.

அம்மையாரின் நினைவேந்தல் நிகழ்ச்சியில், அவரது படத்தினைத் திறந்து வைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மனம் நெகிழ்ந்து, "நூர்ஜகான் பேகம் அம்மையார் கழகத்தின் எழுச்சி முரசமாக - இயக்கத்தினுடைய போர் முரசமாக, லட்சிய முரசமாக விளங்கியவர்" என்றும், "சிறுபான்மை சமுதாயத்தினுடைய திரவியம்" என்றும் கூறினார். மேலும் தாயின் வழியில் தங்கள் இயக்கப்பயணம் தொடரும் என்று அம்மையாரின் நினைவேந்தலில் உரையாற்றிய அவரது மகள் வகிதாபேகம் அறிவித்ததையும் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

சுயமரியாதை, சமத்துவம் என்ற தத்துவத்தை அடிநீரோட்டமாய்க் கொண்ட திராவிட இயக்கத்தின் அரணாய்த் திகழ்பவர்கள் அம்மையார் நூர்ஜகான்பேகம் போன்ற திராவிடப் போராளிகள்தான்.

(வருவார்கள்...)

---

## குஜராத்தின் உண்மை முகம்!

குஜராத்திலிருந்து வந்த பிரதமர் நரேந்திர மோடிதான் சிறந்த அரசியல் நடிகர் என்று நினைத்தால், ஒட்டுமொத்த குஜராத் மாநில அரசே நடிப்புத் துறையில் கோலோச்சுகிறதோ என்று எண்ண வைக்கின்றன சமீப கால நடவடிக்கைகள்.

'போலி டோல்கேட்', 'போலி அரசு அலுவலகம்' என்று அடுத் தடுத்து குஜராத் மாநிலத்தின் வண்டவாளங்கள் வெளியே வந்து கொண்டிருக்க, இப்போது 'பூரண மதுவிலக்கு' என்ற போலி பிம்பமும் கலையத் தொடங்கி இருக்கிறது.

குஜராத், காந்தி நகர் 'கிஃப்ட் சிட்டி'யில் (GIFT City - Gujarat International Financial Tech City) பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் 'அதிகாரப்பூர்வ விருந்தி னர்களுக்கு' மதுவிலக்கில் இருந்து விலக்கு அளிக்க முடிவு செய்யப் பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் அவர்கள் மதுபானங்கள் விற்கும் 'ஹோட்டல்கள்', 'உணவகங்கள்', 'கிளப்புகள்' போன்ற இடங்களில் மதுபானங்களை எடுத்துக் கொள்ள முடியும்.

சர்வதேச முதலீட்டாளர்களை ஈர்க்க, 'திராவிட மாடல்' இங்கே மாநாடு நடத்துகிறது. ஆனால் 'குஜராத் மாடல்' மதுபானங்கள் மூலம் அவர்களை ஈர்க்க நினைக் கிறது. தமிழ்நாட்டைக் குறை சொல்லும் முன் நடுநிலை வாதிகளும் காவிகளும் கொஞ்சம் குஜராத் முதுகைப் பார்க்கட்டும்..!

---

## :ப்ளாஷ்பேக்



### பிளவிலிருந்து மீண்டபோது சந்திப்பு!



சோழராசன்

1994 ஆம் ஆண்டு, கழகம் ஒரு பிளவிலிருந்து மீண்டு வந்த நிலையில், தலைவர் கலைஞரை நேரில் சந்தித்து ஆதரவு தெரிவிக்க, பல்வேறு மாவட்டங்களிலிருந்து தொண்டர்களும் கழக நிர்வாகிகளும் வருகை தந்தபடி இருந்தார்கள். அப்போது திருச்சி மாவட்டம், மணப்பாறை நகரக் கழக நிர்வாகிகளுடன் தலைவர் கலைஞரை, அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றோம். முன்னாள் நகர மன்றத் தலைவர் கோபாலகிருஷ்ணன் மறைந்த முன்னாள் நகரச் செயலாளர் மலையாளம், பொருளாளர் தங்கபாண்டியன், தற்போது உள்ள நகரச் செயலாளர் செல்வம் ஆகியோர் உடனிருந்தார்கள்.

**-மு.சோழராசன், துணை அமைப்பாளர், மாவட்ட நெசவாளர் அணி, திருச்சி தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்பு ங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


**கருவூலம்**

### கோரிக்கையும் அறிவிப்பும்

**1990 ஆம் ஆண்டு சென்னையில் கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட பாராட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டார் பிரதமர் வி.பி.சிங். அந்தக் கூட்டத்தில் பேசிய முதலமைச்சர் கலைஞர், சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள விமான நிலையங்களுக்கு 'அண்ணா' பெயரும் 'காமராஜர்' பெயரும் சூட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். மேடையிலிருந்தே டெல்லியில் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பேசிய பிரதமர், அவர் உரையின்போது கலைஞரின் கோரிக்கையை ஏற்று, விமான நிலையங்களின் பெயரை அப்போதே அறிவித்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 348




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 144 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 18 – புதன்கிழமை 03 ஜனவரி 2024 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 144: Thiruvalluvar Year - 2054 - Margazhi 18 - Wednesday 03 January 2024 - Chennai 8 Pages சிறப்பிதழ்!

தமிழினத் தலைவர்

## கலைஞர்

## நூற்றாண்டு சிறப்பிதழ் 8



# சமூகப்புரட்சியை கல்வியில் தொடங்கினார் கலைஞர்!

**வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையொடு ஐந்துடன் மாண்டது அமைச்சு -** (குறள் 632)

மனவலிமையும், குடிகளை காத்தலும், அறநூல்களைக் கற்று அறிந்திருத்தலும், விடாமுயற்சியும், இவற்றில் சிறந்து இருப்பவரே அமைச்சர் என்ற திருக்குறளுக்கு ஏற்ப முத்தமிழ் அறிஞர் கலைஞர் தனது ஆட்சிக்காலத்தில் அனைத்து துறையிலும் சிறப்பாக ஆட்சி செலுத்தினார். குறிப்பாக கல்வித்துறையிலும் தனது அறிவார்ந்த திட்டங்களைத் தீட்டி தமிழ் இனத்தின் அறிவாற்றலை கூர் தீட்டினார் என்றால் மிகையில்லை.

நமக்கு நேரடி அறிமுகம் இல்லாதவர்கள் கூட நம் வாழ்க்கைகையில் எங்கோ எப்போதோ ஏதோ ஒரு வகையில் ஒரு நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தி விடுவார்கள். அப்படித்தான் கலைஞர் அவர்கள் என் வாழ்க்கையில் அவர் பேச்சு, எழுத்து, செயல் இவற்றாக பலமுறை நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளார்.

ஒருமுறை கலைஞர் அவர்கள் முதன் முறை முதல் அமைச்சர் ஆன காலத்தில் என் ஊர் ஆரல்வாய்மொழி பொதுக்கூட்டத்தில் உரையாற்ற வந்திருந்தார்.

“அருமை உடன் பிறப்புக்களே! உங்கள் கோபமும் அன்பும் ஆரல்வாய்மொழி காற்றைப் போல” என்று தன் உரையைத் தொடங்கினார்.

நமது ஊரைப் பற்றி நமக்கே தெரியாத ஒரு செய்தியை, கவிமணியின் கவிதையை கோபத்திற்கும் அன்பிற்கும் தொடர்புபடுத்தி உரையாற்றியது என் மனதில் ஆழமாக பதிந்தது. தாக்கத்தை ஏற்படுத்தியது. கவிமணியின் கவிதைகளை படிக்கத் தூண்டியது.

தன் கருத்தினை ஆணி அடித்தாற் போல் மக்கள் மனதில் பதிய வைக்கும் அற்புத கலையை அவர் உரையில் கண்டேன்.

கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் தான் பேருந்துகள் பொது உடமை ஆக்கப்பட்டன. பேருந்துகள் அனைத்திலும் திருவள்ளுவர் புகைப்படத்துடன் கூடிய ஒரு திருக்குறள் எழுதப்பட்டிருக்கும்.

ஒரு மாற்றுச் சிந்தனையுடன் கூடிய ஒரு செயல் மூலம் திருக்குறள் கற்பிக்கும் கலையை கலைஞரிடம் கண்டேன்.

பெரும் அளவில் கலை அறிவியல் இலக்கிய பட்டதாரிகள் உருவானார்கள். வேலை வாய்ப்பு பெற்றார்கள். அதிகம் பேர் பட்ட மேற்படிப்பில் சேர்ந்தனர். அதுவரை இல்லாத வாய்ப்பாக அதிகம் எண்ணிக்கையில் மருத்துவம் பொறியியல், வேளாண்மை படிப்புகளில் மாணவர்கள் சேர்ந்தார்கள்.

ஒரு அறிவுப் புரட்சி தொடங்கிய காலம். நான் கண்ணால் கண்டது. இது போல்தான் தமிழ்நாடு முழுவதற்கும் அந்த மாற்றம் தொடங்கியது. கலைஞர் அமைத்த பாதை அது.

கலைஞர் ஆட்சியில் கிராமங்களை பேருந்துகள் இணைத்தன. பள்ளிகள், கல்லூரிகள் இல்லாத ஊர்களிலிருந்து பள்ளி கல்லூரி இருக்கும் ஊர்கள் நோக்கி மாணவர்கள் பாதுகாப்பாக பயணப்பட்டார்கள். கல்வி கற்றார்கள். பயன் பெற்றார்கள் சமூகம் முன்னேறியது.

கல்வியில் மிகுந்த ஈடுபாடும், அளவில்லாத அக்கறையும் கொண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கல்விதான் சமூகத்தை மேம்படுத்தும் என்று கலைஞர் ஆழமாக உணர்ந்து இருந்தார். பள்ளிகள் இல்லாத ஊர்களில் பள்ளிகளை, கல்லூரிகள் இல்லாத ஊர்களில் கல்லூரிகளை கலைஞர் துவக்கினார். இதன் மூலம் கல்வியை பெரும்பாலான பிள்ளைகளுக்கு கிடைக்க வழி செய்தார். கல்வித்துறையில் அவர் செய்து காட்டிய புரட்சிகள் அளப்பரியன.

கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான் சமச்சீர் கல்வி முறை கொண்டுவரப்பட்டது. 69 விழுக்காடு இட ஒதுக்கீடு வேலை வாய்ப்பில் மட்டுமில்லாமல் கல்லூரியில் மாணவர் சேர்க்கையிலும் கொண்டு வந்து இட ஒதுக்கீடு முறையை முழுமையடைய செய்தார்.

முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கு படிப்பில் முன்னுரிமை அளித்தவர் கலைஞர் அவர்களே! அது போல இட ஒதுக்கீட்டிலும் இந்தியாவிலேயே முன்னோடி முதல்வராகவே கலைஞர் விளங்கினார். மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உள் ஒதுக்கீடு மூலம் கல்வி வேலை வாய்ப்பு பெற வழி வகை செய்தார். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு உதவித் தொகையை இரட்டிப்பு ஆக்கியவர் கலைஞர் அவர்களே!

பள்ளி கல்லூரி செல்லும் மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயணம் கலைஞர் கொண்டு வந்த திட்டம்.

பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கு காமராசர் முன்னோடியாக விளங்கினார் என்றால், உயர் கல்வி வளர்ச்சிக்குத் முன்னோடியாக கலைஞர் விளங்கினார்.

தமிழ் நாட்டில் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகமாக உயர்ந்தது. கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான்.

1997 ஆம் ஆண்டு ஒற்றை சாரள முறையை கொண்டு வந்து மாணவர்கள் தாங்கள் விரும்பிய கல்லூரியையும் விரும்பிய பாடத்தையும் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடைத்தது கலைஞர் ஆட்சி காலத்தில்தான்.

2007 ஆம் ஆண்டு தொழில் கல்வியில் சேர்வதற்குத் தடையாக இருந்த நுழைவு தேர்வு முறையை ரத்து செய்தார். ஒவ்வொரு மாவட்டத்துக்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற முன்னெடுப்பை எடுத்தார்.

தொலைநோக்கு பார்வையோடு தகவல் தொழில் நுட்ப கொள்கை ஒன்றை உருவாக்கினார்.

நவீன தமிழ் நாட்டைக் கட்டமைத்த சிற்பி என்று கலைஞர் அவர்களைக் கூறலாம். கணினி என்னும் எந்திரத்தை, நேரில் கண்டிராத கால கட்டத்தில் மாணவர்களுக்கு கணினிக் கல்வியை அறிமுகப்படுத்தியவர் கலைஞர் அவர்களே! தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னையைத் தேடி வந்து மாணவர்களைத் தேர்வு செய்யும் நிலைக்குக் காரண கர்த்தா கலைஞர் அவர்களே!



கணினித் தமிழை அறிமுகப்படுத்த அவர் எடுத்த முன் முயற்சிகள் மிகுந்த பலனைக் கொடுத்தது. கணினியிலும் இணையத்திலும் தமிழ் அசுர வளர்ச்சி பெற்றது. கலைஞர் ஆட்சிக்காலத்தில்தான், சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோவை ஆகிய ஊர்களில் அண்ணா பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டது. அதன் விளைவாக திண்டிவனம், விழுப்புரம், பண்டிருட்டி, அரியலூர். திருக்குவளை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல், தூத்துக்குடி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம் பட்டுக்கோட்டை, ஆரணி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி முதலான ஊர்களில் அண்ணா பல்கலைகழக உறுப்புக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டது கலைஞர் ஆட்சிகாலத்தில் தான்.



**முனைவர் ப.தேவதாஸ் மனோகரன்**
முன்னாள் துணைவேந்தர்
அண்ணா பல்கலைக் கழகம், திருச்சி.

தமிழ்நாட்டில் முதல் வேளாண்மை பல்கலைக் கழகம் கலைஞர் ஆட்சியில் உருவானது. அது தமிழ் நாட்டில் வேளாண் புரட்சிக்கு வித்திட்டது.

டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது கலைஞர் ஆட்சியில்தான். அதன் உருவாக்கத்திற்கு பின்னர் பல சட்ட கல்லூரிகள் உருவாகின.

கலைஞர் ஆட்சிக் காலத்தில் தான் கால்நடை மருத்துவ பல்கலைக் கழகம் உருவானது.

தமிழ் வளர்ச்சிக்கென கலைஞர் ஆட்சிக் காலத்தில் தனித்துறை அமைக்கப்பட்டது.

கலைஞர் தனது ஆட்சியில் பொறியியல் கல்வியை தமிழ்வழியில் கொண்டுவர ஆசைப்பட்டார். ஆணையிட்டார். தமிழுக்குச் செம்மொழி தகுதியைப் பெற்றுத் தந்ததன் மூலம் தமிழின் தொன்மையை வலிமையை இன்று உலகமே அறிந்து வியக்கிறது. கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை, சென்னையில் வள்ளுவர் கோட்டம், பூம்புகார் கலைமாடம், அண்ணா நூலகம். இணைய பல்கலைக்கழகம் ஆகியவை கலைஞர் தமிழ்நாட்டுக்கு அளித்த பெரும் கொடைகள்.

கல்வியில் இத்தகைய மறுமலர்ச்சி ஏற்படுத்தி, தமிழ் நாட்டில் கல்விப் புரட்சியை ஏற்படுத்திய கலைஞரைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்கு கலைஞர் அவர்களுடனான பரிச்சயம் நினைவுக்கு வருகிறது.

நான் கல்லூரியில் படித்து கொண்டு இருந்தபோது நாட்டில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. கலைஞர் அவர்கள் இரயிலில் வெளியூர் செல்வதாக அறிந்து இரயில் நிலையத்தில் அவரைப் பார்த்து விட வேண்டும் என்று விழைந்தேன். என்னுடைய சித்தப்பா கணபதி ராம சுப்பையா (திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவர்) அவர்களிடம் என் விருப்பத்தைச் சொன்னேன். என் சித்தப்பாவும் நானும் ரயில் நிலையம் சென்றடைந்தோம்.

ஆட்சி இன்றோ நாளையோ அல்லது விரைவில் கலைக்கப் படலாம் என்ற பதற்றமான சூழ்நிலை. உணர்ச்சிக் கொந்தளிப்பில் ரயில் நிலையத்தில் குவிந்திருந்த தொண்டர்கள். அந்தச் சூழ்நிலையிலும் எனது சித்தப்பாவையும் என்னையும் ரயில் பெட்டியில் நுழைவாயில் அருகே அழைத்து பேசினார். என் சித்தப்பாவிடம் நிலைமையின் தீவிரம் குறித்து பேசினார். எதையும் தாங்கும் இதயம். எந்த சூழ்நிலையையும் நாம் சமாளிப்போம் என்று உறுதிபடக் கூறியதை கேட்டு வியந்தேன். பொது வாழ்க்கை சவால்கள் நிறைந்தது. எந்த சூழ்நிலையிலும் கொள்கை மாறக்கூடாது என்பதை ஆணித்தரமாக உணர்த்திய சந்திப்பு அது.

மற்றுமொரு முக்கியமான நிகழ்வு என் மனதில் நிழலாடுகிறது.

அண்ணா பல்கலைக் கழக தமிழ்மன்றம் தொடக்கவிழா பேருரையாற்ற பேராசிரியர் தமிழ் குடிமகனை அழைத்திருந்தோம். அவரும் வருவதாக உறுதியளித்திருந்தார். அழைப்பிதழ் அச்சடித்து விருந்தினர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டு விட்டது.

மீண்டும் ஒரு இக்கட்டான சூழ்நிலை. இரண்டாவது முறையாக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. தமிழ்க்குடிமகன் வரமாட்டார் என்றே அனைவரும் நம்பினார்கள். ஒரு அமைதியான சூழ்நிலை. திடீரென அறிவிப்பு இன்றி தமிழ்க் குடிமகன் வந்தார். 15 நிமிடங்கள் உரையாற்றினார். துணைவேந்தர் அவர்களும் உடன் இருந்தார்.

விழா முடிவில் “உன்னை விரும்பி அழைத்து விழா ஏற்பாடு செய்தவர்களை ஏமாற்றக் கூடாது. அவர்களுக்கு இழுக்கு ஏற்படக்கூடாது, கட்டாயம் சென்று வா” என தலைவர் ஆணையிட்டதாக பேராசிரியர் தமிழ்க் குடிமகன் என்னிடமும் துணை வேந்தரிடமும் கூறினார். கலைஞர் என் மேல் கொண்ட அக்கறையை வெளிப்படுத்திய நிகழ்வு அது.

அண்ணா பல்கலைக்கழகம் திருக்குவளை உறுப்புக் கல்லூரிக்கு 2010 வரை நிரந்தர கட்டிடம் இல்லை. திருக்குவளை அரசினர் மேல்நிலை பள்ளியின் ஒரு பகுதியில் தற்காலிகமாக இயங்கி வந்தது.

ஒரு நாள் காலைவேளையில் கலைஞர் அவர்கள் என்னைத் தொலைபேசியில் அழைத்து அவருக்கே உரித்தான பாணியில் “என்ன நிலைமை? உண்மையைச் சொல்லுங்கள்” என்றார்.

கட்டிடத்திற்கு நிர்வாக ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் நிதி ஒதுக்கீட்டு ஆணை வெளியிடப்படவில்லை என்ற செய்தியை சொன்னேன். நிதி ஆணை அளித்து விட்டால் விரைவில் கட்டிடத்தை தொடங்கி விடலாமா? என்று கேட்டார். எனக்கு ஏன் அந்த கேள்வி கேட்டார் என்று விளங்கவில்லை. நான் தொடங்கிவிடுவேன் என்று உறுதி அளித்தேன்.

திருக்குவளை ஊர் மக்கள் கட்சி பேதமின்றி அக் கல்லூரி துவக்க விழாவில் கலந்துகொண்டது நெகிழ்ச்சியாக இருந்தது.

கல்வியின் பயன்பாடு அறிவு. அறிவின் பயன்பாடு சமூகசேவை மனித நேயம். கல்வி சமூக விளை பொருள். இது கலைஞர் கற்றுத்தந்த பாடம்.

கல்வி சமூக விளைபொருள் என்பதை மாணவர்கள் வெளிப்படுத்தும் வகையில் திருச்சி அண்ணா பல்கலைக் கழகத்தின் எல்லா உறுப்பு கல்லூரிகளிலும் IN NOVAT என்ற புத்தாக்க மன்றம் தொடங்கினோம்.

திருக்குவளையில் இந்த திட்டத்தை அண்ணா பல்கலைக்கழகம் செயல்படுத்தியது.

இரண்டே மாதங்களில் திருக்குவளை உறுப்பு கல்லூரி ஆசிரியர்கள் துணை கொண்டு மாணவர்கள் இத்திட்டத்தை செயல்படுத்தினர்.

கற்கும் போதே தங்கள் கல்வி அறிவு மூலம் சமூக மாற்றம் உருவாக்க முடியும் என்று மாணவர்கள் நிரூபித்த தருணம் அது.

அதன்பின் தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர் ராஜேந்திரன் அவர்கள் என்னை தொலைபேசியில் அழைத்து திருக்குவளையில் எனது தலைமையில் நிறைவேற்றப்பட்ட மேம்பாட்டு திட்டங்கள் குறித்து, முரசொலியில் கலைஞர் அவர்கள் பாராட்டி எழுதி இருப்பதாக கூறினார். இது எனது வாழ்க்கையில் கிடைத்த அங்கீகாரமாக கருதி மகிழ்ந்தேன்.

கலைஞர் நடைமுறைப்படுத்திய கல்வி திட்டங்களும் சமூக நலத்திட்டங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. கல்வித்திட்டங்களையும், சமூக நலத்திட்டங்களையும் வேறு வேறு காலத்தில் கலைஞர் செயல்படுத்தியிருந்தால் தமிழ்நாடு விரைந்து வளர்ச்சி அடைந்து இருக்காது.

சமூக பாதுகாப்பு இருந்தால் தான் கல்வி வளர்ச்சி அடைய முடியும். அதுபோல் கல்வி வளர்ச்சி இருந்தால் தான் சமூக பாதுகாப்பு அடையும் என்ற தொலைநோக்கு அவருக்கு இருந்ததால் தான் இந்த திட்டங்களை ஒருங்கிணைந்து செயல்படுத்தினார். மற்றவர்கள் விரிவுபடுத்தினர். ஏழைகள் வாழ்வு மேம்பட குடிசை மாற்று வாரியம் அமைத்தார். வசிப்பிடம் அற்றவர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கப்பட்டது. இருப்பிடம் என்பது மிகப் பெரிய பாதுகாப்பு இந்த சமூக பாதுகாப்பு கல்வியை நோக்கிய தேடல்களை ஊக்குவித்தது. உணவு பாதுகாப்பிற்காக பொதுவிநியோகத் திட்டம் துவங்கினார். இது கல்விப்புரட்சிக்கு மறைமுகமாக ஆதாரமாக இருந்தது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

8 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு ரூ.5000/ திருமண உதவித்தொகையாக வழங்க கலைஞர் ஆணையிட்டார். பெண்கள் நலவாரியம், பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, திருநங்கைகளுக்கு அங்கீகாரம் போன்ற கலைஞரின் முன்னோடி திட்டங்கள் இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்தது.

இலவச கண் மருத்துவ சிகிச்சை முகாம், கலைஞரால் துவங்கப்பட்டது. பல லட்சம் கிராமப்புற மக்கள் கண்ணொளி பெற்றார்கள்.

மனிதனை மனிதன் இழுக்கும் கை ரிக்சா முறை ஒழிந்தது கலைஞர் ஆட்சியில் தான். மாற்றுத் திறனாளிகள் நலவாரியம் அமைந்தது கலைஞர் ஆட்சியில் தான்.

எப்போதோ ஒரு சாதனை நிகழ்ந்தால் அற்புதம் என்று சொல்லுவோம். கலைஞர் சாதனைகளை தொடர் நிகழ்ச்சிகளாக மாற்றி அதிசயம் செய்தவர்.

கலைஞர் உடனான எனது சந்திப்புகள் அத்தனையும் இயல்பாய் நடந்தவை. எந்த நோக்கத்திற்காகவும், காரணத்திற்காகவும் நடந்தது அல்ல. அந்த சந்திப்பின் பயன் அந்த சந்திப்போடு முடிந்துவிடும். எந்த ஒரு சந்திப்பும் மற்றொரு சந்திப்பின் தொடர்ச்சியாக இருக்காது. அவரோடு பயணித்த எவரொருவரோடும் சந்திப்பு நிகழாது. இயல்பாய் அமைந்தது. என் இயல்பும் அதுவே. ஒவ்வொரு சந்திப்பிலும் அவர் என்னுள் தாக்கம் ஏற்படுத்தினார்.

இப்படி கலைஞரின் செயல்களால் ஈர்க்கப்பட்டு அவரோடு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்பில் இருந்தவர்கள் இப்போதும் இருக்கிறவர்கள் எண்ணிக்கையில் அதிகம். கோடானு கோடி மக்கள் அவர் காட்டிய வழியில் சமூக நீதி கொள்கையில் இன்றளவும் பிடிப்புடன் இருப்பவர்கள்.

அவர்கள் அடையாளம் காணப்படாதவர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளாதவர்கள் அல்லது மறக்கப்பட்டவர்கள் அல்லது மறைக்கப்பட்டவர்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஓர் இலக்கிய வாதியாக, அரசியல் வாதியாக, திரைப்படக் கதாசிரியராக வசன கர்த்தாவாக இருந்தாலும். ஆட்சி தலைமைப் பொறுப்பை அவர் மிகத் திறம்பட ஆற்றும் செயல் கண்டு வியந்து போனேன்.

கலைஞர் உருவாக்கிய வள்ளுவர் கோட்டம், கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை இவற்றைக் காணும்போது, திருக்குறள் படிக்க தூண்டுகோலாக இருக்கும்.

பூம்புகார் கலைமாடம் காணும் போது சிலப்பதிகாரம் படிக்கத் தோன்றும்.

தான் மறைந்தாலும், தனது உடல் உறுப்புகளை தானமாக வழங்கியவர், அடுத்தவர் உடலில் கண்களாக, இதயமாக வாழ்வது போல...

கலைஞர் மறைந்தாலும் அவர் காத்து வந்த சமூக நீதி, இட ஒதுக்கீடு, போன்றவற்றை திட்டங்களாக செயல்படுத்தி மக்கள், மாணவர்கள், தொண்டர்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

மனிதர்கள் பிறந்து மறைகிறார்கள் - கலைஞர் மறைந்தும் வாழ்கிறார்.



## எந்த காலக்கட்டத்திலும் தமிழ் அழியவில்லை!


களப்பிரர்கள் ஆண்டிருக்கிறார்கள் தமிழ் நாட்டை ! சேர,சோழ, பாண்டியர் ஆண்டிருக்கிறார்கள் தமிழ்நாட்டை! இருண்ட காலம் தமிழ்நாட்டை மொய்த்திருந்தது! அதுவும் நமக்குத் தெரியும் வரலாறு கூறுகிறது. பல்லவர்கள் ஆண்டிருக்கிறார்கள். அந்தக் காலத்திலே,வடமொழிக்குத்தான் ஆதிக்கம் இருந்தது.

ஏன், பிற்காலச் சோழர்களிலே ராஜராஜ சோழன் ஆண்டிருக்கிறான். அவன் காலத்திலே கூட தமிழுக்குத் தனித்த உயர்வில்லை, வடமொழிக்குத்தான் அன்றைக்கும் ஆதிக்கம் இருந்தது. இத்தனையும் கடந்து ஒவ்வொரு காலக்கட்டத்திலும், ஒவ்வொரு நிலையிலும், தமிழ் தன்னைத் தாழ்த்திக் கொள்ளாமல், புலவர்கள் வாயிலாக புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் கூறியதைப் போல் “தமிழ் எங்கள் இளமைக்குப் பால், புலவர்க்கு வேல்” என்பதைப் போல், புலவர்கள் கையிலிருந்த காரணத்தால், தமிழ் அழியவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறார் !

**- கலைஞர்**

# கலைஞரும் கல்வியும்





டாக்டர் பொன். கோதண்டராமன் (பொற்கோ)
சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

தமிழ்நாடு எப்போதும் கல்விக்கு மிகப் பெரிய அளவுக்குச் சிறப்பிடம் தந்த மாநிலம். இந்த அளவுக்குத் தொடர்ந்து கல்விக்குச் சிறப்பிடம் தந்ததாக வேறொரு மாநிலத்தையோ, நாட்டையோ காட்ட முடியாது. பள்ளிப் பருவத்திலிருந்தே கல்விக்கு மிகச் சிறப்பான இடம் தந்து வளர்ந்தவர் கலைஞர். மிக இளம் வயதிலேயே கல்விக்கு இந்த அளவுக்குச் சிறப்பிடம் தந்தது நமக்கு வியப்பாகத்தான் இருக்கிறது. பொது மக்களின் நலனுக்காக இடைவிடாமல் சிந்தித்தவர் அவர். அதோடு வரலாற்றுக் கண்ணோட்டம் உடையவராகத் தமிழ்நாட்டு வரலாற்றை நன்றாகத் தெரிந்து கொண்டவர் அவர். இந்த வரலாற்று உணர்வு அவருடைய வாழ்வில் பல் வேறு வகையில் வியப்புக்குரிய வகையில் பயன் பட்டிருக்கிறது.

இயல்பாகவே நகைச்சுவை உணர்வு கொண்டவர் கலைஞர். இன்ப துன்பம் எது வந்தாலும் அங்கெல்லாம் அவருடைய நகைச்சுவை உணர்வு தெளிவாக வெளிப்படும். அழுதுகொண்டிருப்பவரைக்கூட அவரிடம் இந்த உணர்வு சிரிக்க வைத்துவிடும். இவையெல்லாம் கல்வி உணர்வோடு கலந்துதான் வெளிப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு வரலாற்றில் மிகப்பெரிய அளவுக்குக் கல்விக்கு இடம் தந்தவர் அவர். காமராசர் வளர்த்தெடுத்த கல்வி உணர்வைத் தங்குத் தடையில்லாமல் இடையூறு இல்லாமல் மேலும் சிறப்பாக கலைஞர் வளர்த்தார். மொழியுணர்வுக்கு மிகப்பெரிய இடம்கொடுத்து இளைய சமுதாயத்திடம் தமிழ் உணர்வையும் தமிழ்ப் பற்றையும் அவர் வளர்த்தெடுத்திருக்கிறார்.

இலக்கியத்தைப் பொறுத்தவரையில் அவர் தொடாத காலப்பகுதி இல்லை, தொடாத இலக்கியப் பகுதியும் இல்லை. சங்க இலக்கியம் முழுமையும் அவர் பார்வைக்கு இடம் கொடுத்திருக்கிறது. மிக நுட்பமான இடங்களையெல்லாம் தொட்டுக் காட்டிச் சங்கத்தமிழை மக்கள் மனங்கொள வழங்கியிருக்கிறார். திருக்குறள், சிலப்பதிகாரம், தொல்காப்பியம் ஆகிய இந்த அரிய நூல்களிலெல்லாம் அவருடைய பார்வை பட்டிருக்கிறது. தொல்காப்பியத்தைத் தொடாதவர்களும் தொல்காப்பியம் என்ற நூலைக் கேள்விபடாதவர்களும் தொல்காப்பியத்தோடு தொடர்பு கொள்ளுகிற அரிய வாய்ப்பினை உருவாக்கியவர் கலைஞர் தானே. பொதுமக்களுக்கு இவற்றில் ஆர்வம் ஏற்பட அவர் வழி வகை செய்திருக்கிறார். தமிழ் இலக்கியங்களில் எப்போதும் வரலாற்றையும் வாழ்வியலையும் பொதிந்து வைத்து மக்களுக்கு ஊட்டியிருக்கிறது. அவருடைய எழுத்துகளில் இந்தச் செய்திகள் எல்லாம் வெளிப்படுகின்றன. கல்விக்கு மிகப்பெரிய இடம் கொடுத்து கலைஞர் வெறும் எழுத்தையும் பேச்சையும் கற்பிக்கவில்லை. அவருடைய எழுத்துகளில் வரலாற்றையும் பண்பாட்டையும் ஆளுமை உருவாக்கத்தையும் வழங்கியிருக்கிறார்.

மொழிக்கு இந்த அளவில் அக்கறைகாட்டி ஆக்கம் செய்தவர்கள் வேறு யார்? திருக்குறளுக்கு இவர் செய்த அளவுக்குச் சிறப்பு செய்தவர்கள் வேறு யார்? தமிழறிஞர்களை இவர் போற்றிய அளவுக்குப் போற்றியவர் வேறு யார்? மண்ணுக்கும் மக்களுக்கும் மொழிக்கும் இடைவிடாது பாடுபட்ட பெருந்தகை அவர்.

நடுநிலை நோக்கோடு ஆழமாய் எண்ணிப் பார்த்தால் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் வரலாற்றிலும் இவரைப் போல் ஈடுபாடு கொண்டு பணி செய்தவராக வேறு ஒரு தலைவரை நம்மால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் எண்ணிப் பார்த்தால் முதல்வராக இவர் தமிழ்நாட்டிற்குக் கிடைத்தது ஒரு பெரும்பேறு என்று சொல்ல வேண்டும். நன்றியுணர்வோடு தமிழ்நாடு அவரைப் போற்றுதல் எப்போதும் தகும்.

# அண்ணா வழிநின்று எந்நாளும் செயல்படுவோம்!



தாழ்த்தப்பட்ட மக்கள் - பிற்படுத்தப்பட்ட மக்கள் - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் - நடுத்தர மக்கள் - அலுவலர்கள் - அனைத்துத் தொழிலாளர்கள் எல்லோரது பிரச்சினைகளையும் மையமாக வைத்து, அரசின் சக்கரம் சுழல வேண்டுமென்ற அண்ணா அவர்களின் வழி நின்று, நாளும் செயல்படும் இந்த அரசு !

நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை காத்து, தமிழர் கொற்றம் சிறக்கப் பணியாற்றுவோம் !

நாட்டுக்குழைத்த நல்லோர் வழியில் நடைபோடுவோம்!

உத்தமர் காந்தியடிகள் 'உண்மையே கடவுள்' என்றார்!

அறிஞர் அண்ணா 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் !

'கைமாறு கருதாமல் கடமையைச் செய்' என்றார் தந்தை பெரியார் !

'உழைப்பே உயர்வு தரும்' என்றார் பெருந்தலைவர் காமராசர் !

இவர்தம் எண்ணமெல்லாம் தமிழர்தம் வாழ்வில் வண்ணமாகப் பொலிவுறத் தக்கபடித் தொண்டாற்றத் தூய சபதம் ஏற்றிடுவோம் !

- கலைஞர்

# முத்தமிழ் அறிஞரும், கல்வியில் சமூகநீதியும்!



“ஒருவர் பெற்ற கல்வி என்பது மற்றவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு இந்த சமூகத்தையும் உலகத்தையும் தான் பிறந்த போது இருந்த நிலையை விட உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் அறிவைத் தருவது”

என்ற அமெரிக்க மக்கள் உரிமைப்போராளி மரியன் ரைட் எடில்மேன் அவர்களின் கருத்திற்கேற்ப, தமிழ்ச்சமூகத்தை கல்வியிலும், சமூக நிலையிலும், தான் பிறக்கும்போது இருந்தநிலையைவிட உயர்த்திக் காட்டியவர் தலைவர் கலைஞர். கல்வி என்பது கட்டட வகுப்பறைகளில் கற்றுக்கொள்வது மட்டும் இல்லை. கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு காலமெல்லாம் கற்றுக்கொண்டே இருப்பதற்கு சமூகத்தில் நிறைய இருக்கிறது. அப்படி கிடைத்தநேரத்திலெல்லாம் கற்றுக் கொண்டே இருந்தவர் தலைவர் கலைஞர். பட்டப்படிப்பு பெறவில்லை ஆயினும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா என்ற இருபெரும் பல்கலைக்கழகங்களில் இருந்து அவர் பெற்றுக் கொண்ட சமூக அரசியல் பட்டங்கள் அதிகம்.

அகில இந்திய அளவில் எழுத்தறிவு 67% ஆக இருக்கும்போது தமிழ்நாட்டில் 80.09%ஆக இருக்கிறது. 1965ல் 37.01%ஆக இருந்த எழுத்தறிவு 2023ல் 80.09% சதவீதமாக வளர்ந்து வந்திருப்பதன் பின்னணியில், தலைவர் கலைஞரின் பங்களிப்பு மகத்தானது. குறிப்பாக, இந்த சமூகத்தை கல்வி நோக்கி நகர்த்தியதில் பெரும்பங்களித்த முத்தான மூன்று திட்டங்களை இங்கு பார்க்கலாம்.

முதலாவதாக,தலைவர் கலைஞர் அரசு ஆரம்ப பள்ளிகளில் ஆசிரியைகளையே நியமிப்பதற்கான அரசாணை பிறப்பித்தபோது சில பேர் கண்ணுக்கு அது வாக்கு அரசியலாக தெரிந்தது. ஆனால் அடிப்படையில், அது நிறைய மாணவர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அழைத்து வந்தது. நான் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தில், எங்கள் ஆரம்ப பள்ளியில் ‘மீசை வாத்தியார்’என்ற ஒரு கண்டிப்பான ஆசிரியர் இருந்தார். பெரிய மீசை, கரகரத்த குரல், கண்டிப்பான பார்வை என்று 10வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு அவர் பயமுறுத்துகிற பூச்சாண்டியாகவே தெரிவார்.

அதனாலேயே எங்கள் கிராமத்தில் சிலபல மாணவர்கள் பள்ளிக்கு வர பயந்தார்கள். வந்தவர்களில் சிலர், பாதியிலேயே ஓடிப் போனார்கள். ஆண் பிள்ளைகள் தாக்குப் பிடித்தாலும், பெரும்பாலான பெண் பிள்ளைகள்,‘பள்ளிக்கூட வாசலை மிதிப்பதில்லை’ என்று அடம்பிடித்து அழுவார்கள். அன்றைய சமூகமும், பெண் பிள்ளைதானே!, படிக்காவிட்டால் என்ன? என்று விட்டு விடுவார்கள். ஒழுக்கமும், கட்டுப்பாடும் கலந்த கல்வியை கற்றுத்தருவதுதான் ‘மீசை வாத்தியாரின்’ நோக்கம். அது உண்மைதான் என்றாலும், பயத்தில் சில பேர் பள்ளிக்கூடம் வராமல் போனதற்கு அவர் மீதான பயமே மறைமுக காரணம்.

அநேகமாக, 1970-80களில், பள்ளிக்கல்வி பயின்ற பலருக்கும் அவரவர் பள்ளிகளில் இப்படி ஒரு மீசை வாத்தியார் அனுபவம் இருந்திருக்கலாம். இதை உணர்ந்துதானோ என்னவோ, ஆரம்ப பள்ளிகளில் ஆசிரியைகளையே நியமிப்பதற்கான ஆணையைப் பிறப்பித்தார் தலைவர் கலைஞர். இதன் விளைவாக வீட்டில் தாயைப் பார்ப்பதைப் போலவே குழந்தைகள் பள்ளியில் ஆசிரியைகளைப் பார்த்தார்கள். அதனால் ஆரம்ப பள்ளிகளில் மாணவர் சேர்க்கைவிகிதம் மெல்ல மெல்ல அதிகரிக்க ஆரம்பித்தது. குறிப்பாக, பெண் பிள்ளைகள் பள்ளிக்கு வருவதும் அதிகரித்தது.

இரண்டாவதாக, ஆரம்பப் பள்ளிக்குள் நுழைந்த இந்தக் குழந்தைகளை இடைநிலைக் கல்வி வரைக்குமாவது கொண்டு வந்து விட வேண்டும் என்று நினைத்த தலைவர் கலைஞர், ஆண்பிள்ளைகளை படிக்க வைக்க நினைத்த தமிழ்ச்சமூகம் பெண்கல்விக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதை உணர்ந்து பெண்பிள்ளைகளைப் படிக்க வைப்பதை ஊக்கப்படுத்தும் விதமாக ஜூன் 3, 1989ல், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் கல்வி உதவித்தொகைத் திட்டத்தை அறிவித்தார். அதன்படி, எட்டாம் வகுப்பு படித்த பெண்களுக்கு திருமண உதவித்தொகை ரூ.5000/என்று அறிவித்தார் தலைவர் கலைஞர். அது ரூ.10,000/, ரூ.25,000/ என்று வளர்ந்து இன்று கல்லூரியில் பயிலும் கல்லூரி மாணவியருக்கு மாதம் ரூ.1000/ கல்வி உதவித்தொகை என வளர்ந்திருக்கிறது. ‘கல்வியில் நாற்றங்கால்’என்று அழைக்கப்படும் ஆரம்பப் பள்ளிக் கல்விக்குள் மாணவியரை அழைத்து வந்து மெல்ல அவர்களை மேல்நிலை, உயர்நிலை, பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு என்று இந்த தமிழ்ச் சமூகத்தை அழைத்து வந்ததற்கு விதை போட்டது தலைவர் கலைஞரின் சீரியசிந்தனையில் உதித்த சிறப்பான கல்வித் திட்டங்கள்தான்.



பேராசிரியர் **கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்**
கழக செய்தித் தொடர்புச் செயலாளர்

மூன்றாவதாக, சமூக நீதியை நிலைநிறுத்தும் வண்ணம் கல்வியில்,கிராமப்புற மாணவர்களுக்கு 15% இடஒதுக்கீடு, மிக பிற்படுத்தபட்டோருக்கு 20% இடஒதுக்கீடு தந்து இலவச கல்வி தந்தது, அருந்ததியினருக்கு தனி இடஒதுக்கீடு, பழங்குடியினருக்கு 1% இடஒதுக்கீடு, அதிலும் குறிப்பாக, ஒற்றைச் சாளர முறையில் (1997-1998) கல்லூரி மற்றும் பாடப் பிரிவினைத் தேர்ந்தெடுக்கும் வகை கொணர்ந்தது மற்றும் மிக பிற்படுத்தப்பட்டோருக்கு 20% இடஒதுக்கீடு என்று நடைமுறைப்படுத்திய திட்டங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பிரிவினரிடையே கல்வி நோக்கிய சீர்மிகு பயணத்தைத் துரிதப்படுத்தியது. இந்த இடஒதுக்கீட்டு முறை கல்வியில் தேவை இல்லை என்று நினைத்த ஓர் இளைஞன் பின்னாளில் தனக்கே அது பயன்பட்ட போதுதான் அதன் அருமை புரிந்தது. எவ்வாறு எனில், அந்த இளைஞனும் அவன் நண்பனும், அண்ணா பல்கலைக்கழகத்தில் முதுகலை கணினிப் பொறியியல் (M.E. Computer Science) படிப்பதற்கு நுழைவுத்தேர்வு எழுதி, முறையே 31/50 மற்றும் 27.5/50 மதிப்பெண் பெற்றனர். அவர்கள் இருவரும் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் ஒரே கல்லூரியில் சேர அனுமதி கிடைத்தால்தான் முதுகலைப் படிப்பில் சேர்வது,

ஒருவருக்கு கிடைத்து, மற்றொருவருக்கு கிடைக்கவில்லை என்றால் முதுகலை பட்டப்படிப்பு படிப்பதில்லை என்று நட்பாய்ந்த ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஒற்றைச் சாளர மாணவர் சேர்க்கை முறையில், நினைத்த கல்லூரியில் இருந்த இரண்டே காலி இடங்களில், 31 மார்க் எடுத்த இளைஞனுக்கு முதலில் அனுமதி கிடைத்தது.

ஆனால், மீதமிருந்த அந்த ஒரு காலி இடம் இரண்டாவது மாணவனுக்கு கிடைக்குமா? கிடைக்காதா? படிப்போமா? படிக்க மாட்டோமா? என்ற பதற்றத்தில், இருவரும் ஒருவரை ஒருவர் பரிதவித்து பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் அந்த இரண்டாவது மாணவனின் பெயர் அழைக்கப்படும் வரை அது காலியாகவே இருந்தது. அது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீடு. நல்வாய்ப்பாக, அந்த மாணவன் அதே மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் என்பதால் சேர்க்கை அனுமதி கிடைத்தது. அப்போதுதான், மாணவர் சேர்க்கையில் இடஒதுக்கீட்டின் அருமை அந்த இளைஞனுக்கு புரிந்தது. அவன் மனதிற்குள் தலைவர் கலைஞரின் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 20% இடஒதுக்கீட்டு ஆணைதான், தன்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் முதுகலை கணினிப் பொறியியல் பட்டதாரியாக்க வாய்ப்பு வழங்கியது என்பதை உணர்ந்து அவர் மீதான மரியாதையும், அதற்கான நன்றி விசுவாசத்தின் விளைவாக சமூக நீதிக்கான குரல்களில் தன் குரலையும் இணைத்துக் கொண்டான். அந்த இளைஞன் வேறு யாருமல்ல, இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் கான்ஸ்டன்டைன் எனும் நான்தான்.

இது போன்றே, அனைத்து சிறாருக்கும் 14 வயது வரை இலவச, கட்டாய தொடக்க கல்வி, மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண சலுகை, பன்னிரண்டாம் வகுப்பு வரை இலவச கல்வி, சமச்சீர் கல்வி, அரசு மேனிலைப்பள்ளிகளில் கணினிக் கல்வி,10 மற்றும் 12ஆம் வகுப்பில், தமிழினை ஒரு பாடமாக படித்து முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் மாணவர்களின் உயர்கல்விக்கான செலவை அரசே ஏற்கும் திட்டம், முதல் தலைமுறை மாணவர்களுக்கு கல்விக் கட்டண சலுகை, கல்விக்கடன் ரத்து, பொறியியல் பட்டப்படிப்பிற்கான நுழைவுத்தேர்வு ரத்து, உயர்கல்வித்துறை உருவாக்கம், 43 சுயநிதி பொறியியல் கல்லூரிகள், 59 பல்தொழில்நுட்ப பயிலகங்கள், 67 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்க அனுமதி, மாவட்டங்கள் தோறும் அரசு மருத்துவமனைகளுடன் கூடிய அரசு மருத்துவக் கல்லூரிகளை நிறுவியது, அகில இந்திய அளவில், முதன் முதலில் அம்பேத்கர் பெயரில் சட்டக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தை நிறுவியது, 12 அரசு பல்கலைக்கழகங்களை நிறுவியது, திருச்சியில் தேசிய சட்ட கல்லூரியை நிறுவியது, தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம் நிறுவியது, தொழிற்முறைக் கல்வியில் வருமான உச்ச வரம்புக்கு கீழ் உள்ள பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இலவச கல்வி இளம்கலை, பட்டப்படிப்பு வரை தந்தது, தாழ்த்தப்பட்டோருக்கு இலவச கல்வி தந்தது என்பன போன்றவை தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியில் தலைவர் கலைஞரின் பெரும்பங்கில் ஒரு சிறுபகுதி.

படிப்பை நோக்கி மாணவர்களை அழைத்து வந்த அதே நேரத்தில், படித்த இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்கிடும் வண்ணம் தமிழகத்தில், 1997ல், தகவல் தொழில்நுட்ப பூங்கா - டைடல் பார்க் மற்றும் ELCOT, IT Highway,சிறப்பு பொருளாதார மண்டலம், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற்பேட்டை நிறுவியது, தமிழ்நாடு தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் உருவாக்கம் போன்ற திட்டங்களை தலைவர் கலைஞர் செயல்படுத்திக் காட்டினார். கல்வி கற்க வந்தால் ஊக்கத்தொகை, உதவித்தொகை, படித்து பட்டம் பெற்றால் வேலை வாய்ப்பு என்று கல்வியின்பால் தமிழகம் சிறந்து விளங்குவதில் தலைவர் கலைஞரின் தொலைநோக்கு பார்வையும், சமூக சிந்தனை கலந்த கல்வி வளர்ச்சித் திட்டங்களும் ஏற்படுத்திய நேர்மறை மாற்றங்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கவை.

---



## முயற்சிகள் முழுப் பயனைத் தரவில்லை!

**கா**யும் கதிரவனை மறைக்கக் கையையே குடையாகக் கொண்டும், மழையில் ஒதுங்க மரத்தடியையே மாளிகையாகப் பாவித்தும், நமது மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆண்டவனின் புத்திரர்கள் என்று அன்பொழுக அழைக்கப்படுகிற அரிசனங்கள் எனப்படும் ஆதிதிராவிடர் லட்சோப லட்சம் பேர் வாழுகின்ற வீடுகள், குக்கிராமத்துக் குப்பைத் தொட்டிகளாக இருக்கின்றன.

உணவு வழங்கும் உழவன், மானங் காக்க உடை தரும் நெசவாளி, வியர்வைத் துளிகளை, தன்னைப் பெற்றெடுத்த இந்திய மண்ணுக்குப் பன்னீர்த் துளிகளாகத் தெளித்துக் கொண்டிருக்கும் தொழிலாளி, சுரங்கம் தோண்டுவோன், முத்துக் குளிப்போன், மீனவன் - உலைக் கூடத்தில் வதைபடுவோன் - மண் சுமப்போன் - மரம் ஏறுவோன் உடை வெளுப்போன் - முடி திருத்துவோன் - ஏதோ இரண்டெழுத்துப் படித்து, எழுத்தர் பணி புரிவோன் - இன்னோரன்ன மக்கள் தொகுதியினர் வாழ்விலே இன்பத் தென்றல் வீசிடவில்லை. அதற்காக முயற்சிகள் எடுக்கப்படாமல் இல்லை. ஆனால், அந்த முயற்சிகள், முழுப் பயனையும் அளித்திடத்தக்க வண்ணம் அமைந்திடவில்லை.

அய்ந்து பேருக்காகத் தயாரிக்கப்படும் விருந்து, பரிமாறப்படுகிற நேரத்தில் பத்துப் பதினைந்து பேருக்கு என்ற நிலை பெற்றுவிடுமேயானால், அதனை அருந்தி மகிழ்வதில் முழுமை எப்படி இருந்திட இயலும்?

- கலைஞர்

# பெண்குலம் இருக்கும்வரை கலைஞரின் புகழ் இருக்கும்!

“ஏதோ திராவிட இயக்க ஆட்சி வந்துதான் தமிழர்களைப் படிக்க வைத்ததுபோலப் பேசுகிறார்களே! சங்ககாலப் புலவர்களையும், இளங்கோ வடிகளையும், வள்ளுவரையும் படிக்கவைத்தது இவர்களா?” என்று சில போலி தமிழ்த்தேசியர்கள் கேட்கிறார்கள். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சங்க காலத்தில் கல்விக்கான வாய்ப்பு சகலருக்கும் இருந்தது; சாதி பார்த்து பாலினம் பார்த்து தரப்பட வில்லை. அதனால்தான் பல பகுதிகளைச் சார்ந்த புலவர்களும், பெண்பால் புலவர்களும் இருந்தார்கள்.

அடுத்துவந்த களப்பிரர் காலத்தில்கூட சமணம், புத்தத்தின் பெண் துறவிகள் ஞானிகளாக இருந்தார்கள் என்பதை சிலப்பதிகாரமும், மணிமேகலையும், உணர்த்துகின்றன. அறநெறிகளைப் போதித்த சிலப்பதிகாரத்தின் கவுந்தியடிகளும், பிறருடன் பிரமாதமாகத் தத்துவவாதம் செய்த மணிமேகலையும் தக்க இலக்கியச் சான்றுகள்.

ஆனால், அதற்குப் பிந்திய சாம்ராஜியவாதிகளின் காலத்தில் வருணாசிரமம் ஓங்கி நின்று சாதி பார்த்துக் கல்வி என்றது, பெண் கல்வி மறுக்கப்பட்டது; சமஸ்கிருத ஆதிக்கம் கிளம்பி வந்தது. பக்தி இயக்க காலம் எனப்பட்டதில் அனேகமாக, சைவத்தில் ஒரு காரைக்கால் அம்மையாரும், வைணவத்தில் ஓர் ஆண்டாளும்தான்! மற்றபடி எல்லாம் ஆண்பால் புலவர்களே. பஞ்சம, சூத்திர மக்கள் கல்வியிலிருந்து தூர விலக்கி வைக்கப்பட்டார்கள்.

இதற்கான ஆதாரம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் துல்லியமாக வெளிப்பட்டது. 1901 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மெட்ராஸ் ராஜதானி பற்றி கூறியது: “1000 பேருக்கு 63 பேர்தான் படித்திருந்தார்கள். பெண்கள் என்று பார்த்தால் வெறும் 9 பேர்தான். 1000 ஆண்களில் கிறிஸ்தவர்களில் 198 பேரும், முசல்மான்களில் 141 பேரும், இந்துக்களில் 116 பேரும் படித்திருந்தார்கள்.

வேறுவகையில் கூறினால் இந்துக்களில் 94% பேரும், முசல்மான்களில் 93% பேரும், கிறிஸ்தவர்களில் 86% பேரும் படிக்காதவர்கள்”.

அதாவது, இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் அன்றைய சென்னை மாகாணத்தில் 6% பேர்தான் படித்திருந்தார்கள். அதிலும் பெண்களோ 1%க்கும் குறைவு. இதிலே இந்துக்கள் நிலைதான் படு மோசம். ஆனால் அவர்கள்தாம் மக்கள் தொகையில் ஆகப் பெரும்பாலோர். இதற்குக் காரணம் நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பு என்பதோடு, அது இங்கே வருணாசிரமம் எனும் சாதிய சமூக வடிவமாக இருந்தது.

அந்தக் கணக்கெடுப்பு கூறியது: “பிராமணர்கள் 1000 பேர்களில் 308 பேருக்கு எழுதப்படிக்கத் தெரியும். அவர்களில் மலையாள, தமிழ், தெலுங்கு பிராமணர்கள் இந்த வரிசைப்படி முன்னணியில் இருந்தார்கள். சமூகத்தின் பிற பகுதியினரை விட பிராமணர்கள் அதிகம் படித்திருந்தது எதிர்பார்க்க வேண்டியதே.


பல தலைமுறைகளாக அந்த சாதி அனைத்து அறிவையும் தனது கைகளில் வைத்திருந்தது. படித்த சூத்திரனை தொற்றுநோய் போல ஒதுக்கிவைக்க வேண்டும் என அறிவிக்கும் சாஸ்திரங்களை அவர்கள் எழுதினார்கள். அதைவிட ஆச்சரியம் அதை சூத்திரர்களும் ஏற்கும்படி செய்திருந்தார்கள்”. (Census of India 1901 vol.15 part 1.report by W. Francis)

அந்நியன் சொல்கிறான் என்பதற்காக உண்மை பொய்யாகி விடுமா? பொதுவாகக் கல்வியறிவு குறைவாக இருக்க, பிராமணர்களில் மட்டும் 30% பேர் படித்தவர்களாக இருந்தது இந்திய நிலப்பிரபுத்துவத்தின் பிராமணிய வடிவத்தை துல்லியமாகக் காட்டியது. பல்லவ சாம்ராஜியம் துவங்கி நாயக்கர் ஆட்சி காலம் வரை இதுதான் நிலைமை. ஆங்கிலேயர் ஆட்சி முதலாளித்துவத்தை கொண்டு வந்ததால் அது பெண்கள் உள்ளிட்ட அனைவருக்குமான ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்தியது. அதையும் பயன்படுத்திக் கொண்டவர்கள் பிராமணர்கள் உள்ளிட்ட உயர் சாதியினர்தான். அடித்தட்டு சூத்திரர்கள், பஞ்சமர் மற்றும் அனைத்துப் பெண்களின் கல்வி நிலை ஆங்கிலேயர் ஆட்சியிலும் பரிதாபமாகவே இருந்தது.

இதிலொரு காத்திரமான மாற்றம் சுதந்திரப் போராட்ட காலத்திலும், சுதந்திரத்திற்குப் பிந்திய காலத்திலும்தான் நடந்தது. அதற்குக் காரணம் தந்தை பெரியார், கம்யூனிஸ்டு சிங்காரவேலர், பண்டிதர் அயோத்தி தாசர், போன்றவர்கள் அனைவருக்குமான கல்வியை வலியுறுத்தி நடத்திய வலுவான பரப்புரை. அதன் தாக்கம் காங்கிரசிலும் எதிரொலித்தது. அதனால்தான் ராஜாஜியின் குலக்கல்வி சதித் திட்டத்திற்கு காமராஜர் தலைமையில் காங்கிரசுக்குள்ளேயே எதிர்ப்பு எழுந்தது. அதன் நீட்சியாக காமராஜர் ஆட்சியில் மதிய உணவுத் திட்டத்துடனான ஆரம்பக் கல்வி அதிகரித்தது.

இதற்கான தரவை 1971 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு தருகிறது: “தமிழ்நாட்டில் கல்வியறிவு படைத்தவர்கள் 39% பேர். ஆண்கள் 51% பேர் என்றால், பெண்கள் 27% பேர்”. இதை எழுபது ஆண்டுகளுக்கு முந்திய நிலையோடு ஒப்பிட்டுப் பாருங்கள், ஏற்பட்டுள்ள சத்தான மாற்றம் புரியும். (Census of India 1971 series 19 Tamilnadu part 1)


அதற்குப் பிந்திய நாற்பதாண்டு நிலைமை என்ன? மோடி அரசு இன்னும் 2021க்கான மக்கள்தொகைக் கணக்கெடுப்பைச் செய்யவில்லை. எனவே 2011 கணக்கெடுப்பை ஆதாரமாகக் கொள்ள வேண்டியுள்ளது. அது கூறியது: “தமிழ்நாட்டில் கல்வியறிவு பெற்றவர்கள் 80% பேர். ஆண்கள் 87% பேர் என்றால், பெண்கள் 73% பேர்”. ஒரு மாபெரும் தாவல் நடந்துள்ளது. இந்தக் காலம் முழுக்க ஆட்சியில்



பேராசிரியர் அருணன்

இருந்தது தி.மு.க. அல்லது அ.தி.மு.க. (Census of India 2011 Tamilnadu) முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வராக இருந்தும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தும் இந்த மகத்தான மாற்றத்திற்குப் பெரும் காரணியாகத் திகழ்ந்தார்.

1971இல் புதிய இடஒதுக்கீடு ஆணை பிறப்பித்தார். அது அரசுப் பணிகளுக்கு மட்டுமல்லாது கல்வி நிறுவனச் சேர்க்கைக்கும் பொருந்தியது. அதன்படி பொதுப் போட்டியில் 8% குறைக்கப்பட்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கு கூடுதலாக 6%, எஸ்.சி.எஸ்.டி. பிரிவினருக்கு கூடுதலாக 2% வழங்கப்பட்டது. பி.யு.சி. வரை கல்வியை இலவசமாக்கினார்; பாடப் புத்தகங்களை மலிவான விலைக்குத் தந்தார்.



1977இல் முதல்வரான எம்.ஜி.ஆர். 1979இல் பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கான இடஒதுக்கீட்டில் வருமான வரம்பைக் கொண்டுவந்தார். அது, சாதிரீதியாக நடந்த அநீதியைச் சரிசெய்ய சாதிரீதியான இடஒதுக்கீடு எனும் கோட்பாட்டைத் தகர்த்தது.

அதை எதிர்த்து கலைஞர் நடத்திய பெரும் இயக்கத்தால் அந்த ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வி கண்டது. சுதாரித்துக்கொண்ட எம்.ஜி.ஆர். 1980இல் வருமான வரம்பை நீக்கியதோடு, இடஒதுக்கீட்டின் அளவை 68% ஆக உயர்த்தினார். கலைஞர் நடத்திய சமூகநீதி இயக்கத்திற்கு கிடைத்த வெற்றி அது.

1989இல் மீண்டும் கலைஞர் முதல்வரானது தமிழ்நாடு பெற்ற பெரும் பேறு. அந்தக் காலத்தில்தான் கல்விப் பரவலுக்கான சில முக்கிய முன்னெடுப்புகள் நடந்தன.

இடஒதுக்கீடானது 69% ஆக உயர்த்தப்பட்டது மட்டுமல்லாது, மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும் எஸ்.டி. மக்களுக்கும் தனி ஒதுக்கீடு கிடைத்தது. பெண் கல்விக்கு ஊக்கம் தரும் இரு முக்கிய நடவடிக்கைகளும் இதே ஆண்டில்தான் நடந்தன.

இடஒதுக்கீட்டிற்குள்ளேயே பெண்களுக்கென 30% உள்ஒதுக்கீடு தரப்பட்டது. குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சமமான பங்கு கிடைக்க வழிவகை செய்யும் சட்டமும் வந்தது. பெண்ணுக்கு சுயேச்சையான வாழ்வு கிடையாது, சொத்துரிமை கிடையாது எனப் பல நூறு ஆண்டுகளாக நடப்பில் இருந்த மனுஅதர்ம சாஸ்திரத்தின் ஒரு கூறு அடித்து நொறுக்கப்பட்டது. பெண்களுக்கு இலவசப் பட்டப் படிப்பு, எட்டாம் வகுப்பிற்கு மேல் படித்த பெண்களின் திருமணச் செலவிற்கு உதவித் தொகை என மாதர் நலத் திட்டங்கள் பிறந்தன.

இத்தகைய நல்லாட்சி 1991இல் அநியாயமாகக் கலைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஜெயலலிதா முதல்வரானார். அவர் காலத்தில் 69% இடஒதுக்கீட்டிற்கு ஆபத்து வர, அதைத் தடுக்க அம்மையார் முயன்றார் என்றால் அதற்கு முக்கிய காரணம் கலைஞர் நடத்திய பேரியக்கம். எதிர்க்கட்சித் தலைவராயிருந்த கலைஞர் மட்டும் களம் காணாமல் இருந்திருந்தால் 69% இடஒதுக்கீட்டைக் காக்கும் முயற்சியில் அம்மையார் இறங்கியிருக்க மாட்டார்.

ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கல்விப் பரவலில், குறிப்பாகப் பெண் கல்வியில், அதற்கான சமூகநீதிக் கட்டமைப்பை உருவாக்குவதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார் கலைஞர். 1996இல் மீண்டும் முதல்வரானதும் விதவை மறுமண உதவித் திட்டம், சாதிமறுப்பு திருமண உதவித் திட்டம், ஏழைத் தாய்மார்களுக்கு பேறுகால உதவித் திட்டம் என வரிசையாகக் கொண்டுவந்தார்.

அனைத்திற்கும் மேலே பெண்களுக்கு 33% இடஒதுக்கீட்டுடன் உள்ளாட்சித் தேர்தலை நடத்தி அவர்களுக்கு அரசியல் அதிகாரமும் தந்தார். மாணவ-மாணவியருக்கு இலவசப் பேருந்து பயணத்திற்கும் வழி வகுத்தார். இவை எல்லாம் சேர்ந்துதான் 2011இல் கல்வியில், அதிலும் பெண் கல்வியில் ஒரு பெரும் பாய்ச்சல் நடந்தது.

உபநயனம் எனும் கல்வித் துவக்க சடங்கு பெண்ணுக்கு கிடையாது, கல்யாணமே அவளுக்கு உபநயனம் எனச் சொல்லி, சிறு வயதிலேயே அதை நடத்தி வைத்து அவர்களின் கல்விக் கண்ணைக் குருடாக்கும் வேலை பிராமண சமூகத்திலேயே நடந்தது. அதையே நல்ல வழக்கமென பிற உயர்சாதியினரும் நினைத்துக் கடைப்பிடித்தனர். உயர் சாதிகளிலேயே அந்த நிலை என்றால் பிற சாதிப் பெண்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? பெண்களைத் தற்குறிகளாக்கி, அவர்களை அடக்கியாண்டு வந்தார்கள்.

“பெண்டாட்டிதனை அடிமைப்படுத்த வேண்டிப் பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?” எனும் பாரதியின் கேள்வியில் அன்றைய வாழ்வின் கொடூரம் வெளிப்பட்டது. அந்த நிலை இன்று பெருமளவு மாறியிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் கலைஞரின் தொலைநோக்குடனான, அபாரமான சமூக நீதிச் செயல்பாடுகள். பெண் குலம் அழிந்தால் மானுடம் அழிந்துவிடும்; பெண்குலம் இருக்கும் வரை கலைஞரின் புகழ் இருக்கும்.

# காவிரிக் கரையிலிருந்து இந்தியாவின் வரலாறு!

தமிழ்நாட்டிற்கென்று வரலாறே எழுதப்படவில்லை. தமிழ்நாட்டினுடைய வரலாறு எழுதப்படாததற்குக் காரணம், தமிழ் மன்னர்கள் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்தவர்கள், அந்த மன்னர்களைப் போற்றவும், புகழவும் பாடல்களை இயற்றினார்களே அல்லாமல், வரலாற்றை எழுத வேண்டுமென்று யாரும் எண்ணவில்லை.

அதனால்தான், இந்திய நாட்டு வரலாற்றைப்பற்றி வின்சென்ட் சொல்லும் போது, “இந்திய நாட்டு வரலாறு காவிரிக்



கரையிலிருந்து எழுதப்பட்டிருக்க வேண்டும்; கங்கைக் கரையிலிருந்து எழுதப்பட்டது தவறு” என்று குறிப்பிட்டார். அதனையே மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களும் எடுத்துச் சொன்னார்.

அதையேதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உரையாற்றும்போது “ஆற்றோரம்” என்ற தலைப்பிலே உரையாற்றி, இந்திய நாட்டு வரலாறு காவிரிக் கரையிலிருந்து எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.

அந்த ஆதங்கம் என்னுடைய உள்ளத்திலே நீண்ட நாட்களாக இருந்த காரணத்தினால், அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு நான் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, டாக்டர் மு.வ. போன்ற பெருமக்களையெல்லாம் அழைத்து, தமிழகத்தின் வரலாற்றை நீங்கள் அனைவரும் சேர்ந்து, ஆய்ந்து, சிந்தித்து, தொகுத்து எழுத வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

- கலைஞர்

# உயர் கல்விக்குத் தந்தை, அவரே, கல்வியாளர்களுக்கு தாயானவர்!

அருளாளர் ஏற்றிய மலை விளக்கு

1997 ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாள் மாலை அந்தச் செய்தி அறிவிக்கப்பட்டது. 3.10.1997 ஆம் நாள் அதிகாலையில் சென்று இனமானப் பேராசியரை வணங்கி வாழ்த்துப் பெற்று விட்டு, புரசையில் வசிப்பவரும், நான் அடிக்கடி சென்று மதித்து வருபவருமான நாஞ்சிலாரை சந்திக்கச் சென்றேன். மணி காலை 7 இருக்கும். உடன் உள்ளே அழைத்தார். வணக்கம் அண்ணே, என்று விளித்தவாறே பொன்னாடையைப் பிரித்தேன்.

'என்ன?, இன்றைய முரசொலியில் கதாநாயகனா? வாழ்த்துகள்' என்றார். நான் சற்று குழம்பியவாறு, 'நான் வழக்கமாக 7 மணிக்கு 'முரசொலி' படிப்பேன், இன்று அதிகாலையிலேயே சென்று பேராசிரியரைப் பார்த்து விட்டு, இங்கு வந்து விட்டதால் இன்னும் 'முரசொலி' யைப் பார்க்கவில்லை' என்றேன்.

உடன் தமது சிறு மேசை மீதிருந்து முரசொலியைப் பிரித்து தலையங்கத்தைக் காட்டினார்.

படித்தேன், பார்த்தேன், மீண்டும் படித்துப் பார்த்தேன்…!

அவர் என்னை இந்த உயரத்தில் ஏற்றி வைத்தமை எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது, என்றாலும், அவர் என்னிடம் எத்தகைய சாதனைப் பணியை எதிர்பார்க்கிறார் என்பதை எண்ணிப்பார்த்து மலைத்தேன், உறுதி கொண்டேன், ஆம்; அந்தத் தலையங்கத்தின் தலைப்பு,

'குடத்திலிருப்போரை குன்றின் மேல் ஏற்றி வைத்தது!'

ஆம், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமனம் செய்த அறிவிப்பு, நேற்று மாலையிலிருந்து வெளி வந்து கொண்டிருந்தது.




### தாயாய் சாலப் பரிந்து

இந்தியாவின் எல்லா கல்வியாளர் பேரவைகளிலும் முதன்மையானதும், சிறப்பு வாய்ந்ததுமான இந்திய வரலாற்றுப் பேரவையின் ஆண்டு விழா, (1996 ஆம் ஆண்டு) சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறவிருந்த அப் பேரவையின் 23 ஆம் ஆண்டு விழாவைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்ற அழைக்கும் பொருட்டு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை, மாநாட்டு அழைப்பாளராய் நானும் சில மூத்த கல்வியாளர்களும் தலைமைச் செயலகத்தில் அவரது அறையில் சந்தித்தோம்.

'இந்திய வரலாற்றுப் பேரவை உலகளாவிய இந்திய வரலாற்றியல் அறிஞர்கள், அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்குவது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு பல்கலைக் கழகம் பொறுப்பேற்று ஆண்டு விழாவை நடத்தி பெருமைப் படுத்தி தாமும் பெருமை சேர்த்துகொள்ளும். அத்தகைய நிகழ்வு சென்னைப் பல்கலைக் கழகத்தில் இதற்கு முன்பு 1944 இல் நடைபெற்றது. எனவே இந்தியாவின் பழமையான ஒன்றும், தென்னிந்தியாவின் தாயாகவும் விளங்கும் சென்னைப் பல்கலைக் கழகம் இந்த ஆண்டு ஏற்று நடத்த முன் வந்துள்ளது. தாங்கள் தலைமையேற்று தொடங்கி வைத்து உரையாற்றி சிறப்பிக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டோம்.

'சரி. என்றைக்கு?' என்றார் அவர், நான் தேதியைக் குறிப்பிட்டேன், டிசம்பர் 27 அன்று.

'அன்று புதுக்கோட்டையில் ஒரு நிகழ்ச்சி, மறு நாள் மதுரையில் பட்டுராஜன் அவர்களின் இல்லத்தில் ஒரு நிகழ்ச்சி' என்றார் செயலர்.

தலைவர் என்னைப் பார்த்தார். சற்று யோசனையோடு 'அண்ணே, மிகவும் தயக்கத்துடன், (எந்த நிலையிலும் அவரை அப்படித்தான் அழைத்து வந்துள்ளேன்) இந்த அமைப்பின் சட்ட விதி முறைகள் சில சமரசம் செய்து கொள்ள இயலாதவை. எடுத்துக் காட்டாக, இந்த ஆண்டு விழாவிற்கான நாட்கள் எவை என்பது சென்ற ஆண்டு விழா செயற்குழுக் கூட்டத்திலேயே முடிவு செய்து விடுவார்கள்' என்றேன். அவர் எவ்விதத் தயக்கமும் இன்றி தம் செயலாளரைப் பார்த்துச் சொன்னார். 'புதுக்கோட்டை நிகழ்ச்சியை மறுநாள் காலையில் வைத்துக் கொண்டு பட்டு ராஜன் இல்ல நிகழ்ச்சியை அன்று மாலை வைத்துக் கொள்ளச் சொல்லுங்கள்' என்று கூறினார்.

பிறகு என்னைப் பார்த்து 'சரி, எத்தனை மணிக்கு?' என்றார்,

நான், 'பத்து மணிக்கு' என்றேன்.

'நாள் முழுக்க இருக்க வேண்டுமா?' என்றார்.

'மன்னிக்கணும் அண்ணே. இந்த அமைப்பின் தொடக்க விழா என்பது 1.45 மணி நேரம் மட்டுமே, ஏனென்றால் பங்கு பெறும் ஒவ்வொருவருக்குமான நேரம் முன்பே முழுமையாக வரையறை செய்யப்பட்டு விடும்' என்றேன்.

'அப்படி என்றால், எனக்கு எவ்வளவு நேரம்?'

(தாய் தன் குழந்தையிடம் கேட்பது போல் இருந்தது)

'மன்னிக்கணும் அண்ணே, தொடக்க உரைக்கு (உங்களுக்கு என குறிப்பிட்டு கூற வலிமையில்லை) அவர்கள் ஒதுக்கியிருப்பது 12 மணித்துளிகள்' என்று கூறிவிட்டு குறுகிப்போனேன். ஆனால் அந்தப் பேரருளாளர் 'சரி' என்று கூறி என்னைப் பார்த்து புன்னகைத்தார்.

அந்தப் புன்னகை என்ன? சுயமரியாதை இயக்கம் தனது பிள்ளைகளை எந்த அளவு ஆளுமையோடு வளர்த்துள்ளது என்றேன் நிறைவு காரணமாக.

வெளியே வந்த பின்னர் உடன் வந்த தலைவர்கள்



பேராசிரியர் ஜெகதீசன்
மேனாள் துணை வேந்தர்,
பாரதிதாசன் பல்கலைக் கழகம்

கேட்டனர், 'இவ்வளவு தர்மச்சங்கடமான செய்தியை எப்படி அவரிடம் துணிச்சலாகச் சொன்னீர்கள்?' என்று வியந்து கேட்டனர். நான் கூறினேன், 'அவரைத் தலைவராகச் சந்திக்கும் போதெல்லாம் அவரைப் பார்த்து மலைத்துப் போய் சிலையாவேன். ஆனால் இன்றோ அவரைத் தாயாகப் பார்த்தேன்' என்றேன்.

### விளக்கை கண்ட இடம்…விதம்….

1996 டிசம்பர் 27 ஆம் நாள் காலை சுமார் 9.30 மணிக்கு பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபம் மாநாட்டுப் பிரதிநிதிகள் நிரம்பி வழிந்தது.

மணி 9.40 மேடையில் குழுமியிருந்த பேரவைப் பொறுப்பாளர்கள் கேட்டார்கள். 'சி.எம். எப்போது வருவார்?' என்று. அப்போது என்னை நோக்கி வந்த காவல் துறை உயர் அதிகாரி கூறினார், 'சி.எம்.புறப்பட்டுவிட்டார்' என்று.

மணி 9.50, சி.எம்.கார் மண்டபத்தின் மேடையின் வலது புற வழியாக வந்து நின்றது. மரபுப்படி பேரவை பொறுப்பாளர்கள் அவரை ஊர்வலமாக அழைத்து வந்து மேடையில் அமர வைத்து தனித்தனியே மரியாதை செலுத்தி அமர்ந்தனர்.

மணி சரியாக 10.00, மாநாட்டு செயலாளரான நான் ஒலி பெருக்கியால் அறிவித்தேன். 'இப்போது, தமிழ்த் தாய் வாழ்த்து' என்று, எழுந்து நின்று இந்தியாவின் எல்லா தேசிய அறிஞர்களும் வியந்து மரியாதை செய்தனர்.

என்னுடைய வரவேற்புரையில் தலைவர் கலைஞர் அவர்களை வரலாற்று புலமையைப் பற்றியும், சுட்டிக் காட்ட அவருடைய ரோமாபுரி பாண்டியன், தென் பாண்டிச்சிங்கம், பொன்னர் சங்கர் போன்ற எழுத்தோவியங்களை எடுத்துக் காட்டினேன்.

அடுத்த நிகழ்ச்சி நிரல்படி பேரவை பொறுப்பாளர்கள் சிலர் உரையாற்றியதை அடுத்து, தலைவர் கலைஞர் அவர்கன் ஆங்கில உரை. 13 மணித்துளிகள் நிகழ்த்தப்பட்ட அந்த உரை மிக உயர்வான, அரிதான ஓர் ஆய்வுரை. மறு நாள் தமிழ்நாட்டின் எல்லா நாளிதழ்களும் முதன்மைச் செய்தியாக வெளியிட்டன. சில ஆங்கில, தமிழ் ஏடுகள் உரையை முழுமையாக நடுப்பக்கத்தில் வெளியிட்டுச் சிறப்பித்திருந்தன.

தலைவர் கலைஞர் அவர்களின் உரையை அடுத்து மாநாட்டுத் தலைவரின் உரை மணி 11.40க்கு முடிந்தது. நேரம் 11.45 தேசிய கீதம் இசைக்கப்பட்டு பேரவை பொறுப்பாளர்கள் அனைவரும் நான் உள்பட நன்றிப் பெருக்கோடு தலைவர் கலைஞரை வழி அனுப்பி வைத்தோம்.

மூன்றாம் நாள், நிறைவு விழாவிற்கு உரை நிகழ்த்த வந்திருந்த மரியாதைக்குரிய துரைமுருகன் அவர்கள் நிறைவு விழா உரையாற்றிவிட்டு மண்டபத்தின் வாசலில் தமது காரில் ஏறி அமர்ந்து, புறப்பட்ட காரை நிறுத்தி விட்டு, என்னை அருகில் அழைத்தார்.

'என்னய்யா, தலைவர் மூன்று நாட்களாய் உங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார், எவ்வளவு சிறப்பாக மாநாட்டை நடத்தினார். அது போன்ற மாநாட்டை எப்படி நடத்துவது என்று அதைப்பார்த்தால் தெரியும்' என்றார்.

ஒரு வேளை குடத்திலிருந்த விளக்கின் தகுதியை ஆற்றலை அங்கே தெரிந்து கொண்டார்.

### ஒளி சிறந்து பரவ

2006 இல் மீண்டும் தலைவர் ஆட்சி அமைந்தது. புதிதாக உருவாக்கப்பட்ட மாநில திட்டக் குழுவின் தலைவர் முதல்வர் அவர்களைப் பார்த்து வாழ்த்துப் பெற்று விடை பெறும் போது அரசுக்கு செலவின்றி புதிதாக பொறியியல் பல்கலைக் கழகங்கள் தொடங்க என்ற தலைப்பிட்டு ஒரு திட்ட அறிக்கையை தலைவரிடம் அளித்து விட்டு வந்தேன்.

அதில் கடந்த ஆட்சி, ஆங்காங்கே உள்ள பொதுப் பல்கலைக் கழகங்களின் கீழ் இயங்கி வந்த சுமார் 300 சுய நிதி பொறியியல் கல்லூரிகளை அண்ணா பல்கலைக் கழகத்தில் இணைத்தது. அதன் விளைவாக பல்கலைக் கழகம் தலைமை இடத்திற்கும் கல்லூரிகளுக்கும் உள்ள தொலைவுகள், மற்றும் கச்சிதத் தன்மையை வெகுவாக மீறிய எண்ணிக்கையில் நூற்றுக்கணக்கான கல்லூரிகள், இலட்சக்கணக்கான மாணவர்கள், அவர்கள் தொடர்பான அலுவலக மற்றும் தேர்வு அளவிலான தீர்க்க இயலா அளவிற்கு பிரச்சினைகளில் சிக்கித் தவித்தது. இதனால் அண்ணா பல்கலைக் கழகம் தமது உலகளாவிய தகுதியை கேள்விக்குறியாக்கி நாணி நின்றது.

அதற்கு தீர்வாக என் அறிக்கையில் சில யோசனைகளைக் கூறியிருந்தேன். அதாவது, பொது பல்கலைக் கழகத்தின் கீழ் இருந்த பொறியியல் கல்லூரிகளை பொறியியல் பல்கலைக் கழகத்தின் கீழ் இணைத்தமை நியாயமானதாக இருக்கலாம். ஆனால், அதன் பொருட்டு சீர்மிகு பல்கலைக் கழகம் உட்பட எல்லா கல்லூரி நிறுவனங்களும் பெரிய அளவில் தரம் இழக்க வாய்ப்பு ஏற்படலாம்.

எனவே அதன் காரணமாக திருச்சி, கோவை, நெல்லை போன்ற மையங்களில் அங்கே ஏற்கனவே உள்ள அரசு சார்ந்த ஒரு பொறியியல் கல்லூரியை பொறியியல் கல்லூரிகளை அதனுடன் இணைத்து நிர்வகிப்பதன் மூலம் நிர்வாகத்தில் வசதியும், தரமும் காக்கப்படும் என்று அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன்.

சில நாட்களிலேயே, நடந்து கொண்டிருந்த சட்ட மன்றக் கூட்டத்தில் திருச்சி, கோவை போன்ற மய்யங்களில் புதிய பொறியியல் பல்கலைக் கழகங்கள் தொடங்கப்படும் என்று முதல்வர் அவர்கள், அறிவித்தார்கள். ஆனால் ஒரு வியத்தகு மாற்றத்தோடு அதன் படி பெயர், சென்னையில், உள்ளதைப்போலவே மாறியது எல்லா மய்யத்திலும். அதாவது,

அண்ணா பல்கலைக் கழகம், திருச்சி,
அண்ணா பல்கலைக் கழகம், கோவை
என்பதாக. என்னே, மேதைத் தன்மை!
என்னே, தொலைநோக்கு!

ஆம், இது அவருக்கு இயல்பாய் அமைந்த ஓர் ஆற்றல், அது தேவைப்படும் போதெல்லாம் ஒளிரும், பரவும்.

### இலக்கு, உலகாக….

2010 ஒரு நாள் மாநிலத் திட்டக் குழுவின் முழுமையான கூட்டம், கல்வித் துறை பொறுப்பு உறுப்பினராக நான் சில கருத்துகளை எடுத்துரைத்தேன். தலைவர் உன்னிப்பாக கேட்டார்.

உயர் கல்வியில் மூன்று படிநிலைகள் உள்ளன. உயர்கல்விக்கான வாய்ப்பு என்பது, முதல் படி நிலை. அதில் நமது மாநிலம் பெரும்பாலும் நிறைவை அடைந்துவிட்டது என்றே கருதலாம்.

எனவே அடுத்த படிநிலையான தரம் வாய்ந்த உயர்கல்வியை அளிக்க நாம் திட்டமிடவேண்டிய கட்டம் இது. அது எதை நோக்கியதாக இருக்க வேண்டும் என்பதற்கு சில இலக்குகள் உள்ளன. எனவே அத்தகைய இலக்குகளை நோக்கி நமது கல்வியின் தரத் தகுதி உருவாக்கப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டாக சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் குறிப்பாக உயர்கல்வி பயிலும் மாணவர்களின் இலக்கு என்பது மாநில அளவிலான வேலை வாய்ப்புகளாக இருந்தது. அதுவே சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு தேசிய இலக்காக இருந்தது. ஆனால், தற்போது உயர் கல்வி பயிலும் கணிசமான அளவு மாணவர்களின் இலக்கு பன்னாட்டு நிறுவனங்களாகவும், பன்னாட்டில் அமைந்துள்ள நிறுவனங்களாகவும் இருக்கின்றன. எனவே அதன் படிக்கான தகுதியை கற்பிக்கும் அளவிலான கல்வியைத் திட்டமிட நாம் கடமைப்பட்டுள்ளோம்.

மூன்றாவது படி நிலை என்னும் படியான முதன்மை நிலையான தனித்தகுதி சிறக்க மிளிர்வதாகும், எடுத்துக் காட்டாக அமெரிக்க அய்க்கிய நாடுகளில் உள்ள Harvard, MIT., அவை பெங்களூருவில் உள்ள IIS ஆகியவைகளைப்போல் உச்ச சிறப்பு கல்வியை வழங்க திட்டமிடல் வேண்டும்.

பொதுவாக உயர்கல்விக்கான கருத்து தேவைகளைப் பெற ஆங்கில மொழிப்புலமை அடிப்படைக்குரிய தேவைகளில் ஒன்றாக உருவாகிவிட்டது. ஏனென்றால் அது வெறும் உலகளாவிய மொழி மட்டுமல்ல, மேலாக உலகின் எல்லா அறிவுத் தேவைக்குமான தலை சிறந்த ஒரு நூல் நிலைய மொழியாகும் என்றேன்.

தலைவர் உன்னிப்பாக கேட்டுவிட்டு அடுத்த நிகழ்ச்சிக்குச் செல்ல எழுந்து, அருகில் உள்ள ஓய்வறைக்குள் நுழைந்தார். அப்போது தலைமைச் செயலர் என் அருகில் வந்து,

'Professer, you have really brought but some very important points' என்றார்!



## அனைத்தும் மக்கள் பணமே!

மாநில அரசு செலவழித்தாலும், ஒன்றிய அரசு செலவழித்தாலும், இரண்டும் மக்கள் பணம்தான். அதை நானும் மறந்துவிடக் கூடாது, ஒன்றிய அரசிலே இருப்பவர்களும் மறந்துவிடக் கூடாது.

ஒன்றிய அரசிலே இருந்து பணம் கொடுக்கிறோம் என்று சொல்வார்களானால், மாநிலங்களிலேயிருந்து வசூலிக்கப் படுகின்ற வரிதான், ஒன்றிய அரசிடம் குவிந்து, அங்கிருந்து இங்கே வருகிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

அதைப் போல, மாநில அரசாகிய நாங்கள் செய்கிறோம் என்று சொல்கிற நேரத்தில், மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்ற வரிதான், எங்களிடமிருந்தும் உங்களுக்கு மீண்டும் பலன்களாகக் கிடைக்கின்றது என்பதை நானும் மறந்துவிடக் கூடாது; நீங்களும் மறந்துவிடக் கூடாது.


- கலைஞர்

# கலைஞரின் பகுத்தறிவு நோக்கு!

கலைஞரின் கருத்துகளும் அவர் பயன்படுத்திய மொழியின் அழகும் இளைஞர்களை பெரிதும் கவர்ந்தன. தந்தை பெரியார், அறிஞர் அண்ணாவிலிருந்து தமிழ் நாட்டிலும் தமிழ் பேசும் உலகிலும் பரவிய புதுத்தமிழ் நெறிகளின் மற்றொரு சக்தியாக கலைஞர் திகழ்ந்தார். இலங்கையில் பாடசாலை மாணவர்கள், சாதாரண இளைஞர்கள் மற்றும் பல்கலைக்கழகம் வரை இச் செல்வாக்கைக் காண முடிந்தது. எனது கல்பிட்டி பிரதேசமும் (புத்தளம் மாவட்டம்) விதிவிலக்கல்ல. ஏழாம், எட்டாம் ஆண்டுகளில் படிக்கும் போதே அண்ணாவும் கலைஞரும் எங்கள் உரையாடல்களில் கலந்து விட்டனர்.

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் உயர்தரம் படித்துக்கொண்டிருந்தபோது எங்கள் தமிழ் மொழி ஆசிரியர் சிவப்பிரகாசம் (அண்ணாமலை) எமக்குக் கிடைத்த அரிய தமிழறிஞர். திருக்குறள் பாடத்தின் போது நாம் பயன்படுத்திய திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு அப்பால் சென்று விளக்கங்கள் தருவார். வரதராசனார் கருத்துகளைக் கூறி தி.மு.க. பாணியில் பகுத்தறிவு விளக்கங்களையும் வழங்குவது வழக்கம். அதில் ஒரு கவர்ச்சி இருந்தது. தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் மீது ஏற்கனவே எங்களுக்கு ஈடுபாடு இருந்ததால் புதிய விளக்கங்களின் தேவையை நாம் உணர்ந்தோம்.

சில வருடங்களுக்குப் பின்னர் திருக்குறள் கலைஞர் உரை நூலைப் படித்தேன். (அதற்கு முன்னரே முரசொலியில் திருக்குறள் விளக்க உரைகள் எழுதத் தொடங்கி இருந்தார் என்றும் அறிகிறேன்). தற்கால சிந்தனைகள், பகுத்தறிவுக் கோட்பாடு என்பவற்றின் பின்னணியில் எழுதப்பட்ட உரை கலைஞருடையது.



பேராசிரியர்
**எம்.எஸ்.எம்.அனஸ்**
இலங்கை

அந்த எழுத்து முயற்சியில் கலைஞர் வரையறுத்துக்கொண்ட இரண்டு விடயங்கள் முக்கியமானவை. 1)உரையாசிரியருக்குரிய பொறுப்பு. 2)நவீன காலத்துக்கான கருத்துவிளக்கம். குறளுக்குப் பொருள் விளக்கம் தரும் போது பழம் மரபுகளுக்குள் இருந்து புதிய விளக்கங்களை எப்படிக் காண்பது என்பதற்கான வரைவிலக்கணத்தையும் கலைஞர் அந்த உரைகளில் தந்துள்ளார்.

“வள்ளுவர் வாழ்ந்த காலத்து நம்பிக்கைகள் பண்பாடுகள் அவை குறித்து அவரது பார்வை ஆகியவற்றுக்கு மாறுபடாமலும் வலிந்து என் கருத்து எதையும் திணிக்காமலும் குறளில் அவர் கையாண்டுள்ள சொல்லுக்கு உரையாசிரியர்கள் தந்திருப்பதை விட தமிழில் மற்றொரு பொருளும் இருக்கிறது என்ற உண்மை நிலையைக் கடைப்பிடித்து அவர் எண்ணி எழுதியது என்ன என்பதை அறிவதை மட்டுமே கவனத்தில் கொண்டு எனது அறிவுக்கு எட்டிய வரையில் இதைச் செய்துள்ளேன்”. கலைஞரின் இந்தக் கருத்து திருக்குறளுக்கு மட்டுமன்றி மறை நூல்கள் எதற்கும் பொருள் வழங்கலில் கடைப்பிடிக்கத் தகுதியானதொரு அறிவு வழிகாட்டல் எனலாம்.

ஆக்கத்திறன் மிக்க கலைஞரின் உரைக்கு பேராசிரியர் மா.நன்னன், பதிப்புரையில் தந்திருக்கும் சில வரிகளை மட்டும் இங்கு நினைவுபடுத்தலாம். ஊழ்: கடவுள், ஆன்மா இரண்டு சொற்களுக்கு அப்பால் மக்களிடையே குழப்பம் தரும் மற்றொரு கருத்து ஊழ். ஊழ், விதி, தலை எழுத்து, கர்மா என்று சொல்லப்படும் இக் கற்பனைத் தத்துவம் குறித்து உரையாசிரியர் குழப்பம் தரும் உரைகளையே எழுதிச் சென்றார். பகுத்தறிவாளராகிய கலைஞர் ஊழ் எனும் அதிகாரத்திற்கு தெளிவானதொரு விளக்கத்தைத் தந்துள்ளார். அதனால் ஏற்படும் அச்சம், கவலை அனைத்துக்கும் தீர்வும் தந்துள்ளார்.

ஊழ் என்பதற்கு கலைஞர் இயற்கை நிலை என்று பொருள் தருகிறார். இயற்கை நிலை என்பது இயற்கை அமைந்திருக்கும் விதம். இயற்கை வலிமையானது, அதனை உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்பதே வள்ளுவரின் ஊழ் அதிகாரத்திற்கு கலைஞர் தரும் கருத்து. சமய, பௌராணிக மயக்கத்திலிருந்து ஊழிற்கு இயற்கை மற்றும் உலகியல் சார் விளக்கம் இது.

“ஊழிற் பெருவலி யாவுள” என்பதற்கு இயற்கை முறையை மாற்றி மற்றொரு செயற்கை நிலையை அமைத்திட முனைந்தாலும் என்பது கலைஞர் உரை. ஊழை விலக்க நினைத்தால் என்பது பரிமேலழகர் உரை.

பதின்ம வயதில் கலைஞரை நாம் மு. கருணாநிதி என்றுதான் அறிந்திருந்தோம். 1960 களின் ஆரம்ப காலம் பாடசாலைக் கல்வி வாசிப்பையும் கடந்து புதிய கருத்துகளையும் புரட்சிகரச் சிந்தனைகளையும் தேடிக் கற்க எம்மை விரட்டிய காலம் அது.

பாடசாலை பாடத்திட்டக் கல்வி முறைக்குள் நாம் சிறைப்படுத்தப்படவில்லை. பாடங்களும் போதனை வழங்கிய ஆசிரியர்களும் நவீன கருத்துக்களுக்கு எம்மை அழைத்துச் சென்றார்கள். அவற்றுள் அறிஞர் அண்ணா, கலைஞர் சிந்தனைகள் தி.மு.க. பகுத்தறிவு நிலைப்பாடு என்பன எம்மைப் பெரிதும் கவர்ந்தன.

தமிழ்ச் சிந்தனையிலும் பண்பாட்டிலும் ஏற்படுத்திய தாக்கம் எங்களை வலுவாகச் சிந்திக்க வைத்தது. தமிழ்நாடு, அதன் முக்கியத்துவம் அறிவின் எதிர்காலம் பற்றிய சிந்தனைகளுக்கு நாங்கள் ஆட்பட்டோம். தமிழ் பேசும் மக்களுக்கான கம்பீரம், பாதுகாப்பு என்பன அதன் பின்னணியில் இருப்பதாக இளைஞர்களிடையே ஒரு உணர்வு இருந்தது. பகுத்தறிவு, அரசியல் சமூக சிந்தனைகளின் முக்கியத்துவம் பற்றிய நிலையிலும் கவனிக்கத்தக்க விடயங்கள் தி.மு.க. பின்னணியில் ஒன்று கலந்திருந்ததை தமிழ் பேசும் இலங்கை மக்களும் நன்குணர்ந்திருந்தனர்.

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் கல்பிட்டி என்னும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் சிறிய பட்டினத்தின் தாக்கத்தில் இருந்துதான் இதைப் பேசுகிறேன். கொழும்பு, மலையகம், மட்டக்களப்பு என இலங்கையின் தமிழ் பேசும் மக்கள் வாழும் எல்லா இடங்களிலும் இந்தத் தாக்கங்கள் இருந்தன.

பாடசாலைக்கு வெளியே கல்வியும், சிந்தனையும் கொட்டிக் கிடப்பதை முதல் முறை எங்களால் உணர முடிந்தது. கொழும்பு ஊடாக தமிழ் நாட்டுப் புத்தகங்கள் இலகுவாக கல்பிட்டிக்கு வந்து சேர்ந்தன. முரசொலி வாசிப்பதற்கு என்றே இளைஞர்கள் காத்திருந்தனர். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர், நாவலர், ஈ.வி.கே.சம்பத் போன்றவர்களைக் கொண்ட பெயர்ப்பட்டியல் சாதாரண புழக்கத்தில் இருந்தது. அக்கால நிலவரப்படி காங்கிரஸ் தி.மு.க. அரசியல் பின்னணிகளை தமிழ் நாட்டில் நடக்கும் அரசியல் சிந்தனை மாற்றங்களை கல்பிட்டி இளைஞர்கள் நன்றாகவே அறிந்திருந்தனர்.

தி.மு.க.வின் முரசொலி வெளிவந்த காலத்திலேயே இலங்கைக்கும் அதுபோல் கல்பிட்டிக்கும் பரவத் தொடங்கி விட்டது. தி.மு.க. அரசியல் கருத்துகளை இலங்கை மக்களின் காலடிக்கே கொண்டு வந்துவிட்டது. முரசொலிக்காக இளைஞர்கள் காத்துக் கிடந்ததைப் பார்த்த அனுபவம் எனக்குண்டு. 1950-70 காலப்பகுதி வரை எமக்கு முந்திய இளைஞர் பரம்பரையினர் ஆர்வத்துடன் படித்த அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் புத்தகங்கள் இளைஞர்களிடையே பெரும் சுழற்சியில் இருந்தன. தி.மு.க. கொள்கைகளாலும் அண்ணா, கலைஞர் கருத்துகளாலும் கவரப்பட்டவர்களில் ஒருவரான கல்பிட்டியைச் சேர்ந்த மறைந்த கலைஞர் எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார் வீட்டில் மாத்திரம் சுமார் 20 நூல்கள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை மாணவர்களிடையே பரவலாக இப்புத்தகங்கள் வாசிப்பில் இருந்தன. அப்போது இவற்றுடன் கையடக்க நூல்களாக வெளிவந்த இங்கர்சால், அரிஸ்டாட்டில், எபிக்கூரஸ், வால்டேர் போன்ற அறிஞர்களின் நூல்களும் பாரதி, பாரதிதாசன் பாடல் தொகுதிகளும் இவற்றுள் அடக்கம்.

அறிஞர் அண்ணாவின் புராண மதங்கள், மாஜிக்கடவுள்கள், அண்ணாவின் அரசியல் பாதை போன்ற நூல்களும் எங்கள் வாசிப்பிற்குக் கிடைத்தன. தமிழ் மொழி பேசுவோர் வாழ்ந்த எல்லா மாவட்டங்களிலும் இந்தப் பாதிப்பு இருந்தது என்பதை கூறலாம். மலையகமும் கொழும்பும் இன்னும் முக்கியத்து வம் வாய்ந்ததாக இருந்திருக்க வேண்டும்.

இந்தக் காலத்தில்தான் (1956-ல்) ‘ராஜாராணி’ படம் திரைக்கு வருகிறது. அதில் இடம் பெற்ற கலைஞரின் சாக்ரடீஸ் திரை நாடகம் பெரியளவில் வெகுசன மட்டத்திற்கு இந்தக் கருத்துகளை கொண்டு சென்றது. அந்தக் காலத்தில் இலங்கை வானொலி தமிழ் சேவை மதிய வேளையில் ஒலிபரப்பி வந்த திரை வசனங்களில் சாக்ரடீஸ் மற்றும் அனார்கலி, சாம்ராட் அசோகன் திரை நாடகங்கள் அடிக்கடி ஒலிபரப்பாகி வந்தன. இக் காலத்தில் தான் ஆசிரியர் ஸக்காப் மௌலானா நாடகங்களை எமக்கு அறிமுகப்படுத்தத் தொடங்குகிறார். அவற்றுள் இரண்டு நாடகங்கள் மாணவர்களை மிகவும் கவர்ந்தன. ஒன்று சாக்ரடீஸ் திரை நாடகம் மற்றது பராசக்தி கோர்ட் சீன். நீண்ட காலமாக பாடசாலையின் மரபு நாடகங்கள் போல் மாணவர்களின் கவனத்தை இவை பெற்றிருந்தன.



இந்தப் பின்னணியிலிருந்து தான் “மெய்யியலின் பெருங் கனவு : சாக்ரடீஸ்” நூலை நான் எழுதினேன். கலைஞரின் சாக்ரடீஸ் திரை நாடகம் இதில் ஒரு அத்தியாயமாக இடம்பெற்றிருப்பதையும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பழைமை வாதம், மூட நம்பிக்கைகளுக்கு அப்பால் மக்களை அழைக்கும் புதிய கலை முயற்சிகளை கலைஞர் அறிமுகம் செய்தார். உயர் மட்ட அறிவு ஆய்வுகளை அலங்கரித்த சிந்தனைகளையும் கருத்துகளையும் இளைஞர்களினதும் பொது மக்களினதும் எளிமையான கலந்துரையாடல்களுக்கு கலைஞர் கொண்டு வந்தார். தந்தை பெரியாரிலிருந்து ஒரு பகுத்தறிவுப் பாரம்பரியத்தை நிலைநாட்டும் போராட்டத்தின் மைய நாயகனாக இறுதி வரை கலைஞர் பயணித்தார்.

## உரிமைக் குரல் எழுந்தது எப்போது?



**க**ல்வி, சமூக மாற்றத்திற்கு ஒரு கருவி என்ற வகையிலே தான் (Education is a tool for social change) ஒரு மேல்நாட்டு அறிஞன் குறிப்பிட்டான்.

இதே கருத்தைத்தான் வள்ளுவப் பெருந்தகை,

**“அறிவு அற்றம் காக்கும் கருவி
செருவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்”**

-என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் மக்கள் கல்வி வாய்ப்புகளை உரிய முறையில் பெற இயலாத சூழ்நிலை நிலவியது உண்மை. ஆனால், அந்தக் கல்வி வாய்ப்புகளைப் பெற்றிருந்தவர்கள், கல்லாதவர்களை அடக்கி ஒடுக்கித் தங்கள் ஆதிக்கத்திற்குக் கொண்டு வந்த வரலாறும் உண்மை. அந்தக் காலக் கட்டத்திலேதான் தமிழகத்தைப் பொறுத்தவரை, 1916ஆம் ஆண்டு வாக்கில், தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோற்றம் கொண்டது.

அந்தத் தோற்றத்திற்குப் பிறகுதான் எல்லோருக்கும் கல்வி வாய்ப்பு வேண்டும்; வேலை வாய்ப்பு வேண்டும் என்ற உரிமைக் குரல் விண்முட்ட எழுந்தது. அந்த உரிமைக் குரல்களின் முன்னோடிகளாக இருந்த திராவிட இயக்கத்தின் தலைவர்களை யாரும் மறந்துவிட முடியாது !

**- கலைஞர்**

# நான் வியந்த கலைஞரின் கல்விச் சாதனைகள்!

"நான் அண்ணா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக 1990 ஆம் ஆண்டு மே மாதம் பொறுப் பேற்றபோது கலைஞர் அவர்களைச் சந்தித்தேன். அப்போது பேராசிரியரும் உடனிருந்தார். என்னுடைய பின்பு லன்களையும் அனுபவங்களையும் கேட்டறிந்தார். நான் என்னுடைய தமிழ் மொழித் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். சுமார் 35 ஆண்டு களுக்குப்பின் தமிழகம் திரும்பிய என் தமிழ்த் திறமை குறை வாகவே இருந்தது.

கலைஞர் அவர்களின் 85ஆம் பிறந்தநாளையொட்டி 7.6.2008இல் பிட்டி தியாகராஜர் மண்டபத்தில் நடைபெற்ற கல்வியாளர்களின் நிகழ்ச்சியை நினைவுகூர விழைகின்றேன். அதில் நான், பேராசிரியர்கள் அவ்வை நடராஜன், பொன்னவைக்கோ, க.ப.அறவாணன், என்.இராமச்சந்திரன், திருவாசகம் ஆகியோர் பங்கேற்றோம்.

## முதலமைச்சர் காலம்

கலைஞர் ஐந்துமுறை முதலமைச்சராகப் பதவி வகித்தார். 10 பிப்ரவரி 1969 முதல் 5 ஜனவரி 1971 வரை 15 மார்ச் 1971 முதல் 31 ஜனவரி 1976 வரை 27 ஜனவரி 1989 முதல் 30 ஜனவரி 1991 வரை 13 மே 1996 முதல் 14 மே 2001 வரை 13 மே 2006 முதல் 14 மே 2011 வரை

## உயர்கல்வி வளர்ச்சி

கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் உயர்கல்வி பயின்ற மாணவ, மாணவியரின் தொகை கணிசமாக உயரவேண்டும், ஜி.ஈ.ஆர். அகில இந்தியச் சராசரி அளவை விடப் பெருமளவு அதிகரிக்கவேண்டும்.

புதிய தலைமுறையினர், சமூகத்தில் நலிவடைந்தோர் போன்றவர்கள் உயர்கல்வி வாய்ப்பு பெறவேண்டும் என்று அயராது உழைத்தார் அவர் முதலமைச்சராக இருந்த கால கட்டங்களில் தொடங்கப் பெற்ற பல்வேறு உயர்கல்வி நிறுவனங் கள் அவரது முயற்சிகளுக்குச் சான்றாக உள்ளன. அவற்றைப் பட்டியலிட்டுப் பார்ப்போம்.

## பல்கலைக்கழகங்கள்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் (1971), திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் (1990), மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்.

திருநெல்வேலி (1990), பெரியார் பல்கலைக்கழகம், சேலம் (1991), தமிழ் இணையக் கல்விக்கழகம்.சென்னை (1999), மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர் (2009)

## பொறியியல் கல்லூரி

தந்தை பெரியார் தொழில்நுட்பக் கல்லூரி, வேலூர், (1990) கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

அரசு கலைக் கல்லூரி, குளித்தலை (2009), அரசு கலைக் கல்லூரி, தவக்குடி (1969), அரசு மகளிர் கலைக்கல்லூரி, புதுக் கோட்டை (1969), அரசு கலைக்கல்லூரி, கும்பகோணம் (1969), திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை (1969),

## மருத்துவக் கல்லூரிகள்

மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, சேலம் (1990), கி.ஆ.பெ. விசுவநாதன் அரசு மருத்துவக் கல்லூரி, திருச்சி, (1997), அரசு மருத்துவக் கல்லூரி, தேனி (2006), அரசு மருத்துவக் கல்லூரி, தர்மபுரி, (2008), அரசு மருத்துவக் கல் லூரி, விழுப்புரம், (2010)

## கலைஞரின் சமூகநீதி பணிகள்

தமிழ்நாட்டின் கல்வி நிறுவனங்களில் 69 விழுக்காடு இட ஒதுக்கீடு உறுதிசெய்தார். கிராமப்புற மாணவர்களுக்குப் பொறி யியல் கல்லூரிகளில் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு அளித்தார். முதல் தலைமுறை மாணவ மாணவிகளுக்குக் கட்டணமில் லாத உயர்கல்வி தரப்பட்டது. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டணமில்லாத இளநிலை பட்டப் படிப்பு தரப்பட்டது. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பெண் களுக்குக் கட்டணமில்லாத முதுநிலை பட்டப் படிப்பு தரப்பட்டது.

2006-2011 காலகட்டத்தில் பள்ளிகளில் பெண்களுக்கு விடு திகள் கட்டியதின் மூலம் இடைநிற்றல் கணிசமாகக் குறைந்தது. மாற்றுத் திறனாளிகளுக்காகக் கல்வி நிலையங்களில் சாய்தளம் (Ramp)கட்ட அரசாணை பிறப்பித்தார். பேருந்துகளில் பள்ளி மற்றும் இட ஒதுக்கீடு மாணவ மாணவிகளுக்கு இலவசப் பயணச்சீட்டு தரப்பட்டது

தாழ்த்தப்பட்ட/பழங்குடி/பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத் தப்பட்ட மாணவ மாணவிகளின் கல்வி உதவித்தொகை இரட் டிப்பாக்கப்பட்டது. பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவசக் கணினிப் பயிற்சித் திட்டம் வகுக்கப்பட்டது. சமூக நலத்திட்டங் களை நிறைவேற்றியதில் அவரின் சாதனை அளப்பரியது. சான்றாக, கைரிக்சா ஒழிப்புத் திட்டம், பிச்சைக்காரர்கள் மறு வாழ்வுத் திட்டம், எல்லா மாவட்டங்களிலும் அரசு மருத்துவ மனைகள்.கலை அறிவியல் கல்லூரிகள் பல பல்கலைக் கழகங் கள் எனப் பல திட்டங்களை நடைமுறை படுத்தியவர்.

இட ஒதுக்கீடு கொள்கையை நடைமுறைப்படுத்தி, 30 விழுக் காடு பிற்படுத்தப்பட்டோருக்கும்.என் 20 விழுக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும். 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கும் அளித்தார்.

3 விழுக்காடு அருந்ததியருக்கும். 3.5 விழுக்காடு இஸ்லாமி யருக்கும்.

1 விழுக்காடு மலைவாழ் மக்களுக்கும் அளித்து அனைத்து சமூகத்திலும் அடித்தட்டு மக்கள் கல்வி வேலைவாய்ப்புகள் உறுதி செய்ததனால் மானுட மேம்பாட்டு குறியீட்டில் இந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது.

## கல்வி கற்க உறுதுணையாக

1. ஆண்டுதோறும் 21 இலட்சத்து 81 ஆயிரம் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இலவசப் பயணச் சலுகை வழங்கப் பட்டது.

2.ஆண்டுதோறும் ரூபாய் 58 கோடி செலவில் ஏழை மாணவ மாணவிகளுக்குச் சீருடை வழங்கப்பட்டது.

3. ஆண்டுதோறும் ரூபாய் 70 கோடி செலவில் மாணவ - மாணவிகளுக்கு இலவசப் பாடப்புத்தகம் வழங்கப்பட்டது.

4. உயர்நிலைப்பள்ளி முழுத்து மேல்நிலைப் பள்ளிக்காகத் தொலைதூரம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனைச் சரிசெய்ய 11 ஆம் வகுப்பு வரும் மாணவ மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கப்பட்டது.



5. ஈ.வெ.ரா. நாகம்மையார் மகளிர் கல்வித் திட்டம் பெயரில் அனைத்து ஏழை எளிய பெண்களுக்கும் பட்ட மேற்படிப்பு வரை கல்விக் கட்டணம் இல்லை என அறிவிக்கப்பட்டது.

6. பொறியியல் கல்வி பயிலவரும் ஆதிதிராவிட மாணவர்க் கும், குடும்பத்தில் முதல் பட்டப்படிப்பு படிக்கவரும் மாணவனுக் கும் பட்டப் படிப்புக் கல்விக்குக் கட்டணமில்லை என அறிவிப்பு.

7. கிராமப்புற மாணவர்கள் சென்னை வரவேண்டிய நிலைமையைமாற்றி அண்ணா பல்கலைக்கழகம் நான்காகப் பிரிக் கப்பட்டுக் கோவை, சென்னை, திருச்சி,மதுரை ஆகிய இடங்க ளில் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டன. ஆனால் தற்போது அரசு எல்லா மாணவர்களையும் சென்னைக்கு வரவைத்துக் கஷ்டப் படவைக்கிறது.

8.கல்வியின் வளர்ச்சிக்குத் தரமான கல்வி பயில அனைத்து மாணவ, மாணவிகளுக்கு சமச்சீர்க்கல்வி கிடைக்கப் பாடுபட்ட ஒரே தலைவர் தலைவர் கலைஞர்.

9. கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்கு பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்புகளில் 5% தனி இட ஒதுக்கீடு வழங்கினார்.

10. மாணவர்களுக்கு +2 வரை இலவசப் பேருந்துப் பயணச் சலுகை வழங்கினார். பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி முகாம் தொடங்கினார்.

11.கடல்சார் பல்கலைக்கழகம் அமைக்கச் செய்தார்.

12.நுழைவுத்தேர்வு ரத்துக்கு நிபுணர் குழு அமைத்தார்.

13.மருத்துவம், பொறியியல் கல்விக்கட்டணம் குறைக்கப் பட்டது.

14. பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களிலிருந்து வரும் 100 மாணவ, மாணவியர்களுக்கு இலவசத் தொழிற்கல்வி வழங் கினார்.

காமராசரால்தான் கல்விக் கண் திறக்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையை ஊருக்குச் சொல்ல வேண்டும் - உலகுக்குச் சொல்ல வேண்டுமென்று காமராசர் பிறந்தநாளைக் கல்வி வளர்ச்சி நாள் என்று சட்டமாக்கினார். அப்போது கலைஞர் கூறியது : -

அப்படிக் கல்லூரிகளை ஆரம்பித்த அந்தக் காலத்திற்கு முன்பே, முதன்முதல் ஒரு கல்லூரி சென்னை மாநகரத்தில், அதிலும் பெண்களுக்காக ஒரு கல்லூரி இந்த இராணிமேரி கல்லூரி தொடங்கப்பட்டு, பெரும்புகழோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## நுழைவுத்தேர்வு ரத்து

பொறியியல் கல்லூரிகளில் சேரத் தேவையான நுழைவுத்தேர்வு ரத்து செய்யப்பட்டது. காரணம்: அதுவரை தமிழ் வழி கற்ற மாணவ மாணவிகளுக்கும், கிராமப்புற மாணவ மாணவிகளுக்கும் பொறியியல் கல்லூரிகள் எட்டாத கனிகளாக இருந்தன.

பொறியியல் கல்லூரிகளில் சேர ஒற்றைச் சாளர முறை கொண்டுவந்தார். அதனால் தகுதிக்கேற்பக் கல்லூரிகளும், துறைகளும் பெற முடிந்தது.

மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் 10 மற்றும் 12 ம் வகுப்புத் தேர்தலில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ மாணவிகளுக்கு இலவச உயர்கல்வி கிடைக்கச் செய்தார்.

## தகவல் தொழில்நுட்பத் துறை வளர்ச்சி

தகவல் தொழில்நுட்பத் துறை வேகமாக வளர்வது கண்டு 1997ல் கலைஞர் தகவல் தொழில்நுட்பக் கொள்கை உருவாக் கினார். அதற்காக ஒரு செயற்குழு அமைத்தார். அதில் நானும் இருந்தேன். தகவல் தொழில்நுட்பத் துறையில் பல அம்சங் களைச் செயல்படுத்தினார்.

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கொள்கை இந்தியா விலேயே 1997இல் தமிழ்நாட்டில் தான் கலைஞர் ஆட்சியில் அமலாக்கப்பட்டது. மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2001இல் தான் வந்தது.

1997இல் இத்துறையின் பங்கு 9037 கோடியாக இருந்தது. மென்பொருள் வளர்ச்சி வியக்கத்தக்கதாக இருந்தது. இதில் தமிழ் நாட்டின் பங்கு கணிசமானது. அப்போது தமிழ்நாட்டில் தலை சிறந்த பொறியியல் கல்லூரிகள், பயிற்சிபெற்ற மனிதவளம் மற்றும் நவீன கட்டமைப்பு வசதிகள் இருந்தன.

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கொள்கையின் முக்கிய அம்சங்களாவன:

துறைசார்ந்த வளர்ச்சியை ஊக்குவிப்பது.

ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பது.

பயிற்சி முறைகளை மேம்படுத்துவது.

தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் (சென்னை, கோவை, திருச்சி மதுரை) பழம்பயனாகத் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைத்தல்.

தனித்தன்மை வாய்ந்த தகவல் தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்கள் அமைத்தல்.

இந்தக் கொள்கையின் அடிப்படையில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைத் தமிழ்நாட்டுக்கு ஈர்க்க டைடல் பார்க் 2000 -இல் அமைக்கப்பட்டது. 12 லட்சம் சதுர அடி அளவிலான, ஆசியாவிலேயே மிகப்பெரிய இப்பூங்கா தமிழ்நாட்டுக்குக் கலைஞர் தந்த அரிய கருவூலம்.


மேலும் மின் ஆளுகை (e-Governance) மூலம் பொதுமக்களுக்கு அரசு சேவைகள் எளிதில், குறிப்பிட்ட காலத்தில் கிடைக்கச் செய்தார்.

1998 அக்டோபர் மாதம் 5ஆம் நாள் IT Task Force உருவாக்கினார். அதில் NASSCOM, TVS Electronics, TCSபோன்ற நிறு வனங்களும், முரசொலி மாறன், தலைமைச் செயலர் ஏ.பி. முத்துசாமி, ஐ.ஐ.டி பேரா. சி.ஆர். முத்துகிருஷ்ணன் போன்றவர்களும் இருந்தனர். நானும் இருந்தேன். இதன் உட் குழு என் தலைமையில் அமைக்கப்பட்டது. இதில் தமிழ் மென்பொருள் வளர்ச்சியடையத் தேவையான நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டன.

1998 செப்டம்பர் 4ஆம் தேதி இந்தியாவில் தலைசிறந்த தகவல், தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைவர்களை அழைத் துத் தமிழ் நாட்டில் அவர்களது முதலீடுகள் அதிகரிக்க என்ன செய்யவேண்டும் என்று கேட்டறிந்தார்.

## தமிழ் இணைய மாநாடு

1999 பிப்ரவரி 6,7இல் தமிழ் இணைய மாநாடு முரசொலி மாறன் அவர்களின் முழு ஆதரவோடு சென்னையில் நடை பெற்றது. 12 நாடுகளிலிருந்து தலைவர்களும், அறிஞர்களும் பங்கேற்றனர். அச்சமயம் தமிழ் எழுத்துக் குறியீடுகள் ஒப்புக் கொள்ளப்பட்டன. தமிழ்க் கணினி தட்டச்சு உருவாக்கப்பட்டது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் நிறுவ முடிவெடுக்கப்பட்டது. மூன்று பல்கலைக்கழகங்களில் தமிழ் மென்பொருள் இருக்கை கள் ஏற்படுத்த முடிவெடுக்கப்பட்டது. தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி உருவாக்கப்பட்டது. இவற்றுக்காக 5 கோடி நிதி



முனைவர் மு. ஆனந்தகிருட்டினன்
மேனாள் துணைவேந்தர்,
அண்ணா பல்கலைக்கழகம்

ஒதுக்கப்பட்டது. இணையத்தில் தமிழ் எளிதாக, தங்குதடையின் றிச் செயல்படும் நடைமுறைகளுக்கு இம்மாநாடு வழிவகுத்தது.

இதையடுத்து 2010 ஜீன் 24ஆம் தேதி உலகச் செம்மொழி மாநாட்டின் ஒரு அங்கமாகத் தமிழ் இணைய மாநாடு நடை பெற்றது. அப்போது கலைஞர் தமிழ் இலக்கியங்களை உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்க அறிவுறுத்தினார். தமிழில் பல்வேறு துறைகளுக்கான கலைக்களஞ்சியங்களை உருவாக்க வேண்டினார். Smart Class Room Project-க்கான விபரங்களைத் தயாரிக்க ஒரு குழு அமைத்தார்.

## கலைஞரின் மற்றொரு கனவு

மக்களின் நுண்மறிவு வளர்ச்சிக்காக உலகிலேயே தலை சிறந்த ஒரு நூலகம் உருவாக்க வேண்டுமென்று கலைஞர் கனவு கண்டார். அந்தக் கனவு நிறைவுற அண்ணா நூற்றாண்டு நூலகம் அமைத்தார். குளிர்சாதன வசதியோடு 3.75 லட்சம் சதுர அடி கொண்ட எட்டு மாடி கட்டடம், ஐந்து லட்சம் நூல்கள் கொண் டுள்ளது. பொதுமக்கள். கல்வியாளர்கள், மற்றும் தொழில் நிறு வனங்களைச் சார்ந்தவர்கள் பயன்படுத்துகின்றனர். பார்வை யற்றோர் பயனுக்காக Braille முறையைப் பயன்படுத்திப் பல நூல்கள் உள்ளன. குழந்தைகளுக்காக ஒரு பகுதி, நாளிதழ், வார, மாத இதழ்களுக்குத் தனிப் பகுதிகள் உள்ளன. தமிழ் மற்றும் ஆங்கில நூல்களுக்குத் தனி இடமும், ஏட்டுச்சுவடிகளுக் குத் தனி இடமும் உள்ளன.

பொதுமக்களுக்காக 150 இருக்கைகள் கொண்ட ஒரு அரங் கமும், 1100 பேர் அமரக்கூடிய மற்றொரு அரங்கமும் உள்ளன. மேலும் 800 பேர் அமரக்கூடிய ஒரு திறந்த வெளி அரங்கமும் உள்ளது. இல்லத்தில் படிக்க வசதியற்ற மாணவர்களுக்காகத் தனி வாசிப்பு இடம் உள்ளது.

சிறுவர்கள் பகுதி வியக்கத்தக்கவாறு அமைந்துள்ளது. பல்வேறு தேர்வுகள் எழுதுவோர்க்கு வசதியாகப் பல நூல்கள் தேர்ந்தெடுத்து வைக்கப்பட்டுள்ளன.

## மேலும் சில கருத்துகள்

கடந்த ஐம்பதாண்டுகளாகத் தமிழக வளர்ச்சியில் கலைஞ ரின் பங்கு அளவிடற்கரியது. அவரது எண்ணங்கள், எழுத்து கள், பேச்சுகள், செயல்கள் அனைத்தும் எப்போதும் தமிழ்நாட்டின் நன்மை குறித்தே உள்ளன.

அவர் அதிகாரத்தில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், தமிழர் களின் பிரச்சினைகளைப் பற்றியே சிந்திப்பவர். கலைஞர் தன் முடிவுகளைத் தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் அடிப் படையில் எடுப்பதில்லை. தமிழ்நாட்டு வரலாற்றில் தனது பேராற் றலாலும் பெரும்பணிகளாலும் அயராத உழைப்பினாலும் ஆற் றல் மிக்க படைப்புகளாலும் தனிமுத்திரை பதித்தவர் கலைஞர். 62 ஆண்டுகள் சட்டமன்றப் பணி, 50 ஆண்டுகள் கட்சியின் தலைவர் பணி, 5 முறை முதலமைச்சர் பணி, 13 முறை சட்ட மன்ற உறுப்பினராகத் தொடர்ந்த கலைஞரின் சாதனைகள் எண்ணிலடங்கா. பல்வேறு பணிகளுக்கிடையே அவர் எழுத் துப் பணியையும் விடவே இல்லை. நாடகம், திரைப்படம். இலக் கியம், ஊடகம், சின்னத்திரை, அரசியல்களம் என அவர் தொடாத துறையே இல்லை எனலாம்.

கல்வித் துறையில் சமூகநீதி சார்ந்த கருத்தாக்கங்கள் இன்று தமிழகத்தில் வலிமை பெற்றுத் திகழ்வதற்குக் கலைஞரின் பங்களிப்பே முதன்மையானது.

இட ஒதுக்கீட்டிற்காகப் போராடியதும் கலைஞர்தான். பிற்படுத் தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு பெற்றுத் தந்ததும் கலைஞர்தான். இன்று அரசுத் துறைகளில் வேலைவாய்ப்புகள் குறைந்துவரும் வேளையில் தனியார் துறைகளிலும் இட ஒதுக்கீடு வேண்டிய சமூகநீதியின் அர்த்தத்தை விரிவுபடுத்தியிருப்பவரும் கலைஞர் தான்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் அவர் களுக்குத் துயரம் விளைந்தால் அவர்களுக்காக முன் நின்று குரல் கொடுப்பதும் கலைஞர்தான். அது தேர்தல் ஆதாயங்களுக் காக அவ்வப்போது கொடுக்கிறகுரல் அல்ல. சிறுபான்மையினின் உரிமைகள் என்பது அவர் மனதில் ஆழத்தில் உறைந்திருக்கும் உணர்ச்சி. இன்று இவையெல்லாம் கல்வித் துறையில் ஆழ வேரூன்றி விட்டது.

அடித்தட்டு மக்களின் வாழ்க்கை உயரக் கலைஞர் செய்த பணிகள் எண்ணிலடங்காதவை. கைரிக்ஷா ஒழித்தது ஒரு சமூகப் புரட்சி என்றால் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தந்தது ஒரு தொடர்பியல் ஊடகப் புரட்சி. ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், உழவர் சந்தை, எளியவர் கள் ஒளிபெற இலவசக் கண்ணொளித் திட்டம், சமநீதி நிலவச் சமத்துவபுரங்கள். சத்துணவை உண்மையான ஊட்டச்சத் துள்ள உணவாக மாற்றியதும் கலைஞர்தான்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கலைஞர் ஆட்சிசெய்த காலங்களில் உருவாக்கப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள்தான் இன்றும் நமது மாநிலத்தின் அஸ்திவாரமாக இருக்கின்றன. பேருந்தே செல்லாத கிராமங்களுக்கெல்லாம் கான்கிரீட் சாலை களுடன் மினி பேருந்துகள் விடப்பட்டன என்றால் தமிழ்நாடு முழுக்கத் தங்க நாற்கரச் சாலைகளும், சென்னை நகரில் பிரம் மாண்டமான பாலங்களும், பறக்கும் ரயில்பாதைகளும் தமிழ கத்தை இந்தியாவின் மிகச்சிறந்த மாநிலங்களில் ஒன்றாக மாற்றியமைத்தன. இவையெல்லாம் கலைஞர் ஆட்சிக் காலத் தின் அழியாச் சுவடுகள்.

கலைஞர் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட "சமச்சீர் கல்வி" இன்று தமிழகத்தில் மிகப்பெரிய கல்விப் புரட்சியையே ஏற்படுத்தியிருக்கிறது. "பொதுநூலகத்துறை" கலைஞர் ஆட்சிக் காலத்திலேயே உயிர் பெற்றது. தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்ததன் மூலம் அதன் தொன்மத்தையும் வளத்தையும் கலைஞர் உலகிற்கு அறிவித்தார். அண்ணா நூற்றாண்டு நூலகம் தமிழகத்துக்குக் கலைஞர் ஆற்றிய எண்ணற்ற சாதனைகளின் அடையாளங்கள்.

கல்வித் துறைக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்றால் கல்வியாளர்களைப் பெருமைப்படுத்தப்பட வேண்டும் என்பதை ஆழ உணர்ந்தவர். கல்வியாளர்கள் அவரைக் காணச் செல்லும் போதெல்லாம், எழுந்து நின்று கைகூப்பி வரவேற்பார். சில நிமிடங்களுக்கு மேல் காக்க வைக்கமாட்டார்.

கல்வியாளர்களின் கருத்துக்களுக்கும் திட்டங்களுக்கும் முழுமதிப்பு தருவார். நான் பொறியியல் கல்லூரிகளுக்கு மாணவர் சேர்க்கைக்கு ஒற்றைச் சாளர முறை திட்டம் பற்றிக் கலந்தாய்வு செய்த போது எதிர்ப்புகள் கிளம்பின. ஆயினும் கலைஞர் முழு ஆதரவு அளித்தார்.

உயர்கல்வி, ஆரம்பத்தில் மாநிலப் பட்டியலில் இருந்தது. பிறகு இந்திராகாந்தி அம்மையார் அதைப் பொதுப்பட்டியலில் சேர்த்தார். தற்போது அதை முழுக்க மத்திய அரசின் அதிகாரத் துக்குள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1969-இல் மத்திய - மாநில உறவுகளை ஆய்வதற்கு நீதிபதி ராஜமன்னார் தலைமையில் குழு அமைத்து. அக்குழுவின் பரிந் துரைகளை ஏற்று 1973இல் மாநிலச் சுயாட்சித் தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் இயற்றினார். இந்தத் தீர்மானத்தை அன்றைய பிரதமர் இந்திராகாந்திக்கு அனுப்பி மாநில உரிமைகளுக்கு வித் திட்ட முதல் முதல்வர் கலைஞர் என்பது அவர் ஆற்றிய அரசியல் பணிகளில் முதன்மையானது என்று குறிப்பிடலாம். இன்று மாநிலங்களுக்கு உரிமைகள் வேண்டும் என்று ஆந்திரம் தொடங்கி தில்லி வரை முழக்கங்களைக் கேட்க முடிகிறது. இதற்கு முன்னோடி கலைஞர்தான்.

கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு ஆற்றிய அரும்பணி களில் கல்வி மற்றும் அறிவாற்றல் சார்ந்த ஒரு சில மட்டுமே இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வாய்ப்புக்கு நன்றி.

## நிறைவுரை

கலைஞர் அவர்களைப் பற்றி இக்கட்டுரையில் நான் நிகழ்ச்சியில் பேசியவற்றைக் கொண்டு ஓர் எள் மூக்கின் நுனியளவு நான் எனக்குத் தெரிந்தவரை தொட்டுக் காட்டியிருக் கிறேன். நூற்றாண்டுகள் களப்போரின் மாவீரன் கலைஞர், பல வெற்றிகளைக் குவித்தவர். தமிழ்நாடு எல்லா நிலையிலும் முதன்மை அடையச் செய்தவர், அவர் தம் உரை விளக்கங்கள், கட்டுரைகள், கவிதைகள், திரைக்கதை வசனங்கள்,புத்தகங்கள் இளையோருக்கு நல்ல சிந்தனைக்கு, செயல்பாடுகளுக்கு விருந் தாகவும், ஆய்வாளர்களுக்கு நல்ல கருப்பொருளாகவும் அமையட்டும் என்று உரைப்போமாக!

(கல்வியாளர்கள் புலமை வணக்கம் நூலிலிருந்து)